
சுவடி : 40
ஏடு : 10
மார்ச் 2017
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.
தொடர்புக்கு :
94448 04980
044-2625 2119
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*



# உத்தரப்பிரதேசச் சட்டமன்றத் தேர்தல் : எல்லாரும் படிக்க வேண்டிய பாடங்கள்



இந்தியத் துணைக்கண்டத்தில், 1947 முதலே மிகப்பெரிய மாநிலமாக விளங்குவது, உத்தரப் பிரதேசம்.

ஏற்கெனவே உத்தரகாண்ட் பகுதியின் காங் கிரசுப் பார்ப்பனத் தலைவர்கள் தான், 1967 வரை யில், உ.பி. மாநில முதல்வராகப் பொறுப்புக்கு வந்தனர். கடைசியாக உ.பி. முதல்வராக இருந்தவர் என்.டி. திவாரி.

உத்தரகாண்ட், உ.பி.யிலிருந்து, 1991 போராட் டத்துக்குப் பிறகு ஒரு தனி மாநிலமாகப் பிரிந்தது. அது மிகச்சிறிய மாநிலம். அங்கு பார்ப்பனர்கள் கணிசமான அளவில் உள்ளனர். மற்ற மேல்சாதிக் காரரும் அதிகம் பேர். பிற்படுத்தப்பட்டோரும் பட்டியல் வகுப்பினரும் மிகக் குறைவானவர்கள்.

ஆனால் உத்தரப்பிரதேசத்தில் பிற்படுத்தப்பட்டோர் அதிக எண்ணிக்கையி னர். பட்டியல் வகுப்பினர் 21% பேர்.

உ.பி. பிற்படுத்தப்பட்டோரில், 2000க்குப் பிறகு, மிகப் பிற்பட்டோர் என்கிற கஷ்யாப் போன்ற சாதியினர், உள்ளூர யாதவ், லோதி, கொய்ரி (அ) குஷ்வாகா, குர்மி முதலான - பணக்காரப் பிற்படுத்தப்பட்டோரை வெறுக்கத் தலைப்பட்டனர் என்பதை-அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை, மற்றும் மா.பெ.பொ.க. வினர் 7 பேரும் இடஒதுக்கீடு பரப்புரையை 30 நாள்கள் மேற்கு உ.பி. 30 மாவட்டங்களில் மேற்கொண்டபோது, நேரில் கண்டுணர்ந்தோம்.

2000ஆம் ஆண்டு தேர்தலில் பாரதிய சனதாக் கட்சி வெற்றி பெற்றிட - பாபர் மசூதி இடிப்பும், பிற்பட்டோர் - மிகப் பிற்பட்டோரிடையே இருந்த பகையும்; பட்டியல் வகுப்பினர் - பிற்படுத்தப்பட்டோரிடையே அப்போதிருந்தே நிலவிய உள்பகையும், உ.பி. முஸ்லிம்கள் இரு அணிகளாகப் பிரிந்து நின்ற நிலைமையும் பாரதிய சனதாவின் வெற்றிக்கு உதவின.

கன்ஷிராம் தலைமையிலிருந்த பகுஜன் சமாஜ் கட்சி உ.பி.யில் - இந்துக் களில் பெரும்பான்மையான பிற்படுத்தப்பட்டோரையும், 21% உள்ள பட்டியல் வகுப்புகளில் பெரும்பான்மையாக உள்ள ஜாடவ் (அ) சமார் என்கிற சக்கிலிய ரையும், பட்டியல் பழங்குடியினரையும் இணைப்பதில் ஓரளவு வெற்றி பெற்றது.

டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், 1948இல் விரும்பியபடி, ஒரு வலிமை வாய்ந்த "ஒடுக்கப்பட்டோர் கூட்டணி" அப்போது அமைந்தது. அதனால் பகுஜன் சமாஜ் கட்சியும், சமாஜ் வாதக்கட்சி என்கிற லோகியா சோசலிசக் கட்சிகளின் ஆட்சி - மாறி மாறி, 2002 முதல் 2016 வரை உ.பி.யில் ஆட்சி அமைக்கிற வாய்ப்பைப் பெற்றன.

இந்த இரண்டு கட்சிகளும் 2014 நாடாளுமன்றத் தேர்தலில் உ.பி.யில் அடியோடு தோற்றன.

பாரதிய சனதாக் கட்சி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியது.

அத்துடன் 2014, 2015, 2016ஆம் ஆண்டுகளில் பாரதிய சனதாக் கட்சி, உ.பி.யில் திட்டமிட்டு இந்துத் துவா கொள்கைகளையும் முசுலீம்கள் பேரில் இந்துக் களை ஏவிவிடும் கொள்கைகளையும் சிற்றூர் தொடங்கி, மாவட்ட ஆட்சி வரை பா.ச.க. இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ்., மகளிர் அணி, மாணவர் அணி ஆகிய இவற்றின் இந்துமத வெறிப் பரப்புரை மூலம் வலிமை யாகக் கட்டி வளர்த்தன.

சமாஜ்வாதக் கட்சி தந்தை-மகன், பெரியப்பன்-சிற்றப்பன் அணிகளாகப் பிரிந்து, அதைச் சிற்றூர் முதல் மாநில மட்டம் வரை வளர்த்தெடுத்தனர்.

"பகுஜன்" சமாஜ், "சர்வஜன்" சமாஜ் கட்சி ஆகி, பார்ப்பனர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், யாதவ், லோதிக்கு எதிரான பிற்படுத்தப்பட்ட சாதிகளையும், முசுலீம்களையும் இணைத்துக் கொள்வதில் நாட்டம் செலுத்தியது. பார்ப்பன வேட்பாளர்களையும், முசுலீம் வேட்பாளர்களையும் சம எண்ணிக்கையில் முறையே 80 + 80 = 160 வேட்பாளர்களைக் களத்தில் இறக்கியது. பார்ப்பனர், சத்திரியர், வைசியர் வாக்குகளையும் அவ்வகுப்பினரின் பணத்தையும் பெரிதாக நம்பியது.

**ஆனால், பார்ப்பனர், சத்திரியர் மற்றும் யாதவ் - லோதிக்கு எதிரான மிகப் பிற்பட்டோர் அணியினர் 2017 சட்டமன்றத் தேர்தலில் பாரதிய சனதாக் கட்சியின் பக்கம் சென்றுவிட்டனர். இது பாரதிய சனதாவுக்கு மிகப்பெரிய வலிமையாக அமைந்துவிட்டது.**

**இந்திய அரசியலில், காங்கிரசுக் கட்சியை 1966 முதல் கையாண்டவிதம்-உள்கட்சி மக்கள் நாயக முறைக்கு எதிரானது.**

அனைத்திந்திய காங்கிரசுத் தலைவர் மாநிலக் காங்கிரசுக் கமிட்டிகள், மாவட்டக் காங்கிரசுக் கமிட்டிகள் அனைத்துக்கும் நியமனம் மூலம் தலைவர், செய லாளர், பொருளாளர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மாறாக, அமர்த்தப்பட்ட பதவிகளாக மாறின. எந்த மாவட்ட - வட்ட மட்டத்திலும் உள்கட்சி சனநாயகம் இல்லை. அதனால் காங்கிரசுக் கட்சி (அ) கட்சிகள் வேர், சிற்றூர் அளவில் செத்துப் போயிற்று.

1969 ஆகத்தில் ஏற்பட்ட இந்திராகாந்தி-கருணாநிதி ஒப்பந்தம், தமிழகக் காங்கிரசைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டது. இனி தமிழகத்திலோ, இந்தியாவிலோ எந்த மட்டத்திலும் சோனியா காந்தி தலைமையில் உள்ள காங்கிரசால், வெற்றி பெற முடியாது.

**1967 வரையில், எதிர்க்கட்சி எதுவும் தலையெடுக்க முடியாமல் ஆட்சிபுரிந்த காங்கிரசு, 1969 முதலே சிற்றூர் கிளை முதல் மாநிலக் கிளைகள் வரையில் மக்கள் நாயக முறையில் கட்சியை வளர்த்திருக்க வேண்டிய காங்கிரசு - 1984 வரையிலுமோ, 1991 மே வரையிலுமோ, 1991 மே மாதத்திற்குப் பிறகு நெடுங் காலமான 2016 வரையிலுமோ அப்படிக் கட்சி அமைப்பு களைக் கட்ட முடியாத காங்கிரசு, இனி வானுக்கும் மண்ணுக்கும் எகிறினாலும் கடைத்தேற முடியாது.**

**இன்றைய உ.பி. சட்டமன்றத் தேர்தலில் காங்கிரசு கற்க வேண்டிய பாடம் இது.**

மேதை அம்பேத்கர் 1947 சொன்ன ஒரு அரசியல் கொள்கை என்ன?

"அரசதிகாரத்தைக் கைப்பற்றுவோம். உண்மையான ஒரே அரசு தில்லியிலுள்ள இந்திய அரசு. அரசதிகாரம் அதனிடம் தேங்கிக் கிடக்கிறது. இந்தியாவில் 85 விழுக் காடு மக்களாக உள்ள - 1) பிற்படுத்தப்பட்டோர், 2) பட்டியல் வகுப்பினர், 3) பழங்குடியினர், 4) மதச் சிறுபான்மையினர் இந்நான்கு வகுப்பினரும் ஒன்று சேர்ந்தால், அந்த அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும். இம்மக்களை இவர்களின் தலைவர்கள் ஒன்றுசேருங்கள்" என அறைகூவல் விடுத்தார்.

இது, கன்ஷிராமின் குறிக்கோளாக இருந்தது; ஆனால் மாயாவதியின் குறிக்கோளாக இல்லை.

இது முலாயம்சிங்கின் குறிக்கோளாக இருக்க முடியாது.

இந்த இரு அணியினரும் இனி தலைதூக்குவது கடினம்.

பீகார் நிலையும் அப்படியே. அங்கு குடும்ப வாரிசு அரசியல் தலைதூக்கிவிட்டது.

தமிழக நிலையும் அப்படியே. தமிழகம் பற்றித் தனியே எழுதுவோம். நிற்க.

உ.பி. தேர்தலுக்குப் பின்னர் :

1. உண்மையான மக்கள் நாயக அமைப்புகள் (Democratic Organisations or Parties).
2. ஊரறிந்த பொதுவுடைமைக் கட்சிகள் (Known Communist Parties).
3. இந்தியாவில் அரசை நிறுவ விரும்பும் மார்க்சிய - புலேயிய - அம்பேத்கரிய - லோகியா சிந்தனை யுள்ள அமைப்புகள்.

**இவர்கள் எல்லோரும் தீவிரமாகச் சிந்தித்து முடி வெடுத்துச் செயல்பட்டாலொழிய இந்திய உழைக்கும் மக்களுக்கு விடுதலை ஒருநாளும் வராது.**

இனி, பா.ச.க. பற்றி ஆர அமரச் சிந்திப்போம்.

1. 30.01.1948இல் காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அ) காந்தியார் பாக்கிஸ்தானுக்குத் தரவேண்டிய பங்குத் தொகையை இந்திய அரசு உடனே தரவேண்டும் என்றார்.

ஆ) சென்னை மாகாணப் பிரதமர் (Premier) ஓமாந்தூரார், முதன்முதலாகப் பிற்படுத்தப்பட்டோருக்குக் கல்வியிலும் வேலையிலும் 1947 நவம்பரில் தனி ஒதுக்கீடு அளித்தார். பெரியார் கோரியதன் பேரில், ஓமந்தூரார் செய்தார்.

அதை காந்தியார் ஆதரித்தார். தமிழ்நாட்டுப் பார்ப்பனரை நேரில் அழைத்துக் கடிந்து கொண்டார்.

இனி காந்தியார் இருப்பது நமக்கு ஆபத்து என்று தமிழ்நாட்டுப் பார்ப்பனர் நினைத்தான்.

தமிழ்நாட்டுப் பார்ப்பனர் நினைத்ததை கோட்சே செய்து முடித்தான்.

ஆர்.எஸ்.எஸ்.காரர்கள், 1948 பிப்ரவரியில், பூனாவில் இரகசியமாகக் கூடிப் பேசி ஒரு முடிவெடுத்தார்கள்.

என்ன முடிவு அது?

"கி.பி.2000இல் இந்தியாவில் இராமராஜ்யம் அமைக்க வேண்டும். அதற்கு ஏற்ற ஒரே கருவி இந்திய அரசு. இந்த இந்திய அரசை 2000இல் ஆர்.எஸ்.எஸ். கைப்பற்ற வேண்டும்.

அதற்கு ஏற்ற வழி சமூகத்தின் எல்லாப் பிரிவுகளிலும் (all winggs) ஊடுருவ வேண்டும் என்று முடிவெடுத்தனர்.

2000இல் அரசு அமைந்தது - பாரதிசய சனதா கூட்டணி அரசு.

2014இல் ஆர்.எஸ்.எஸ். அரசு அமைந்தது, சுதந்தரமாக."

ஆர்.எஸ்.எஸ். எதற்காக 1925இல் அமைக்கப்பட்டதோ, அந்த இலக்கை 2014இல் அடைந்துவிட்டது.

அதற்கு நல்ல ஊன்றுகோலாக - கைத்தடியாக, 11.3.2017 உ.பி. சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் அமைந்துவிட்டன.

அம்முடிவுகள் யாவை?

உ.பி. சட்டமன்ற மொத்த இடங்கள் 403.

கட்சிவாரி வெற்றி பெற்ற இடங்கள் :

| | | |
|---|---|---|
| 1. | பாரதிய சனதாக் கூட்டணி (312+13) | 325 |
| 2. | சமாஜ்வாதி + காங்கிரசு | 54 |
| 3. | பகுஜன் சமாஜ் (எ) சர்வஜன் சமாஜ் | 19 |
| 4. | மற்ற கட்சிகள் | 5 |
| | | ---- |
| | மொத்தம் | 403 |
| | | ---- |

இவ்வளவு பெரிய அளவில் வாக்குகளை அள்ளிக் குவிக்க எப்படி முடிந்தது?

அமித் ஷா பா.ச.க.வின் தேசியத் தலைவர்.

அவர் ஓராண்டுக்கு முன்னரே உ.பி.யில் ஒரு வாக்குச்சாவடிக்கு (Booth) 10 முதல் 21 பேர்கள் வீதம் வாக்குச் சேகரிப்போரை அமர்த்திவிட்டார்.

உ.பி.யில் மொத்த வாக்குச்சாவடிகள் 1,47,401 ஆகும். இவற்றில் வாக்குச் சேகரிக்க 13,50,000 ஆள்கள் அமர்த்தப்பட்டிருந்தனர்.

அதனால்தான் உ.பி.யில் பதிவான மொத்த வாக்குகளில், பாரதிய சனதா கூட்டணி 41.4 விழுக்காடு வாக்குகளை வாரிக்குவிக்க முடிந்தது.

இவ்வளவு பெரிய பட்டாளத்துக்கு எத்தனை ஆயிரம் கோடி ரூபா செலவாயிற்றோ!

மோடிக்கும், ஷாவுக்கும் தான் அது தெரியும்!

இதற்கு மேலும் வலுச்சேர்த்தது, உத்தரகாண்ட் தேர்தல்.

உத்தரகாண்ட் சட்டமன்ற மொத்த இடங்கள் 70

கட்சிவாரி வெற்றி பெற்ற இடங்கள்

| | | |
|---|---|---|
| 1. | பாரதிய சனதா | 57 |
| 2. | காங்கிரசு | 11 |
| 3. | சுயேச்சைகள் | 2 |
| | | --- |
| | மொத்தம் | 70 |
| | | --- |

சென்னை மாகாணச் சட்டமன்றத் தேர்தலில் - 1952இல் மொத்த இடங்கள் 375.

| | | |
|---|---|---|
| 1. | காங்கிரசு | 150 |
| 2. | கம்யூனிஸ்டுக் கட்சி | 69 |
| 3. | தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி | 19 |
| 4. | மற்ற கட்சிகள் | 137 |

ஆனால் சி. இராசகோபாலாச்சாரியார், காங்கிரசு முதலமைச்சர் ஆனார்.

இது மாகாண முறைஅரசில் இருந்ததில்லை.

I. 26.12.1925இல் தோற்றுவிக்கப்பட்ட இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் 2017ஆம் ஆண்டைய நிலை என்ன?

II. 26.12.1926இல் தோற்றுவிக்கப்பட்ட சுயமரியாதை இயக்கம், இந்திய அரசில், 2017இல் - எந்த வடிவத்தில், என்ன நிலை பெற்றுள்ளது? ஏன் அந்நிலை?

**எல்லோரும் இவற்றுக்கு விடை காணுவோம், வாருங்கள்!**

**12.3.2017** **- வே. ஆனைமுத்து**

# 10 வயது முசுலீம் பெண்ணை, உறவினரே கொன்று பலிகொடுத்தார்! இந்துக்களைப் போலவே, பேயை ஓட்ட இஸ்லாமியர் பெண்ணைக் கொன்றனர்!

கர்நாடகாவில் பெங்களூரை அடுத்த ஹோசஹள்ளி என்ற நகரின் எல்லையில், காவல் துறையினர் உயிர்ப் பலி கொடுக்கப்பட்ட 10 வயதுள்ள ஆயிஷா என்கிற பெண்ணின் உடலைக் கைப்பற்றினர்.

இந்தப் பெண்ணைக் கொன்று பலி கொடுத்ததற்காக, பெண்ணின் சிற்றப்பா முகமது வாஸில் என்பவர் உள்ளிட்ட நான்கு பேர்களை ராம்நகர் மாவட்டக் காவல் துறையினர் கைது செய்தனர். வாஸில் உள்ளூர் மசூதியினுடைய செயலாளராக உள்ளார். மேலும் ரதீஷுன்னிசா (38), நசீம்தாஜ் (33), ஒரு வேலையற்ற இளைஞன் ஆகிய 3 பேரையும் கைது செய்தனர்.

அவர்கள் நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த ஆயிஷா என்கிற பெண்ணைக் கடத்தி, 1.3.2017 இல் கொலை செய்ததாகக் குற்றஞ்சாற்றப்பட்டனர். ஆயிஷாவின் உடலை 3.3.2017 அன்று மாகதி நிலையத்தைச் சார்ந்த காவலர்கள் கைப்பற்றினர்.

**எதற்காக உயிர்ப்பலி?**

நசீம்தாஜ் என்கிற சூனியக்காரி, ஆலோசனை சொன்னதின் பேரில், வாஸில் தன்னுடைய சகோதரன் முகமது ரஃபிக் பக்கவாத நோய்க்கு ஆளாகியிருப்பவரை மீட்க, ஒரு குமரிப்பெண் பலிகொடுக்கப்பட வேண்டுமென்று ஆலோசனை சொன்னார். ரஃபிக் என்பவருக்குப் பேய் பிடித்திருப்பதால்தான், பக்கவாத நோய்க்கு ஆளானார் என்றும் சூனியக்காரி சொன்னாள்.

வாஸில் குடியிருக்கும் பகுதியில் ஆயிஷா குடும்பமும் வாழ்கிறது. உடனே ஆயிஷாவின் நிழற்படம் ஒன்றை எடுத்து, அந்தச் சூனியக்காரிக்கு வாஸில் அனுப்பினார். சூரினயக்காரி அந்தப் பெண்ணை பலிகொடுத்தால் போதும் என்று அனுமதியும் தந்தாள்.

1.3.2017 புதன் அன்று, ஆயிஷா தன் தகப்பனாரின் கடையிலிருந்து வீட்டுக்கு வந்தபோது, வழி மறித்து வாஸிலும், வேலையற்ற ஒரு சிறுவனும் மறைவான இடத்துக்கு அவளைக் கடத்திக் கொண்டு போய் பிளாஸ்டிக் கயிற்றினாலும், ஒரு கைக்குட்டைத் துணியாலும் அப்பெண்ணின் கழுத்தை நெரித்துக் கொன்று விட்டனர். அந்த வேலையற்ற இளைஞன்தான் ஆயிஷாவை உயிரோடு கடைசியாகப் பார்த்தவன்.

வாஸில் யார் யாருக்கெல்லாம் தொலைப்பேசியில் பேசினார் என்பதைச் சாட்சியமாக வைத்து, காவலர் விசாரணை செய்தனர்.

வாஸில், ஆயிஷாவை ஹோசஹள்ளியில் உள்ள ஒரு புதைகுழிக்கு (Tomb) அழைத்துச் சென்று, சில சடங்குகளைச் செய்தான்; ஆயிஷாவின் கழுத்தைக் கத்தியால் அறுத்தான்.

ஆயிஷாவின் உடலை ஒரு சாக்குப் பையில் கட்டி, சிறிது தொலைவில் வீசினான்.

மகளைக் காணோம் என்று அங்கும் இங்கும் தேடிப் பெற்றோர் அலைந்தபோது, வாஸிலும் அவர்களுடன் சேர்ந்த தேடுவதுபோல் நடித்தான். பெற்றோர்கள் காவல் நிலையத்துக்குப் புகார் மனு கொடுக்கச் சென்றபோது, வாஸிலும் அவர்களுடன் சென்றான்.

உண்மையில் வாஸில் தான் கொலைகாரன் என்று தெரிந்தவுடன், அக்கம் பக்கத்துப் பொதுமக்கள் வாஸில் வீட்டுக்குள் புகுந்து பண்டங்களை அடித்து நொறுக்கினர்.

‘‘வாஸிலைக் கைது செய்’’ என்று கோரிப் பொது மக்கள் சாலை மறியலும் செய்தனர். காவலர்கள் பொது மக்களை அமைதிப்படுத்தினர்; தக்க நடவடிக்கை எடுப்போம் எனப் பொது மக்களுக்கு உறுதி தந்தனர்.

**இந்துக்கள் பேயை நம்புகிறார்கள்; சூனியக்காரிகள் சொல்கிறபடி சாமி சிலைகள் முன் மனித உயிரைப் பலி கொடுக்கிறார்கள்.**

**இஸ்லாமியர்களாக மதம் மாறிய பிறகும், இந்துக்களைப் போலவே அவர்களும் பேயை நம்புகிறார்கள்; சூனியக்காரியை நம்புகிறார்கள். அவளுடைய சம்மதத்தின் பேரில், ஏதும் அறியாத 10 அகவை ஆயிஷா என்கிற பெண்ணை ஒரு புதைகுழிக்கு முன் உயிர்ப் பலி கொடுத்துவிட்டார்கள்.**

**மத நம்பிக்கையும் மூடநம்பிக்கையும் சூனியமும் எல்லா மதங்களுக்கும் சொந்தம்.**

**6.3.2017** **- வே. ஆனைமுத்து**

# சீமைக்கருவேல மரக்காடுகளை வேரோடும், வேரடி மண்ணோடும் ஒழிப்போம்! ஏன்? ஏன்? ஏன்?

1950ஆம் ஆண்டு காங்கிரசு ஆட்சியின்போது, விறகிற்குப் பயன்படும் என்று கருதி வெளிநாட்டிலிருந்து சீமைக்கருவேல (Prosopis Juliflora) விதைகள் கொண்டுவரப்பட்டு இங்கே தூவப்பட்டன. இதன் விஷத்தன்மை பற்றி முழுதாய்த் தெரியாமல்....!

கடந்த 66 ஆண்டுகளில் இவை தமிழகம் முழுவதும் கிளை படர்ந்து, ஏறத்தாழ 25 சதவீத விளை நிலங்களை ஆக்கிரமித்துப் பாழ்ப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதை வேருடன் களையாவிட்டால் நிலத்தடி நீரும் நஞ்சாக மாறிவிடும்.

**சீமைக் கருவேல மரங்கள் :**

இந்த மரத்தினைப் பார்க்காத ஒரு தமிழன் தமிழ்நாட்டில் இருக்க முடியாது. தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் வளர்ந்துகொண்டு இருக்கிற ஒரு மரம். எந்த ஒரு வறண்ட நிலத்திலும் எந்தத் தட்ப வெப்பத்திலும் இது தழைத்து வளர்ந்து கொண்டு இருப்பதை நீங்கள் பார்த்து இருப்பீர்கள். சாலை ஓரங்களிலும், பல கிராமங்களின் வயல்வெளிகளிலும் இயல்பாக இருக்கக் கூடிய முள் மரம் இது. தமிழகத்தின் இன்றைய வறட்சியான நிலைக்கு இந்த மரங்கள்தான் காரணம் என்று உறுதியாகச் சொல்ல முடியும்.

இந்தக் கருவேல மரங்கள் எந்தவித வறட்சியிலும், கடும் கோடையிலும் நன்கு வளரக்கூடியவை. மழை பெய்யாமல் போனாலும், நிலத்தின் நீரே இல்லாமல் இருந்தாலும் இவை கவலைப்படாது. **ஏனெனில் ஒரு கருவேலமரம் தனது வேர்களை பூமியின் ஆழத்தில் நாற்பது அடி, அகலத்தில் நாற்பது அடி வரையில் அனுப்பி, மண்ணின் நீரை உறிஞ்சி, தன் இலைகளை வாடவிடாமல் பார்த்துக் கொள்கிறது.** இதனால் நிலத்தடி நீர் முற்றிலுமாக வற்றி அந்த பூமியே வறண்டுவிடுகிறது. இதன் கொடூரம் அத்துடன் நிறைவு பெறுவது இல்லை. ஒருவேளை நிலத்தில் நீரே கிடைக்கவில்லை என்றாலும், தன்னைச் சுற்றிலும் இருக்கும் காற்றில் இருக்கும் ஈரப்பதத்தையும் இம்மரம் உறிஞ்சிவிடுகிறது. காற்றில் ஈரப்பதம் இருந்தால்கூட, உறிஞ்சிவிடுகிற இம்மரம், மனிதர்களையும் விட்டு வைப்பதில்லை. தன்னைச் சுற்றி இருக்கிற மனிதர்களின் உடலில் இருக்கிற ஈரப்பசையையும், எண்ணெய்ப் பசையையும் கூட உறிஞ்சி விடுவதால், இந்த மரத்தின் அருகாமையில் வசிக்கிறவர்களின் உடல் தோல் வறண்டு போய்விடுகிறது.

**தமிழகத்தில் விருதுநகர், இராமநாதபுரம், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம் போன்ற மாவட்டங்களின் வறட்சிக்கு இந்த மரங்களே முக்கியக் காரணம் என்பது யாருக்கும் இதுவரை புரியவில்லை. ஆனால், இதை அறியாமல் தமிழ்மக்கள் இன்னும் புதிதாக இம்மரங்களை வளர்த்துப் பராமரிக்கிறார்கள். தங்கள் வீடுகளுக்கும், வயல்களுக்கும் வேலியாக இம்மரத்தை நட்டு வைக்கிறார்கள். வணிக ரீதியாகவும், இதை நம் தமிழ்நாட்டில் விறகிற்காக வளர்த்து வருகின்றனர். இது, பேராபத்தை இந்த மண்ணுக்குச் செய்கிறது என்பதை அவர்கள் அறியாது இருக்கிறார்கள்.**

இந்த மரத்தின் இலை, காய், விதை என எதுவுமே எந்த உயிரினத்துக்கும் பயன்படாது. முக்கியமான விஷயம் ஒன்றும் உள்ளது. ஆச்சரியமாக இருந்தாலும் உண்மை அதுதான். இந்த மரத்தில் கால்நடைகளைக் கட்டி வைத்து வளர்த்தால், அவை மலடாகிவிடும். அதாவது சினை பிடிக்காமலேயே போய்விடும். ஒரு வேளை மீறி, சினையாகி, கன்று ஈன்றாலுமே அது ஊனத்துடன்தான் பிறக்கும்.

ஒருபுறம் இதன் வேர் நிலத்தடி நீரை நச்சாக மாற்றிவிடுகிறது. மற்றொருபுறம் இதன் நிழலில் மற்ற உயிரினங்கள் வாழமுடியாத நிலை இருக்கிறது. இதன் பக்கத்தில் வேறு எந்தச் செடியும் வளராது. தவிர இம் மரத்தில் எந்தப் பறவை இனங்களும் கூடுகட்டுவதும் இல்லை. காரணம் என்னவென்றால், இந்த சீமைக் கருவேல மரங்கள், பிராணவாயுவை மிகக் குறைந்த அளவே உற்பத்தி செய்கிறது. ஆனால் கரியமில வாயுவை மிக அதிக அளவில் வெளியிடுவதால் சுற்றுப்புறக் காற்று மண்டலமே நச்சுத்தன்மையாக மாறிவிடுகிறது.

**நமது அண்டை மாநிலமான கேரளாவில் இந்த மரத்தைப் பற்றிய விழிப்புணர்வை வனத் துறையினர் மக்களிடம் ஏற்படுத்தியுள்ளனர். அதனால் கேரளாவில் இந்த மரத்தை ஓர் இடத்தில் கூடக் காண முடியாது. சில ஆண்டுகளுக்கு முன் ஒரு திட்டமிடலுடன் செயல்பட்டு இந்த மரத்தை அவர்கள் தேடித் தேடி அழித்திருக்கிறார்கள்; வெட்டிப் போட்டுக் கொளுத்திவிட்டு, சுற்றி நின்று கூத்தாடி இருக்கிறார்கள்.**

அதனால்தான் இன்று கேரளா நீர் வளத்தில் அபரிமிதமான நாடாக இருக்கிறது. அங்கே நீரானது தடை

யின்றிக் கிடைக்கிறது. இப்போதும் இந்த மரத்தை அவர்கள் எங்கேயாவது கண்டுவிட்டால், சாத்தானைக் கண்டுவிட்டதுபோல் அலறி, அதை வெட்டித் தீயிலிட்டுக் கொளுத்திவிட்டுத்தான் அப்பால் நகருகிறார்கள்.

**கேரளாவில் தொழிற்சாலைகளுக்கு விறகுக்கு என்ன செய்கிறார்கள் தெரியுமா?**

**நம் தமிழ்நாட்டிலிருந்துதான் கேரளாவுக்கு விறகு செல்கிறது. அவர்கள் தங்கள் ஆறுகளைப் பாதுகாக்க அதில் மண் அள்ள மாட்டார்கள். ஆனால் நம் ஆறுகளில் இருந்து மணல் அங்கே போகும். சீமைக் கருவேல மரங்களை முற்றிலும் அழித்துவிட்டார்கள். ஆனால் அவர்களின் விறகுத் தேவைகளுக்கு மரம் இங்கே இருந்து செல்லும். சீமைக் கருவையை அழித்துவிட்டால் நம் நாடும் கேரளா போல் நீரால் குளுமை பெறும்.**

**மரங்களை வளர்ப்பது எவ்வளவு அவசியமோ, அதைவிட, இந்த மரத்தில் ஒன்றையாவது வெட்டி அழிப்பது அதைவிட அவசியம். அமெரிக்கத் தாவரவியல் பூங்கா, வளர்க்கக் கூடாத நச்சு மரங்கள் என்று ஒரு தனிப்பட்டியலே வெளியிட்டி ருக்கிறது. அதில் முன்னணியில் இருப்பது இந்த சீமைக் கருவேல மரம் தான். அந்த மரத்தை வெட்டினால்தான் நம் மண்ணின் மாண்பைக் காப்பாற்ற முடியும் என்பதுதான் விஞ்ஞானிகள் நமக்குக் கொடுக்கும் செய்தி! ஆகவே கருவேல மரங்களை ஒழிப்போம்! நம் மண்ணின் மாண்பைக் காப்போம்!**

## இந்தியா முழுவதிலுமுள்ள செல்வத்தின் மதிப்பு : 6 டிரில்லியன் டாலர் (அ) 360 இலட்சம் கோடி டாலர். இந்தியா முழுவதிலுமுள்ள கோடானுபதிகள் (மில்லியனர்ஸ்):

1. மும்பையிலுள்ள செல்வத்தின் மதிப்பு - 820 இலட்சம் கோடி டாலர்.
   மும்பையிலுள்ள கோடானுபதிகள் 46,000 பேர். மும்பையிலுள்ள இலட்சம் கோடானுபதிகள் 28 பேர்.
2. தில்லியிலுள்ள செல்வத்தின் மதிப்பு - 450 இலட்சம் கோடி டாலர்.
   தில்லியிலுள்ள கோடானுபதிகள் 23,000 பேர். தில்லியிலுள்ள இலட்சம் கோடானுபதிகள் 18 பேர்.
3. பெங்களூரிலுள்ள செல்வத்தின் மதிப்பு - 320 இலட்சம் கோடி டாலர்.
   பெங்களூரிலுள்ள கோடானுபதிகள் 7,700 பேர். பெங்களூரிலுள்ள இலட்சம் கோடானுபதிகள் 8 பேர்.
4. கோல்கட்டாவிலுள்ள செல்வத்தின் மதிப்பு - 200 இலட்சம் கோடி டாலர்.
   கோல்கட்டாவிலுள்ள கோடானுபதிகள் 9,600 பேர். கோல்கட்டாவிலுள்ள இலட்சம் கோடானுபதிகள் 4 பேர்.
5. சென்னையிலுள்ள செல்வத்தின் மதிப்பு - 150 இலட்சம் கோடி டாலர்.
   சென்னையிலுள்ள கோடானுபதிகள் 6,600 பேர். சென்னையிலுள்ள இலட்சம் கோடானுபதிகள் 4 பேர்.
6. குர்குவானிலுள்ள செல்வத்தின் மதிப்பு - 110 இலட்சம் கோடி டாலர்.
   குர்குவானிலுள்ள கோடானுபதிகள் 4,000 பேர். குர்குவானிலுள்ள இலட்சம் கோடானுபதிகள் 2 பேர்.

(ஆதாரம் : "Hindusthan Times", New Delhi, 27.2.2017).

**இந்தியாவில், 2011 மக்கள் தொகைக் கணக்குப்படி, 126 கோடி மக்கள் இருக்கிறார்கள். இவர்களுள் பெரும் செல்வந்தர்கள், இவ்வளவு பேரே. இந்தியரில் சிலர் கோடானுபதிகள்; பலர் நடுத்தரம்; பாதிப் பேர் ஏழைகள்.**

**- ஆசிரியர்**

# மார்க்சு - பெரியார் - அம்பேத்கர் இயக்கங்கள் ஒன்றுபட்டுப் போராட வேண்டும்

- **தொ. எழில்நிலவன்,** களமருதூர்

**த**ந்தை பெரியாருக்கு ஒரு தத்துவம் இருந்தது; ஒரு இலட்சியம் இருந்தது; ஒரு சித்தாந்தத் தேடல் இருந்தது. பெரியாரின் சுயமரியாதை என்னும் தன்னுணர்வு, விடுதலை இயக்கங்களுக்கெல்லாம் அடிப்படையாக இருக்கிறது. இதையே மற்றொரு கோணத்தில் சொல்ல வேண்டுமானால், மார்க்சியத் தத்துவம் அதைத் தான் சொல்கிறது.

'இந்து' என்பதற்கு ஆர்.எஸ்.எஸ். கொடுத்த விளக்கம், பெரியார் கூறியதுபோல், ''பிராமணியம்'' என்பதுதான். எனவே இந்துத்துவா என்பது - வர்ணாசிரம தர்மத்தைக் கட்டிக் காப்பாற்றுகிற ஒரு கோட்பாடாகும்.

**இன்றைக்கு இந்தியாவின் வளர்ச்சிக்கு மிகப் பெரிய சவாலாக இருப்பது இந்துத்துவா கொள்கைதான்.**

**தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக் களுக்கும் இடையே நாம் எதிர்பார்க்கிற - ஒற்றுமை ஏன் இன்னும் உருவாக்க முடியவில்லை?**

**இந்த இரண்டு மக்களையும் சரியாக வழி நடத்தும் தலைவர்கள் இல்லை என்பதே உண்மை.**

கடவுள் மறுப்பு ஒப்புக்கொள்ள வேண்டிய கொள்கை தான். மதமறுப்பு ஒப்புக்கொள்ள வேண்டிய கொள்கை தான்.

ஆனால் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க என்ன வழி, மார்க்சு, பெரியார், அம்பேத்கர் இயக்கச் சிந்தனை களை மக்களிடையே கொண்டுசெல்ல இந்த மூன்று இயக்கங்களில் உள்ளவர்களும் இணைந்து செயல்பட வேண்டியது அவசியம். அத்தகைய வரலாற்றுத் தேவை இன்று உருவாகியுள்ளது.

பெரியார் இயக்கத்துக்கும், பொதுவுடைமை இயக் கத்துக்கும் உள்ள ஒற்றுமை - ஒன்றுபட்ட போராட்டம். இவற்றை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**இதை இந்திய அளவில் விரிவாக்கிப் பார்க்கும் போது, மார்க்ஸ், பெரியார், அம்பேத்கர் என்ற இந்த மூன்று சிந்தனையாளர்கள் இந்தியாவுக்கு மாபெரும் வழிகாட்டிகள். இவர்களைப் பின்பற்றுவோரிடையே ஒரு ஒற்றுமையை உருவாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.**

தமிழ்நாட்டுக்கு ஒரு புகழ்மிக்க நீண்ட பாரம்பரியம் இருக்கிறது. இந்தப் புகழ்மிக்க பாரம்பரியத்தை அடுத் தக்கட்டத்துக்கு நாம் எப்படி எடுத்துச்செல்லப் போகிறோம்? இதற்கு விடை தேட வேண்டுமானால், மார்க்சு, பெரியார், அம்பேத்கர் இம்மூவருக்கு இடையேயான தத்துவத்தை - அரசியல் உறவுகள் பற்றிய கருத்தை நாம் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். இவர்களைப் பின்பற்றுகிறவர்கள் யாராக இருந்தாலும், ஒன்றுபட்ட இயக்கமாகச் செயல்பட வேண்டும்.

**அந்த ஒற்றுமை-அந்த ஒன்றுபட்ட இயக்கம் தான் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக் கும் அடிப்படை மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான ஆதாரமாக அமையப் போகிறது.**

இந்த மூன்று இயக்கங்களைக் கொண்ட தோழர் கள் மனம்விட்டுத் தங்கள் கருத்துகளைப் பற்றிப் பேசி, அன்றாட அரசியலுக்கு அப்பாற்பட்ட இயக்கமாகச் செயல்பட முன்வர வேண்டும்.

இவர்கள் சிதறுண்டு கிடப்பதால்-மற்றவர்கள் மக்களை எளிதாகக் கையாள்கிறார்கள். இந்தியத் துணைக்கண்டத்தின் விடுதலைப் போராட்டத்தின் போது, நாடு விடுதலைக்கு முன்னுரிமை கொடுக்காமல், தலித் மக்களின் உரிமைகளுக்கு முன்னுரிமை கொடுத் தார், அண்ணல் அம்பேத்கர்.

அதுபோலவே, தந்தை பெரியார் அவர்கள் காங்கிர சிலிருந்து விலகி, சுயமரியாதை இயக்கம் கண்டார். ஏன்? நாட்டுக்கு விடுதலை கூடாது என்பதல்ல, அது. வருணா சிரமவாதிகளுக்கான விடுதலையாக இருக்கக் கூடாது என்பதற்காகவேயாகும்.

**பொதுவுடைமை வேறு, பொது உரிமை வேறு. பொது வுடைமை என்பது சமபங்கு என்பதாகும்; பொதுவுரிமை என்பது சம அனுபவம் என்பதாகும். பொது உரிமை இல்லாத நாட்டில் ஏற்படும் பொதுவுடைமை, மறுபடியும் அதிக உரிமை இருக்கிறவனிடம்தான் போய்ச் சேர்ந்து கொண்டேயிருக்கும் என்பது பொதுவுடைமைத் தத்து வத்திற்குப் பாலபாடம் என்றார், பெரியார்.**

கடந்த காலத்தில் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி யைச் சேர்ந்த தா. பாண்டியன், ஒரு கட்டுரையில் கூறியுள்ளதைப் பார்ப்போம்.

''இந்தியாவில் உழைக்கும் பகுதியினர்தாம் - உற்பத்தி யாளர்கள், தாழ்த்தப்பட்டோராய்ச் சாதிகளின் கீழ்நிலையோர மாய் தள்ளிவைக்கப்பட்டுள்ளனர். வர்க்கப் போராட்டம் விரிவான சமுதாயப் பிரச்சனைக்கும் தீர்வு காணத்தக்க பரிமாணத்தை இங்கு எடுத்தாக வேண்டும்!''

இந்தியாவின் சாதி மத சாபத்தீட்டைப் போக்க, ஆழமாகச் சிந்தித்து, புரட்சிகர இயக்கங்கள் வழிகாட்ட வேண்டும். நாம் அதிலிருந்து விடுபட்டிருக்கிறோம் என்ற மன நிறைவில் திருப்தி கொள்ளாமல், நம்மைச் சுற்றியுள்ள பகுதியை மண்டிக் கவிழ்ந்திருக்கும் முட்செடிகளை அகற்ற வழிகண்டு தீர்மா னமாகப் போராட வேண்டும். இதற்காகச் சிந்தியுங்கள்; விடுதலையை நோக்கி முன்னேறலாம். (''சனசக்தி சுதந்தர தினமலர்'', 1980 - பக்கம் 12).

தமிழகத்தைப் பொறுத்தவரையில், தி.க.; தி.வி.க. மா.பெ.பொ.க.; த.பெ.தி.க. ஆகிய பெரியார் இயக்கங்கள் பொது உரிமை பரப்பும் பெரியாரின்-படைகளாகச் செயல்பட்டு வருகின்றன. இவர்கள் ஒன்றுபட்டுப் போராட வழிகாணு வோம்! ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களை உயர்த்துவோம்! இன இழிவைத் துடைத்தெறிவோம்! பொதுவுடைமை சமுதாயம் அமைப்போம்!

# வேண்டும் பயிற்சி வகுப்பு!

- கு. தொல்காப்பியன்

இன்று உலக அளவில் கிறித்துவ மதமும் இசுலாம் மதமும் இருபெரும் மதங்களாகக் கருதப்படு கின்றன. உலகம் முழுதும் இந்த மதங்களைப் பரப்பியவர் யார்? அவர்கள் மதங்களைப் பரப்பக் கையாண்ட உத்திகள் யாவை என்பனவற்றைச் சற்றே சிந்திப்போமானால், நாம் நம் பெரியாரின் கொள்கை களைப் பரப்பவும், அதன்படி நம் மக்களை வழிநடத்த வும் ஏற்றதாக அமையும்.

இருபது நூற்றாண்டுகளுக்கு கிறித்துவ மதத்தைத் தோற்றுவித்த இயேசுபிரான் தன் கொள்கைகள், இலட்சியங்கள் பரப்பிட திருத்தூதர்களை நியமித்தார். அவர்களுக்குத் தன் மதத்தைப் பற்றிய தெளிவான கருத்துக்களை மக்களிடம் பரப்புரை செய்யப் பயிற்சி கொடுத்தார். அவர்கள் உலகம் முழுவதும் சென்று, பல்வேறு உத்திகளைக் கையாண்டு, தங்கள் மதத்தைப் பரப்பினர். அவர்கள் கையாண்ட விதம் :

1. வறுமைக் கோட்டுக்குக்கீழ் உள்ள மக்களிடம் நேரி டையாகப் பழகி, முதலில் அவர்களுக்கு உண வளித்தல்.
2. சுகாதார வசதி, மருத்துவ வசதி அளித்தல்.
3. கல்வியோடு மதத்தைப் பரப்புதல்.
4. சாதிப்பாகுபாடின்றி அனைவரையும் சமமாக மதித்தல்.

இவ்வாறு அவர்கள் இடைவிடாது தொடர்ந்து மக்க ளோடு மக்களாகக் கலந்து மதத்தைப் பரப்பியதால், இன்று நாடு முழுக்க கிறித்துவக் கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், கூடவே தேவாலயங்கள் இல்லாத இடமே இல்லை என்று வளர்ந்துகொண்டே இருக் கிறார்கள்.

அவ்வாறே இசுலாம் மதத்தைத் தோற்றுவித்த நபிகள் நாயகம், தன் இயக்கம் வலுப்பெற இறைத் தூதர்களை நியமித்து உலகம் முழுவதும் இசுலாம் பரவ வழிவகை செய்தார்.

பார்ப்பனர்கள் இந்து மதத்தை உருவாக்கி, காலம் காலமாகத் தன்னுடைய இனமக்கள் கஷ்டப்படாமல் வாழ்வதற்குப் பல்வேறு உத்திகளைக் கையாண்டார்கள். அவற்றில் மிக முக்கியமானது "வேதபாடசாலை" அமைத்து, வேதம் கற்பிப்பது. இந்த வேத பாடசாலை என்பது மன்னர் காலத்திலிருந்து இன்றுவரை தொடர்ந்து இடைவிடாது பார்ப்பனர்களாலும், சூத்திரர்களாலும் பார்ப்பனர்களுக்கு மட்டுமே நடத்தப்படுகிறது. தமிழகத் தில் சென்னை, காஞ்சிபுரம், கும்பகோணம், திண்டிவனத் துக்கு அருகில் ஓங்கூரிலும் நடத்தப்படுகிறது.

**சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் திண்டிவனத்துக்கு அருகில் ஓங்கூரில் நடக்கும் வேதபாடசாலையை நானும் தோழர் ஆனைமுத்து, தோழர் இரா.மதியழகன் ஆகிய மூவரும் நேரில் சென்று பார்வையிட்டோம். இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பார்ப்பன மாண வர்கள் மட்டும் இங்கே பயின்று வருகிறார்கள். அவர்களுக்கு மூன்று வேளையும் உணவளித்து, தங்கும் இடவசதியும் கொடுத்து, இலவசமாகப் பயிற்சி தருகிறார்கள். அதற்குத் தனிப்பட்ட செல் வந்தர்கள் உதவி செய்கிறார்கள்.**

நாம் நம் மக்களிடம் சென்று பெரியாரின் கொள்கை களை எடுத்துச் சொன்னால், "காலம் மாறிவிட்டது; இவனுங்க இன்னமும் சாதி இல்லை; பூதம் இல்லைன்னு சொல்லிக்கிட்டு அரைத்த மாவையே அரைக்கிறார்கள்" என்று கிண்டல் செய்கிறார்கள்.

**செவ்வாயில் குடியேற நாள் பார்க்கும் இந்த நேரத்தில், வேதபாடசாலைக்கு வேலை என்ன? என்று யாரும் கேட்பதில்லை; சிந்திப்பதில்லை. எத்தனை நூற்றாண்டுகள் கடந்தாலும் பார்ப்பான் தன் தொழிலுக்கு ஏற்றவாறு விஞ்ஞானத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தான் மட்டும் மேலோங்க எல்லாவற்றையும் செய்து கொள்வான்.**

**இதையெல்லாம் நன்கு ஆய்ந்து அறிந்து நம் தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் பெரியார் கொள்கைகள் நிலைத்து நிற்க, கொள்கைகளைப் பரப்பிடப் பயிற்சி பெற்ற பேச்சாளர்கள், எழுத் தாளர்கள் வேண்டும் என்ற நோக்கில் ஆரம்பித்தது தான் "ஈ.வெ.ரா. இராமசாமி-நாகம்மை கல்வி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளை".**

பெரியார் காட்டிய வழியில் கட்சியை வழிநடத்தி கிராமங்கள் தோறும் பிரச்சாரக் கூட்டங்கள், ஓரிடத்தை மையமாகக் கொண்டு பயிற்சி வகுப்பு நடத்துதல் என்று தனது 92 வயதிலும் சளைக்காமல் எதிர்நீச்சல் போட்டு நடத்தி வருகிறார்.

பெரியாரின் கொள்கைகளை நிலைநிறுத்தும் இந்தப் பயிற்சியில் ஒவ்வொரு ஆண்டும் 25 நபர்கள் பயிற்சி பெற்று அவர்களில் ஒருவர், இருவர் உருவா னால் அதுவே பெரிய வெற்றியாகும்.

அவ்வாறான பயிற்சி வகுப்பைத்தான் கடந்த ஆண்டு அம்பத்தூரில் இயங்கிவரும் பெரியார் ஈ.வெ.ரா. - நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை சார்பில் 28 மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து, தொடர்ந்து

சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. ஒவ்வொரு தமிழனும் தனது வருங்காலத் தலைமுறைக்காக, இழிவு நீங்கி தன்மானத்துடன் வாழக் களப்பணியாற்றுவதும், பயிற்சி பெறுவதும் முதன்மையான பணிகளாகும்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தோழர்களும், அதன் பொதுச் செயலாளர் தோழர் வே. ஆனைமுத்து அவர்களும் தங்கள் சக்திக்கு மீறி, மிகுந்த பண நெருக்கடியான நிலையிலும் சென்னையில் அறக்கட்டளையை நிறுவிச் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். அங்கே தரமான நூல் நிலையமும் இயங்கி வருகிறது.

தனது 92 வயதிலும் எந்தச் சுணக்கமும் இல்லாமல், தமிழன் இழிவு நீங்கிட எல்லாருக்கும் எல்லாம் சமமாகக் கிடைத்திட கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை சுற்றுப்பயணம் செய்து விழிப்புணர்வு உண்டாக்கி வருகிறார், தோழர் வே. ஆனைமுத்து. அவர் வாழும் வரையிலாவது நாமும் அவருடன் சேர்ந்து ஏதோ ஒரு வகையில் அவருக்குப் பக்கபலமாக இருந்தாலே நாம் நம் தலைமுறையினருக்குச் செய்யும் தலையாய கடமையாகும். அவரின் வழிகாட்டுதலோடு, நல்வழி நடப்போம் வாரீர்!

## நீங்க மனுசங்களா

நீங்க மனுசங்களா? நீங்க மனுசங்களா?
தந்தை பெரியார் சொல்லில திருந்திடாத
ஜென்மங்களா! நீங்க மிருகங்களா!

- நீங்க மனுசங்களா

மலத்தை மிதித்தா காலைத்தானே கழுவுறீங்க! - உங்களை
மனிதன் தொட்டா தீட்டுயின்னு ஏன் குளிக்கிறீங்க!
மலத்தை வாரி உங்கமேலே பூசிவிட்டானா? - இல்லை
மலக்குழியில் உங்களைத்தான் தள்ளிவிட்டானா?

- நீங்க மனுசங்களா

பூதேவர் நாங்கள் என்று பீத்துறீங்க! - உங்கள்
பூதஉடலை தேவர் வந்தா எரிக்கிறாங்க?
மூடத்தனத்தை மதமின்னு திணிக்கிறீங்க! - அந்த
முட்டாள்தனத்தை பகுத்துப்பார்க்க மறுக்குறீங்க!

- நீங்க மனுசங்களா

பீ தின்னும் பன்னியோடு பத்து என்றானா! - இன்னும்
ஏன்டா அவதாரம் எடுக்க வில்லையே!
சிம்மாசனத்தில் செருப்பை வைத்த பரதனில்லடா - நாங்க
தந்தை பெரியார் வழியில் வந்த சிங்கமடா!

- நீங்க மனுசங்களா

சாணிப்பால் சவுக்கடியை சிறை இடுவோமே! - நாங்க
சாதிமத சனியனை விரட்டு வோமடா!
தேசிய விடுதலைக்குப் புறப்பட்டோமடா! - இன்றே
திமிரி எழும் தோள்களை திரட்டுவோமடா!

- நீங்க மனுசங்களா

**- வேட்டவலம் விசாலன்**

**கட்டுரைத் தொடர்-48**

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்



பெரியார் சிறைக்குச் சென்ற பின்னர் மேலும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தினர். பெண்கள் தங்கள் கைக்குழந்தைகளுடன் சிறை சென்றனர்.

பெரியாரை பெல்லாரி சிறையில் அடைத்தார் இராசாசி. அங்கு அவருக்கு உடல்நலம் மிகவும் பாதிக்கப்பட்டது. உடல் எடையும் குறைந்து வந்தது. இதுகுறித்து சட்ட மன்றத்திலும் எடுத்துக் கூறப்பட்டது. ஆளுங்கட்சித் தரப்பில் கிண்டலாகவும் கேலியாகவும் விடைகள் அளிக்கப்பட்டன. அது ஆர்க்காடு இராமசாமியின் மகன் டாக்டர் கிருட்டிணசாமி நடத்திய லிப்படரேட்டர் வெளி யீடான ஆரிய ஆட்சி நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு. ஈ.வெ. ராமசாமி நாயக்கரது தேக நிலை யைப் பற்றியும் அவரது எடைக் குறைவைப் பற்றியும் கேள்விகள் கேட்கப்பட்டன.

### ஈ.வெ.இராவின் தேகநிலை நகைப்புக்கிடமாதல்

1938ஆம் வருடம் டிசம்பர் மாதம் முதல் 1939 ஆம் வருடம் மார்ச்சு மாதம் முடிவதற்குள், அக் கைதி ஒன்பது ராத்தல் எடை குறைந்துவிட்டதைப் பற்றித் தெரிவிக்கப்பட்டதும், காங்கிரஸ் கருணை வள்ளல் களில் (!) ஒருவரான திரு. பி.எஸ். சீனிவாச ஐயர், அவ்விதம் எடை குறைவதனால், திரு. ஈ.வெ.இரா வைப் போன்ற வயது முதிர்ந்தவர்களுக்கு, அவர்களது தேக நிலை திடம்பெறுவதைத் தானே காட்டுகிறது (!) என்றும்; நமது பிரசித்தி பெற்ற காங்கிரஸ் தோழர் திரு. கத்தே ரங்கய்யா நாயுடுவோ, பலத்த சிரிப்புக்கிடையே ‘திரு. ஈ.வெ.ராவைப் போன்ற வயது முதிர்ந்தோர் எக்காலத்தில்தான் எடையில் பெருக்கமுடியும்?’ என்றும் கேட்டார்கள்.

### கீழ்த்தரமான குதர்க்கக் கேள்விகள்

இவ்விதக் கேள்விகளுக்கிடையில், மற்றொரு காங்கிரஸ் அங்கத்தினர் “ஏ-வகுப்புக் கைதிகளுக்கு, அவரது உணவு சம்பந்தமாக ஏதாவது கட்டுப்பாடுகளுண்டா? அல்லது அவருக்கு தமக்குப் பிரியமான உணவை உண்ண, உரிமையிருக்கிறதா?” என்று கேட்டார்.

அதற்குப் பிரதம மந்திரியார், “ஏ-வகுப்புக் கைதிகள் தங்களுக்குப் பிரியமான உணவைச் சாப்பிட அனுமதி யுண்டு. ஆனால் தேக நிலையைக் கெடுத்துக் கொள்ளும் வண்ணம், அவர்கள் வெளி உணவுகளைத் தருவித் துச் சாப்பிடக்கூடாதென்பதே ஒரு நிபந்தனை” என்றார்.

இந்த மாதிரியான பதிலைக் கேட்டதும் சபையோர் என்ன எண்ணியிருப்பார்கள்! திரு. நாயக்கரை ஆதரிப்பவர்களும், பின்பற்றுபவர்களும்கூட, நல்ல ஆரோக்கிய உணவை வெளியிலிருந்து அவருக்குத் தருவித்துக் கொடுத்து, உதவிபுரிய அக்கறை கொள்ளவில்லை என்று சபையோர் ஒவ்வொருவரும், அப்பதிலைக் கேட்டதும் நினைக்க நேர்ந்தது!

ஆனால், சற்றுநேரங்கழித்ததும், எதிர்க்கட்சித் தலைவர் “சபைத் தலைவரே! வெளியிலிருந்து சிறைக்குள் சமைத்த உணவுகள் மட்டுமல்ல, பழங்கள், ரொட்டிகூட, எடுத்துவர அனுமதிக்கப்பட மாட்டாது என்றெல்லாம் இன்றுவரை நிபந்தனை இருந்து வருகிறது. ஆகவே - ஏ வகுப்புக் கைதிகள் உணவு சம்பந்தமாகத் தற்சமயம் நமது பிரதம மந்திரியார் கூறின பதிலைத் திருத்திக் கொள்ளும்படி நான் கேட்கலாமா? அப்படிக் கேட்பது, சபையினது சட்டத் திட்டங்களுக்குட்பட்டதுதானே!” என்றார்.

இக்கேள்வி சபையோரையே தூக்கிவாரிப்போட்டது. ஏன்! குட்டு வெளிப்பட்டதல்லவா! திரு. இராஜகோபாலாச்சாரி இதற்குப் பதிலளிக்கையில் “ஒரு ஏ-வகுப்புக் கைதியின் உணவு, 15 ரூ. பெறுமானமுள்ள பி-வகுப்புக் கைதியின் ஒரு மாதத்திய உணவுக்குச் சமமானது. வெண்ணெய், நெய் போன்ற எடைநிறை அதிகப்படுத்தும் சத்துள்ள உணவுகளை, டாக்டர் அனுமதித்தால், அக்கைதி அவைகளை வெளியிலிருந்து தருவித்துச் சாப்பிட முடியும்” என்றார்.

இந்தப் பதிலின் கடுமையை அறியாதார் இல்லை. அந்தப் பதிலைச் சபையோர் அனைவரும் நம்பவில்லை. உண்மைதான் வெளியாகிவிட்டதே! அவ்விதமிருந்தாலும், மான்ட் போர்டு சட்டசபையில், இதேமாதிரி, காங்கிரசு கைதிகளைப் பற்றி யாராவது பதிலளித்திருந்தால், என்ன மாதிரிக் குழப்பமேற்பட்டிருக்கும்! நமது உன்னத தேசியப் பத்திரிகைகள் என்னவிதமாய்ச் சீறிக் கூக்குரல் போட்டுக் கிளர்ச்சியை உண்டாக்கியிருக்கும்! இதையெல்லாம் சொல்லி என்ன பிரயோசனம்! திராவிடர்களாகிய நாம்தான் “ராமராஜ்யத்தின்” கீழ் சந்தோஷமாக வாழ்கிறோமே! (நூல் : ஆரிய ஆட்சி,

பக்கம் 112-113)

பெரியாரின் உடல்நிலை மிக மோசமானதைத் தொடர்ந்து, எவ்வித முன்னறிவிப்புமின்றி, 22.4.1939 அன்று விடுதலை செய்யப்பட்டார். பெரியார் மொத்தம் 167 நாள்கள் சிறையில் இருந்தார். பெரியார் விடுதலையாகி 5 நாள்களில், இரண்டாம் உலகப் போரில் இந்தியாவைக் கலந்தாலோசிக்காமல் இங்கிலாந்து அரசு போரில் ஈடுபடுத்தியதைக் கண்டித்து, காங்கிரசு அரசு பதவி விலகியது.

இராசாசி பதவி விலகியவுடன், பெரியார் மறியல் போராட்டத்தை நிறுத்தினார்.

**ஆங்கிலேய அரசு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் 15.11.1939இல் விடுதலை செய்தது.**

**19.2.1940இல் பெரியார் கோகலே மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் இறுதி எச்சரிக்கை கொடுத்தார்.**

**எனவே 21.2.1940இல் ஆங்கில அரசு கட்டாய இந்தித் திட்டத்தைக் கைவிட்டது.**

## மடல் பகுதி

பார்வை 2017, பிப்ரவரி சிந்தனையாளன் உயர்திரு. வே. ஆனைமுத்து அவர்கள் எழுதிய ‘‘திருக்குறளும் தமிழர் வாழ்வியலும்’’ நூலின் விலையும் அஞ்சல் செலவும் தனியாகக் குறிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

‘ஆமிஷ் சமூகம்’ நல்ல பாடம். ‘காயடிக்கப்பட்ட காளைகள்’ இறுதிப் பகுதி உண்மையிலும் உண்மை. ஆசிரியவுரை முத்தாக, விலை மதிகப்படாத பேருரை. மேன்மையானவர்கள் பெருமையாக மேஜை சிந்தனையாளராக ஏட்டில் குறிப்பிடுவதுண்டு. குட்டுவன் ஊடக நெறிகளைப் பற்றி எழுதியது பாராட்டத்தக்கது. ‘‘இனி மெல்லச் சாவோம்’’ கட்டுரை விழிப்புணர்வை உண்டாக்குகிறது. முகிலன் தைப்புரட்சி ஒரு பாடம். டாக்டர் டி.எம். நாயர் அவர்களைப் பற்றிய கட்டுரைகளை எதிர்பார்க்கிறேன்.

பாத்தினியத்தின் தமிழ்ப் பெயரைக் குறிப்பிடவில்லை. தற்போது வயதானவர்கள் அதனால் - பார்வை குறுகுவதால் தற்போதுள்ள சிந்தனையாளன் இதழில் வரும் எழுத்தின் அளவு வெள்ளை பின்னணி பொருத்தமாக இருக்கிறது. **மசாலா கலர் வேண்டாம். பெட்டிச் செய்திகளையும் இதே முறையில் பிரசுரிக்கவும். வரலாற்றுப் பின்னணியில் விமர்சனங்கள் பாரபட்சமில்லாமல் புகழ் அரசியலில்லாமல் பிரசுரிப்பது மிகவும் பாராட்டக் கூடியது.**

- **அ. உசேன் மஸ்தான்,** அறந்தாங்கி

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம்.

அரியலூர் அடாவடி தலையங்கம் மனத்தை உருக்குவதாக உள்ளது. இந்த வறட்சி நிலையில், ஏரி குளம் குட்டைகளைத் தூர்வாருவது எளிது மட்டுமல்ல; இன்றியமைாததும் ஆகும். தூர்வாரியதாக கணக்கு மட்டுமே காட்டுகின்றனர். மணல் வியாபாரிகளை தூர்வாரிக் கொள்ளுங்கள் என்றால் குளம் ஏரி போன்றவைகளை நல்ல ஆழமாகத் தோண்டி மண் அள்ளிக்கொண்டு போகமாட்டார்களா?!

- **பெ. சிவசுப்பிரமணியன்,** சென்னை

தலைவர், தாயுமானசுவாமி தமிழ் வளர்ச்சி மன்றம்

வணக்கத்திற்கும் மரியாதைக்கும் உரிய ஐயா ஆனைமுத்து அவர்கட்கு, வணக்கம். நலம். இங்கு நான் நலம். தங்கள் நலம் காண நாட்டம்.

சட்டஎதிர்ப்புப் போராட்டத்தில் திருச்சி மத்திய சிறையில் 7ஆம் பிளாக்கில் ஒன்றரை மாதம் இருந்தீர்கள். தினமும் ஒரு திருக்குறள் சொல்லி, அதற்கு விளக்கமும் சொல்லியது, இன்றுவரை எனது மனக்கண்முன் நிற்கிறது. நீண்ட இடைவெளிக்குப்பின் தங்களுக்குக் கடிதமெழுதினேன். உடன்பதிலுரை எழுதினீர்கள். அந்தக் கடிதம் என்னிடம் உள்ளது.

ஐந்து ஆண்டுகட்குமுன் சேப்பாக்கம் சிந்தனையாளன் அலுவலகத்தில் சந்தித்த போது, என்னைக் கட்டித் தழுவி சால்வை போர்த்தியதை நான் மறக்கவில்லை. அதைத் தொடர்ந்து சிந்தனையாளன் மாத இதழ் எனக்கு அனுப்பி வருகிறீர்கள். சிந்தனையாளன் இதழில் வந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் முழுவதிலும் நடந்தவற்றைப் புத்தகமாகத் தயாரித்து வைத்துள்ளேன். மேலும், புத்தகத்தில் வருகின்ற தலையங்கங்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு செராக்ஸ் எடுத்து எல்லோருக்கும் கொடுத்து வருகிறேன்.

தந்தை பெரியார் நாகம்மையார் அறக்கட்டளைக்கு நமது 61ஆவது திருமண நாளில் (1000) ஒரு ஆயிரம் நன்கொடை அனுப்பியிருந்தேன். அந்த நிகழ்ச்சியை மலரில் வெளியிட்டதற்கு மிக்க நன்றி. சனவரி மாதம் நடக்கும் மாநாட்டிற்கு வர ஆவல். ஆனால் வயது முதிர்வு மற்றும் தொழில் சிரமம் ஆகியவற்றால் இயன்றளவு முயல்கிறேன்.

- **எம். சுப்பையா,** ஆவுடையார் கோவில்

# பார்ப்பனியமும் முதலாளியமும் முதன்மையான எதிரிகள்

- டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்

1938 பிப்பிரவரி 12, 13 ஆகிய நாள்களில் பம்பாய் மாகாணத்தில் மன்மத் தொடர்வண்டி நிலையத்திற்கு அருகில் இப்ரகீம் தேஜ்பாய் சேத் என்பவருக்குச் சொந்தமான நிலத்தில், ''கிரேட் இந்தியன் பெனின்சுலர்'' இரயில்வேயில் பணியாற்றிய தாழ்த்தப்பட்ட தொழிலாளர்களின் மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டிற்குத் தலைமை வகித்த டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் 13.2.1935 அன்று அம்மாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவு :

நண்பர்களே,

கிரேட் இந்தியன் பெனின்சுலர் இரயில்வேயில் பணியாற்றும் ஒடுக்கப்பட்ட தொழிலாளர்களின் மாநாடு இது. ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் இந்த மாகாணத்திலும் இந்தியாவில் மற்ற மாகாணங்களிலும் பல தடவை மாநாடுகளை நடத்தியுள்ளோம். அந்த வகையில் இது முதல் மாநாடு அல்ல. ஆனால் வேறொரு வகையில் இது முதலாவது மாநாடாகும். ஒடுக்கப்பட்ட வகுப்பினர் இதுவரையில் தங்களுடைய சமுதாய இன்னல்களை - இயலாமைகளை நீக்குவதற்காகத்தான் போராடி வந்தனர். தங்களுடைய பொருளாதார நலன்களுக்காகப் போராடவில்லை. இப்போதுதான் முதன்முறையாகத் தங்களின் பொருளாதார நலன்கள் குறித்து விவாதிக்கக் கூடியிருக்கிறார்கள்.

**இதுவரையில் ''பறையர்'' என்ற நிலையில் கூடினீர்கள். இப்போது ''தொழிலாளர்'' என்ற நிலையில் கூடியிருக்கிறீர்கள். சமுதாயக் கொடுமைகளை ஒழிப்பதற்கே நாம் முன்னுரிமை கொடுத்து வந்தோம் என்பதைத் தவறு என்று நான் கூற மாட்டேன். மற்றவர்கள் இதைப்பற்றி என்ன சொன்னாலும், சமூகம் நம்மீது திணித்துள்ள கொடுமைகளின் சுமை நம்முடைய ஆண்மையை நசுக்குவதாக இருக்கிறது.**

தீண்டாமையை ஒழிப்பதில் நாம் வெற்றி பெறவில்லை என்பது உண்மைதான். மற்றவர்கள் அனுபவிக்கின்ற அடிப்படை உரிமைகளை நாம் பெறுவதற்கான முயற்சியிலும் வெற்றி பெறவில்லை. ஆனால் அதேசமயம் நம்முடைய போராட்டம் நமக்கான அரசியல் அதிகாரத்தைப் பெறுவதில் வெற்றியை ஈட்டியுள்ளது. அதிகாரம் இருக்குமானால் விடுதலையும் இருக்கும் எனும் கூற்றில் உண்மை உண்டு. தடைகளைத் தகர்ப்பதற்கும் விடுதலை பெறுவதற்கும் அதிகாரத்தைப் பெறல் என்பது ஒரு வழிமுறையாக விளங்குகிறது. மதம் அல்லது பொருளாதார அதிகாரம் அளவுக்கு அரசியல் அதிகாரம் வலிமையானதாக இல்லாத போதிலும், அரசியல் அதிகாரமும் பயன்தரவல்லதாக இருக்கிறது.

புதிய அரசமைப்புச் சட்டத்தில் (1935) ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் பெற்ற அரசியல் அதிகாரம் எதிரிகளின் வஞ்சகச் சூழ்ச்சிகளாலும் நம்மிடையே உள்ள தன்னலக் காரர்களாலும் வீணான வீறாப்பு கொண்டவர்களாலும் பயனற்றதாக ஆக்கப்பட்டதற்காக நான் வருந்துகிறேன். தனக்குப் பின்னால் ஓர் அமைப்பைக் கொண்டிராத அதிகாரமும், விழிப்புணர்வு கொண்டவர்களைப் பெற்றிராத அதிகாரமும் உண்மையான அதிகாரமாக இருக்காது. ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் மிக விரைவில் ஓர் அமைப்பின்கீழ் அணிதிரள்வார்கள்; தாங்கள் பெற்றுள்ள அரசியல் அதிகாரத்தைப் பற்றி விழிப்புணர்வு பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன். அந்நிலையில் தங்களின் சமூக விடுதலையைப் பெறுவதற்காகத் தங்களுடைய அரசியல் அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்துவார்கள்.

**சமூக விடுதலைக்காக நாம் மேற்கொண்ட முயற்சிகள் - செயல்பாடுகள் தவறானவை என்று நான் சொல்லமாட்டேன். சமுதாய நிலையில் நாம் எதிர்கொள்ளும் சிக்கல்களைப் போலவே, பொருளாதாரச் சிக்கல்களும் நம்மை அழுத்தி வருகின்றன. பொருளாதாரச் சிக்கல்களை வெகு காலத்திற்கு முன்பே நாம் கையில் எடுக்கத் தவறி விட்டோம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அத்தன்மையில் இன்று தீண்டப்படாதவர்கள் என்பதைவிட, தொழிலாளர்கள் என்ற நிலையில் நாம் கூடியிருப்பது கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதுவே ஒரு புதிய மாற்றம். நம்முடைய பொருளாதாரச் சிக்கல்கள் குறித்து விவாதிப்பதற்காக இம்மாநாட்டை ஏற்பாடு செய்தவர்களை நான் பாராட்டுகிறேன்.**

ஆனால் நம்முடைய புதிய முயற்சிக்குச் சில பேர் தீய உள்நோக்கம் கற்பிக்கின்றனர். நான் இந்த மாநாட்டில் கலந்துகொள்வதைத் தவறு என்று கண்டிக்கின்றனர். தொழிலாளர் தலைவர்களிடமிருந்து அல்லாமல் வேறு எவரிடமிருந்து இந்த விமர்சனம் வந்திருந்தாலும் நான் அதைப் பொருட்படுத்தி இருக்க மாட்டேன். ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் தொழிலாளர் மாநாட்டை நடத்துவதால் நாம் தொழிலாளர்களிடையே பிளவை ஏற்படுத்துவதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

**இந்த நாட்டின் உழைப்பாளிகள் இரண்டு பகைவர்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. பார்ப்பனியமும் முதலாளியமும் அந்த இரண்டு எதிரிகள் ஆவர். பார்ப்பனியம் தொழிலாளர்களுக்கு எதிரியாக இருப்பதையும், தொழிலாளர்கள் அதை எதிர்கொள்ள வேண்டியிருப்பதையும் பற்றி நம்மைக் குறைகூறுவோர் எண்ணிப்பார்க்கத் தவறுகின்ற காரணத்தால்தான், நம்மீது குற்றஞ் சாட்டுகின்றனர்.**

நான் பார்ப்பனியம் என்று குறிப்பிடுவது பார்ப்பனர்கள் ஒரு வகுப்பினர் என்ற நிலையில் பெற்றிருக்கிற அதிகாரம், சிறப்புரிமைகள் பற்றியது அல்ல. ''பார்ப்பனியம்'' என்ற சொல்லைப் பார்ப்பனர்களை மட்டும் குறிக்கும் சொல்லாக நான் பயன்படுத்தவில்லை. சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை மறுக்கும் மனப்போக்கையே நான் பார்ப்பனியம் என்று கருதுகிறேன். இம்மனப்போக்கின் மூல கர்த்தாக்கள் பார்ப்பனர்களாக இருந்தபோதிலும், இம்மனப்போக்குப் பார்ப்பனர்களிடம் மட்டுமல்லாது, எல்லா வகுப்பினரிடமும் இருக்கிறது. பார்ப்பனியம் எல்லா இடங்களிலும் ஊடுருவி இருக்கிறது. எல்லா வகுப்பு மக்களின் சிந்தனைகளையும் செயல்களையும் இயக்குகின்ற ஆற்றலாகப் பார்ப்பனியம் விளங்குகிறது என்பது எவராலும் மறுக்கமுடியாத உண்மையாகும். பார்ப்பனியம் சில வகுப்பினருக்கு உயர்ந்த நிலையை அளித்திருக்கிறது. அதேசமயம் மற்ற வகுப்பினருக்குச் சம வாய்ப்பைத் தர மறுக்கிறது.

பார்ப்பனியத்தின் தாக்கம் கலப்பு மணம், சேர்ந்து உண்ணல் போன்ற சமூக உரிமைகளுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. அவ்வாறு மட்டும் அது இருக்குமாயின், அதைப்பற்றி நாம் பொருட்படுத்தமாட்டோம். ஆனால் அது அவ்வாறு மட்டும் இல்லை. பார்ப்பனியம் சமூக உரிமைகள் என்பதையும் தாண்டி, குடிமை உரிமைகளையும் (Civic Rights) தாக்குகிறது. பொதுப் பள்ளிகள், பொதுக் கிணறுகள், பொதுப் போக்குவரத்து, பொது உணவகங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவது குடிமை உரிமைகளாகும்.

**பொது மக்களின் பயன்பாட்டுக்குரியதாக உள்ள ஒவ்வொன்றும் அல்லது பொது மக்களின் வரிப் பணத்தால் நிருவகிக்கப்படுகின்ற அனைத்தும் ஒவ்வொரு குடிமகனுக்கும் பயன்படுத்த உரிமை உடையதாக இருக்க வேண்டும். ஆனால் பல கோடி மக்களுக்கு இக்குடிமை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இவ்வாறு மறுக்கப்படுவதற்குப் பார்ப்பனியமே காரணம் என்பதை எவராலும் மறுக்க முடியாது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்ட பார்ப்பனியம் இன்றும் பேராபத்தானதாக இருக்கிறதல்லவா? பொருளாதார வாய்ப்புகளையும் மறுக்கும் பேராற்றல் வாய்ந்ததாகப் பார்ப்பனியம் ஆதிக்கம் செலுத்துகிறது.**

தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்த ஒரு தொழிலாளியை தீண்டத்தக்க வகுப்பைச் சேர்ந்த ஒரு தொழிலாளியுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். தீண்டத்தகாத தொழிலாளிக்கு உள்ள வேலைவாய்ப்புகளின் நிலை என்ன? நிலையான வேலையைப் பெறுவது, அதில் மேலும் உயர் நிலையை எய்துவதற்கு உள்ள வாய்ப்புகள் என்ன? தீண்டப்படாதவன் என்ற ஒரே காரணத்திற்காகப் பல வேலை வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். பருத்தித் தொழிலில் அப்பட்டமாகத் தெரியும் இந்நிலையைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்தியாவின் பிறபகுதிகளில் உள்ள நிலைமை பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் பம்பாய் மாகாணத்தில் பம்பாயிலும் அகமதாபாத்திலும் உள்ள ஆலைகளில் நெசவுப் பிரிவில் தீண்டப்படாதவர்களை வேலையில் சேர்ப்பதே இல்லை. பஞ்சிலிருந்து நூல் நூற்கும் பிரிவில் மட்டும் அவர்கள் வேலை செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். நூற்புப் பிரிவில் ஊதியம் குறைவு. துணி நெய்யும் நெசவுப் பிரிவில் வேலை செய்யும் சாதி இந்துத் தொழிலாளர்கள் தீண்டத்தகாத தொழிலாளர்களுடன் இணைந்து வேலை செய்ய மறுத்தனர். அதனால் தீண்டப்படாதவர்களுக்கு நெசவுப் பிரிவில் வேலை மறுக்கப்பட்டது. ஆனால் சாதி இந்துத் தொழிலாளர்கள் முசுலீம் தொழிலாளர்களுடன் வேலை செய்வது பற்றிக் கவலைப்படவில்லை. (இன்று கொழுத்த சம்பளம் கிடைக்கும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களிலும் மற்ற தனியார் நிறுவனங்களின் உயர்ந்த பதவிகளிலும் உரிய தகுதி பெற்றிருந்த போதிலும் தாழ்த்தப்பட்ட இளைஞர்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன என்பது குறித்து Blocked by Caste - Economic Discrimination in Modern India - edited by Sukhadeo Thorat and Katherine S. Newman - Oxford Press, 2010 என்கிற ஆங்கில நூலில் உரிய சான்றுகளுடன் விரிவாக விளக்கப்பட்டுள்ளது - மொழிபெயர்ப்பாளர்).

இரயில்வே துறையில் தீண்டப்படாத வகுப்புத் தொழிலாளர்களின் நிலைமை என்னவாக இருக்கிறது என்பதைப் பார்ப்போம். கேங் மேனாக (Gangman) வேலை செய்ய வேண்டும் என்பதே அவன் தலைவிதியாக இருக்கிறது என்பதை எவரும் மறுக்க இயலாது. உயர்வதற்கான வாய்ப்பே இல்லாமல் பணிக்காலம் முழுவதும் கேங்மேனாகவே வேலை செய்கிறார். அரிதாக இரயில் நிலையத்தில் சுமைதூக்குவோராக

அமர்த்தப்படுகிறார். சுமைதூக்குவோராக (Porter) இருப்பவரின் கடமைகளின் ஒன்று தொடர்வண்டி நிலைய அதிகாரியின் வீட்டுவேலைகளைச் செய்வதும் ஆகும். இது ஒரு வழமையாக இருந்துவருகிறது. பொது வாகத் தொடர் வண்டிநிலைய அதிகாரி சாதி இந்துவா கவே இருப்பார். சாதி இந்துவாக உள்ள நிலைய அதிகாரி தீண்டப்படாத ஒருவரைச் சுமைதூக்குவோ ராக அமர்த்தினால் தன் வீட்டு வேலைகளைச் செய்ய அனுமதிக்க முடியாது என்பதால் தீண்டப்படாதவர் களுக்குச் சுமைதூக்கும் பணியாளர் வேலையும் தரப்படுவதில்லை.

**இரயில்வேயில் எழுத்தராக அமர்த்தப்படு வதற்குத் தகுதித் தேர்வு எழுதவேண்டும் என்கிற நடைமுறை இல்லை. அதனால் மெட்ரிக்கில் தேர்ச்சி பெறாதவர்கள் எழுத்தர்களாக அமர்த் தப்பட்டு வருகின்றனர். கிறித்தவர்களில், ஆங்கிலோ இந்தியர்களில், சாதி இந்துக்களிலிருந்து மெட்ரிக் படிப்பில் தேர்ச்சி பெறாத நூற்றுக்கணக்கான வர்கள் எழுத்தர்களாகப் பணி அமர்த்தம் செய் யப்படுகின்றனர். மெட்ரிக் - தேர்ச்சி பெறாத நூற்றுக் கணக்கான தீண்டப்படாத இளைஞர்கள் இருக் கின்றனர். ஆனால், இரயில்வேயில் எழுத்தர் பணி இவர்களுக்குத் திட்டமிட்டே மறுக்கப்படு கிறது. ஒருவர்கூட எழுத்தர் பணியில் அமர்த்தப் படவில்லை.**

இரயில்வே பணிமனையிலும் இதே நிலைதான் இருக்கிறது. மிக அரிதாகவே தீண்டப்படாதவர் மெக் கானிக்காக வேலையில் சேர்க்கப்படுகிறார். ஃபோர் மேனாகவோ அல்லது பணிமனைக் கிடங்கின் பொறுப்பாளராகவோ தீண்டப்படாதவர் அமர்த்தப்படுவ தில்லை. ஒரு கூலி; அவன் கூலியாக நீடிக்க வேண் டும் என்ற நிலைதான் இருக்கிறது. இரயில்வேயில் தீண்டப்படாத தொழிலாளர்களின் அவல நிலை இவ்வாறாக இருக்கிறது.

எனக்கும் உங்களுக்கும் தீயநோக்கம் கற்பிப்பவர் களுக்கு நான் இரண்டு வினாக்களை நேரிடையாகக் கேட்க விரும்புகின்றேன். மேலே குறிப்பிட்டுள்ள தீண்டப்படாதவர்களின் துயரங்கள் உண்மையா இல் லையா? இரண்டாவதாக, அத்துயரங்கள் உண்மை யெனில், அத்துயரத்தால் பாதிக்கப்படுவோர் அவற்றைக் களைவதற்காக ஓர் அமைப்பாக அணிதிரள வேண்டு மல்லவா? இந்த வினாக்களுக்கு நேர்மையான எந்த மனிதனும் எதிர்மறையாக விடைகூற முடியாது.

எங்களைக் குற்றஞ்சாட்டும் தொழிலாளர் தலை வர்கள் ஒருவகையான தப்பெண்ணத்தில் இருக்கிறார் கள். அவர்கள் காரல் மார்க்சைப் படித்தவர்கள்; உடைமை வர்க்கம், தொழிலாளர் வர்க்கம் என இரண்டு வர்க்கங் கள் மட்டுமே உண்டு என்று எண்ணுகிறார்கள். காரல் மார்க்சு கூறியபடியே இந்தியாவிலும் உடைமை வர்க்கம், தொழிலாளர் வர்க்கம் மட்டுமே இருப்பதாகக் கருதுகிறார்கள். இந்த அடிப்படையில் இந்தியாவில் முதலாளியத்தைத் தகர்த்துவிடலாம் என்று நினைக் கிறார்கள்.

இவ்வாறு அவர்கள் கருதுவதில் இரண்டு தவறுகள் உள்ளன. மார்க்சு சொன்னதை ஒரு கருத்து நிலையாகக் கொள்ளாமல் மெய்மை என்று நினைப்பது அவர்கள் செய்யும் முதல் தவறு. இந்தியாவில் இரண்டு வர்க்கங்கள் மட்டுமே உள்ளன என்கிற கருத்தியலை அடித்தளமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் பரப்புரையோ, செயல்திட்டமோ எத்தகைய பயனையும் தராது என்பதுடன், கேடானதாகவே இருக்கும்.

எல்லா வர்க்கங்களிலும் ஒரு பொருளாதார மனிதன் அல்லது பகுத்தறிவு மனிதன் அல்லது தர்க்கரீதியான மனிதன் இருக்கிறான் என்பதை உண்மை என்று நம்புவது எந்த அளவுக்குத் தவறோ அதேபோல் இந்திய சமூகத்தில் இரண்டு வர்க்கங்கள் மட்டுமே இருக்கின்றன என்பதும் அதே அளவுக்குத் தவறாகும். பொருளியல் வல்லுநர்கள் ஒரு பொருளாதார மனிதனை அடிப்படையாகக் கொள்ளும்போது, மற்ற வகைகளில் சமூகத்தில் சமத்துவமான நிலையில் மனிதர்கள் இருப்பதான ஓர் ஊகத்தின் பேரில்தான் தங்கள் ஆய்வை மேற்கொள்வதாக முன்னெச்சரிக்கை செய்கின்றனர். இந்தத் தொழிலாளர் தலைவர்கள் பொருளாதார வல்லுநர்கள் பயன்படுத்தும் பிற புறச் சூழல்களின் சாதகமான நிலையை குறித்து அறவே மறந்துவிடுகிறார்கள்.

அய்ரோப்பாவில்கூட மார்க்சு சொன்னது சரியாக இருந்தது என்று சொல்வதற்கில்லை. செருமனியில் ஒடுக்கப்பட்ட ஏழை இருக்கிறான். பிரான்சில் சுரண்டப்பட்டதால் தன் வாழ்வாதாரத்தையே இழந்துவிட்ட கைவினைஞன் இருக்கிறான். இருவரும் இனம், நாடு, சமய நம்பிக்கைகள், கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றால் வேறுபட்டவர்கள். ஆயினும் சுரண்டப்படுவோர் என்ற நிலையில் அவர்களிடையே ஓர்மை உணர்வும் ஒற்றுமையும் உண்டாக வேண்டும் என்று காரல் மார்க்சு காலம் முதல் வலியுறுத்தப்பட்டு வருகிறது. செருமனியின் ஒடுக்கப்பட்ட ஏழையும் பிரான்சின் சுரண்டப்பட்ட ஏழையும் ஒன்றுசேர்ந்திருக்கிறார்களா? நூறு ஆண்டுகள் ஆன பிறகும் அவர்கள் ஒன்றுபடக்

கற்றுக்கொள்ளவில்லை. கடந்த (முதல்) உலகப் போரில் அவர்கள் எதிர் எதிர் அணியில் நின்று பகைவர்களாகப் போரிட்டார்கள்.

இந்தியாவுக்கும் இது பொருந்தும். உடைமை வர்க்கம், உடைமை இல்லாத வர்க்கம் என்னும் திட்டவட்டமான பிரிவினை இந்தியாவில் ஏற்படவே இல்லை. எல்லாத் தொழிலாளர்களும் ஒன்று - ஒரு வர்க்கம் என்பது ஒரு இலட்சியம்; அது அடையப்பட வேண்டிய இலட்சியம்; ஆனால் அதுவே நடப்பில் நிலவுகின்ற உண்மை எனக் கருதுவது தவறு. அவ்வாறாயின் தொழிலாளர்களை எப்படி அணிதிரட்ட முடியும்? தொழிலாளர்களிடையே எப்படி ஒற்றுமையைக் கொண்டுவர முடியும்? ஒரு பிரிவுத் தொழிலாளர்கள் இன்னொரு பிரிவுத் தொழிலாளர்களை நசுக்குவதைத் தடுப்பதன் மூலம் அவர்களிடையே ஒற்றுமையை உருவாக்க முடியும். ஒடுக்கப்பட்ட மக்கள் அமைப்பு ரீதியாகத் திரள்வதைத் தடுப்பதன் மூலம் அது முடியாது. தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யும் பிரிவினரைத் தடுப்பதன் மூலம் அது முடியாது. ஒற்றுமையைக் கொண்டுவருவதற்கான ஒரே வழி, ஒரு தொழிலாளி இன்னொரு தொழிலாளிக்கு இனம், மதம் ஆகிய பின்னணியில் பகைமை கொள்வதற்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து களைவதன் மூலம் அத்தகைய ஒற்றுமையை அவர்களிடையே கொண்டுவரமுடியும்.

தொழிலாளர்களிடையே ஒற்றுமையை உருவாக்குவதற்கான சிறந்த வழி என்னவெனில், ஒரு தொழிலாளி மற்ற தொழிலாளர்களுக்குத் தரவிரும்பாத உரிமைகளை அவன் மட்டும் பெறவேண்டும் என்பது தவறான சிந்தனை என்று அவனுக்கு எடுத்துச் சொல்வதுதான். தொழிலாளர்களுக்கிடையே சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைப் பின்பற்றுவது தொழிலாளர் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் என்று தொழிலாளர்களுக்கு உணர்த்த வேண்டும். வேறு வகையில் சொல்வதாயின், பார்ப்பனியத்தை - சமத்துவமின்மை எனும் சிந்தனையை அடியோடு கல்லி எறிவதுதான் தொழிலாளர் ஒற்றுமைக்கு வழிகோலும். இத்தகைய முயற்சியில் இறங்கிய தொழிலாளர் தலைவர் யார்?

**முதலாளியத்துக்கு எதிராகக் கடுமையாகப் பேசும் தொழிலாளர் தலைவர்களை நான் அறிவேன். ஆனால் பார்ப்பனியத்துக்கு எதிராக இவர்களில் எவரும் பேசியதாகத் தெரியவில்லை. இதில் அவர்கள் கடைப்பிடிக்கும் கள்ள மவுனம் வெளிப்படையாகத் தெரிகிறது. தொழிற்சங்கத்திற்கும் தொழிலாளர் ஒற்றுமைக்கும் பார்ப்பனியத்துக்கும் தொடர்பில்லை என்று நம்புவதால் அவர்கள் இதுபற்றிப் பேசாமல் இருக்கிறார்களா? தொழிலாளர்களிடையே ஒற்றுமையைக் குலைக்கும் ஆற்றல் வாய்ந்ததாகப் பார்ப்பனியம் உள்ளது என்கிற உண்மையை ஏற்க மறுப்பதால் மவுனமாக இருக்கிறார்களா? பார்ப்பனியத்தைக் கண்டித்துப் பேசினால், அதனால் தொழிலாளர் மனம் புண்படுமானால், தாங்கள் தொழிலாளர் தலைவர்களாக இருக்க முடியாத நிலை ஏற்படுமோ என்கிற சந்தர்ப்பவாதச் சிந்தனை காரணமாக இருக்குமா?**

**தொழிலாளர்களிடையே ஒற்றுமை ஏற்படாததற்கு மூலகாரணியாக இருப்பது பார்ப்பனியமே என்பது என்னுடைய உறுதியான கருத்து. எனவே தொழிலாளர்களிடம் நிலவும் பார்ப்பனிய மனப்போக்கை அகற்றிடத் தீவிரமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பார்ப்பனியம் எனும் தொற்றுநோயைப் புறக்கணிப்பதாலோ அல்லது அதுகுறித்துப் பேசாமல் இருப்பதாலோ அது ஒழிந்துபோகாது. இந்தப் பார்ப்பனியப் போக்கைத் தேடிக் கண்டறிந்து, தோண்டித் துருவி ஆராய்ந்து அடியோடு கல்லி எறியவேண்டும். அப்போதுதான் தொழிலாளர் ஒற்றுமை முகிழ்க்கும்.**

*("டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் எழுத்துகளும் பேச்சுகளும் (ஆங்கிலம்") தொகுதி 17, மூன்றாம் பாகம் நூலில் உள்ள சொற்பொழிவின் ஒரு பகுதியின் தமிழாக்கம். தமிழில் : க. முகிலன்).*

# தொடரும் ஊழல்களும் சுரண்டல்களும்

*சென்ற இதழ் தொடர்ச்சி*

**- குட்டுவன்**

பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் மறைவிற்குப் பிறகு 1984ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தனித்த பெரும்பான்மையோடு காங்கிரசு ஆட்சியை ஒன்றிய அரசில் அமைத்த பிரதமர் ராஜிவ் காந்தி மீது, 1986ஆம் ஆண்டு போபர்சு பீரங்கி ஊழல் வெடித்துக் கிளம்பியது. இந்தியாவின் இளைய பிரதமர் பொருளாதாரத்தைப் புதிய பாதையில் எடுத்துச் செல்வார் என்ற பெரும் நம்பிக்கையை வைத்திருந்த ஊடகங்களுக்கும மக்களுக்கும் இது மாபெரும் அதிர்ச்சியாக முடிந்தது. காங்சிரசு அரசின் இந்த ஊழலின் பரிமாணங்கள் வெளிவந்துவிடக்கூடாது என்பதற்காக, எல்லா வகையிலும் தீவிர முயற்சிகளை தில்லி அதிகார வர்க்கம் மேற்கொண்டது. இந்த ஊழலில் பெரும் பங்கு வகித்த சோனியா காந்தியின் குடும்பத்திற்கு நெருங்கியவரும் இத்தாலியருமான தரகர் குவத் ரோச்சி போபர்சில் கிடைத்த லஞ்சப்பணத்தை சுவிசு வங்கியில் இரண்டு கணக்குகளைத் தொடங்கி ஏறக்குறைய 210 கோடி ஊழல் பணத்தைப் போட்டார் என்ற குற்றாச்சாட்டுகள் எழுந்தன.

1987ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சுவீடன் வானொலி போபர்சு பீரங்கிககளை வாங்கியதில் அரசியல்வாதிகள், இராணுவத்தினர், தரகர்கள் ஈடுபட்டு ஊழல் செய்தனர் என்று சுட்டி இதன் தொடர்பான ஆவணங்களைச் செய்திகளாக வெளியிட்டது. இந்தச் செய்திதான் இந்தியாவில் பெரும் பூகம்பமாக மாறியது. இந்த ஊழலின் முழுப் பரிமாணத்தையும் இந்து நாளேட்டில் பணியாற்றிய சித்ரா சுப்ரமணியம் வெளியிட்டுச் செய்தி ஊடகத்தின் கதாநாயகியாகவே போற்றப்பட்டார். கருவுற்ற நிலையில் இருந்த சித்ரா சுப்ரமணியம் பல அல்லல்களையும் துன்பங்களையும் இந்தச் செய்தியை வெளியிட்டதற்காகத் தான் சந்திக்க வேண்டியிருந்தது என்று குறிப்பிட்டுள்ளார். யார் கொடுத்த அழுத்தத்தின் காரணமாகவோ மற்ற பிற காரணங்களுக்காகவோ, இந்து நாளேட்டின் அன்றைய ஆசிரியர் ஜி.கஸ்தூரி இந்து நாளேடு அடக்கி வாசிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். இதற்கு இந்து ராம் உட்படத் துணை போயினர். இதன் காரணமாக சித்ரா சுப்ரமணியம் “இந்து”வில் இருந்து விலக நேரிட்டது.

போபர்சு பீரங்கி ஊழல் தொடர்பாக நாடாளுமன்றத்தில் பல கேள்விகள் எதிர்கட்சிகளால் எழுப்பப்பட்டன. பல முறை நாடாளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டது. இந்திய நாடாளுமன்ற வரலாற்றிலேயே முதன்முறையாக இந்த போபர்சு ஊழலைப் பற்றி ஒரு நாடாளுமன்ற கூட்டுக்குழு காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர் பி.சங்கரானந்த் தலைமையில் விசாரிக்கும் என்று, 1987 ஆகஸ்ட் மாதம் அன்றைய பாதுகாப்பு அமைச்சர் கே.சி. பந்த் அறிவித்தார்.

இந்தக் குழுவில் பெரும்பான்மையானவர்கள் காங்கிரசு உறுப்பினர்களாக இருப்பதால் நாங்கள் இடம் பெற விரும்பவில்லை என்று, எதிர்கட்சியினர் அறிவித்தனர். 1984ஆம்ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரசுக் கூட்டணியில் அதிமுக இடம்பெற்றதால் கூட்டணிக் கட்சியின் உறுப்பினராக இருந்த ஆலடி அருணாவை இக்குழுவில் நியமித்தனர். 50 முறை கூடி, இக்குழு தனது அறிக்கையை 1988 ஏப்ரலில் அளித்தது. 1987ஆம் ஆண்டில் அன்றைய தமிழக முதல்வர் எம்.ஜி.ஆருக்கும் ராஜிவ் காந்திக்கும் இந்திய இராணுவத்தை ஈழத்திற்கு அனுப்பியது தொடர்பாக பல கருத்து வேறுபாடுகள் தோன்றின. இக்காலக்கட்டத்தில் கூட்டுக்குழுவின் விசாரணை நடைபெற்ற போது அதிமுகவின் சார்பாக ஆலடி அருணா இடம் பெற்றிருந்ததால், இந்த ஊழல் பற்றி எம.ஜி.ஆர். விசாரித்துள்ளார். மறைந்த திரு.ஆலடி அருணா நாடாளுமன்றக் கூட்டுக்குழவிற்கு அளிக்கப்பட்ட ஆவணங்களில் பல முரண்பாடுகள் உள்ளன என்று தெரிவித்து ஊழல் நடந்திருக்க வாய்ப்பு இருப்பதாகவும் எம்.ஜி.ஆரிடம் குறிப்பிட்டார். உடலநலம் பாதிக்கப்பட்டிருந்த எம்.ஜி.ஆர். தனது கை செய்கையின் வழியாக ராஜிவ் காந்தியை தப்பிக்கவிட்டுவிடக் கூடாது என்று குறிப்பிட்டார். இதன் காரணமாக ஆவணங்களில் குறிப்பிட்ட பல கருத்துக்களை நூறு பக்கங்கள் அளவிற்கு மேல் தனது கைகளால் குறிப்புகள் எடுத்ததாக திரு.ஆலடி அருணா இக்கட்டுரையாசிரியரிடம் குறிப்பிட்டார். இந்தக் குறிப்புகளின்படிதான் மீண்டும் இந்து நாளேடு தனது கௌரவத்தை காப்பாற்றிக்கொள்வதற்காக இரகசியமாக சில ஆவணங்களில் உள்ள கருத்துக்களை வெளியிட்டது. போபர்சு ஊழலை வெளிக்கொண்டு வந்த முழுப்புகழும் சித்ரா சுப்ரமணியத்தைச் சேர்ந்துவிடக்கூடாது என்பதற்காக வெளியிட்டதாகப் பல விமர்சனங்கள் வந்தன.

போபர்சு ஒப்பந்தம் சுவீடன் நிறுவனத்திடம் இந்தியா கையொப்பமிட்டபோது. உலப் பாமே (Olof Palme) சுவிடனின் பிரதமராக இருந்தார். ஈராக்-இரான் போரின் போது இரு நாடுகளுக்கும் இராணுவத் தளவாடங்களை அனுப்புவதற்கு அனுமதி அளித்தது தொடர்பாக பல குற்றச்சாட்டுகள் இவர் மீது சுமத்தப்பட்டன. இராணுவத் தரகர் இவரைச் சந்தித்த பிறகு, பாமே திரைப்படம் பார்த்துவிட்டு தனது மனைவியுடன் வெளிவந்தபோது

சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் மீது போபர்சு வழக்குடன் தொடர்புபடுத்தி அண்மையில் பல கருத்துகள் வெளிவந்துள்ளன. போபர்சு ஊழலில் இவர் சம்பந்தப்பட்டிருந்தார் என்று அப்போது தயாரிக்கப்பட்ட இரகசிய ஆவணங்களின் குறிப்புகள் 2017இல் வெளிவந்துள்ளன. இந்திய அரசின் சார்பில் குறிப்பாக காங்கிரசு ஆட்சிக்காலத்தில் இந்த விசாரணையை மறைப்பதற்கு கடைசிவரை ஒன்றிய அரசின் காவல் புலனாய்வு துறையின் நடவடிக்கைகள் முடக்கப்பட்டன. குத்ரோச்சியைக் கைது செய்ய முடியவில்லை. 2013 குத்ரோச்சி மறைந்துவிட்டார். இதைப் பற்றி ஒன்றிய அரசின் காவல் புலனாய்வுத் துறையில் இணை இயக்குனர் பொறுப்பில் இருந்த பி.ஆர்.லால் ஒன்றியப் புலனாய்வு துறை யாருக்குச் சொந்தம் (Who owns CBI) என்ற தனது நூலில் பல திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டுள்ளார். புலனாய்வுத் துறையின் உண்மைகள் சில மனிதர்களை அடையாளம் காட்டினாலும் அவர்களை விசாரிக்கக்கூடாது. புலனாய்வு விசாரணையை நீர்த்துப் போகச் செய்ய வேண்டும் அல்லது திசையை மாற்ற வேண்டும் அல்லது நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும். காலப்போக்கில் வழக்கினைச் சாகடித்துவிட வேண்டும் என்பதுதான் புலனாய்வுத் துறையில் எழுதப்படாத சட்டமாக உள்ளது (The unwritten rule was that certain persons were not to be touched and if the line of investigation reached them, the investigation should be diluted, diverted or dropped and scuttled in due course, p.18) என்று குறிப்பிட்டுள்ளார்.

**2017 ஜனவரி 25ஆம் நாள் அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பு (CIA) தனது கமுக்க அறிக்கைகளைப் பொது மக்களின் பார்வைக்காக வெளியிட்டுள்ளது. இது போன்று வெளியிடுவது அமெரிக்க அரசின் வழக்கம். 2017 அறிக்கையில், புலனாய்வு அமைப்பு, 1988இல் பிரதமர் ராஜிவ் காந்தி சுவீடனுக்குச் சென்று இந்த ஊழல் தொடர்பாக எந்தச் செய்திகளும் அரசின் சார்பாக வெளியிடக்கூடாது என்று சுவீடன் அரசிற்கு வேண்டுகோள் விடுத்தார். இதனை அரை மனதோடு ஏற்றுக்கொண்டு சுவீடன் அரசு இது தொடர்பான ஆவணங்களையும் செய்திகளை மறைத்துவிட்டது.** மேலும் இதன் தொடர்பான விசாரணையையும் நிறுத்திவிட்டது. அமெரிக்க புலனாய்வு அமைப்பின் அறிக்கையில் போபர்சு ஊழல் உறுதியாக நடைபெற்றது. அதற்குரிய ஊழல் பணத்தை நேரடியாகவோ மறைமுகமாகவோ அரசு உயர் அதிகாரிகளிடமும் தரகர்களிடமும் அளித்துவிட்டது என்றும் உறுதிப்படுத்தியுள்ளது. இவ்வாறுதான் உயர் பதவியில் இருப்பவர்கள் ஊழல்கள் பன்னாட்டு அளவிலேயே மறைக்கப்படுகிறது என்பதற்கு அண்மையில் அமெரிக்கப் புலனாய்வு அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையே சிறந்த சான்றாகும்.

ராஜிவ் காந்தி பிரதமராக இருந்தபோது திரு.வி.பி.சிங் நிதியமைச்சராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றினார். நிதியமைச்சராக இருந்த நேரத்தில் வருமான வரி ஏமாற்றுதல் அந்நியச் செலாவணி மோசடி செய்தல் போன்ற நாட்டு விரோத குற்றங்களைத் தீவிரமாக ஆய்ந்து கடுமையான நடவடிக்கைகளை எடுக்க முற்பட்டார். இவரின் நூறு விழுக்காட்டு நேர்மையை ராஜிவ் காந்தியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இவரைப் பாதுகாப்பு அமைச்சராக ராஜிவ் காந்தி மாற்றினார். பாதுகாப்பு அமைச்ராக இருக்கும்போது மேற்கு ஜெர்மனியிடம் இருந்து நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்கியபோது நடைபெற்ற பேரங்களில் ஊழல்கள் இருப்பதாகக் கண்டறிந்து, ஒன்றிய அரசின் புலனாய்வுத் துறையின் நடவடிக்கைக்கு உத்தரவிட்டார். இதன் காரணமாக அவர் காங்கிரசுக் கட்சியிலிருந்தும் அமைச்சரவையிலிருந்தும் விலக நேரிட்டது.

தேசிய முன்னணி ஆட்சி அமைந்த பிறகு 1990இல் பிரதமர் வி.பி.சிங் புலனாய்வுத் துறையின் ஆய்வில் பல திருத்தங்களும் மோசடிகளும் நடைபெற்றுள்ளதை அறிந்து மீண்டும் புதிய விசாரிக்க உத்தரவிட்டார். வி.பி.சிங் பிரதமராக ஓரண்டிற்கு மேல் நீடிக்க முடியாத காரணத்தினால் இந்த ஊழல் தொடர்பான விசாரணையும் புதைக்கப்பட்டது.

1991இல் பிரதமர் நரசிம்மராவ் பொறுப்பேற்ற பிறகு தொடர்ச்சியாக ஊழல்கள் நடந்தன என்ற குற்றச்சாட்டு எதிர்க்கட்சிகளால் கூறப்பட்டது. உர ஊழல், உறுகாய் ஊழல், செயின்ட் கிட்ஸ் ஆவண மோசடி என வழக்குகள் பதியப்பட்டன. இவ்வழக்குகளில் சாமியார் சந்திராசாமி மாமாஜி என்றழைக்கப்பட்ட அகர்வால் ஆகியோர் மீதும் குற்றம் சாட்டப்பட்டது. சுப்ரமணியசாமியும் சந்திராசாமியும் மிக நெருங்கிய நண்பர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஜார்கண்ட் முக்தி மோட்சாவைப் பிளந்து தனது சிறுபான்மை அரசிற்கு ஆதரவு தேட அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பணமளித்ததற்கான வழக்கில் அடிப்படை ஆதாரங்கள் இருந்தும் இந்த வழக்கிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இந்திய ஊழல் வரலாற்றிலேயே ஒரு புதுமையான ஊழல் என்பது குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த பங்குச்சந்தை தரகர் ஹர்ஷத் மேத்தா நடத்திய பெரும் பண மோசடி ஊழலாகும். 1992இல் நரசிம்மராவ் ஆட்சிக்காலத்தில் ரூ.40 முதலீட்டில் பங்குச் சந்தை தரகராக வணிகத்தைத் தொடங்கிய மேத்தா, சில

ஆண்டுகளிலேயே 5000 கோடி அளவிற்கு ஊழலையும் பண மோசடியையும் செய்தார். அவர் செய்த பங்குச் சந்தை மோசடியில் பெரும்பாலும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்தான் பண இழப்புக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாயின. சில பங்குச் சந்தை ஆவணங்களை வைத்துப் பெருமளவில் கடன்களைப் பெறுவதும், பிறகு அதே சான்றிதழ்களை உயர்ந்த மதிப்பிற்கு மற்றொரு வங்கியில் காண்பித்து மீண்டும் கடன் வாங்குவதும், இதன் காரணமாக பங்குகளின் மதிப்பைப் போலியாக உயர்த்திக் காட்டுவதும் இவரின் ஊழல் ஜால வித்தைகளில் ஒன்றாகும்.

சான்றாக பங்குச் சந்தை வரலாற்றிலேயே இடம் பெறாத அளவிற்கு மும்பை பங்குச் சந்தை குறியீட்டு அளவினைப் பல்லாயிரம் அளவிற்குப் போலியாக உயர்த்தி ஒரு வியப்பை உருவாக்கினார். இவரது நிறுவனத்தில் மற்ற நிறுவனங்களின் பங்குகளை இணைத்தால் பங்குகளின் மதிப்பும் இலாபமும் பெருகும் என்று எண்ணிப் பல முக்கிய வணிக அரசியல் புள்ளிகளும் அவரது நிறுவனத்தில் பங்கு பெற்றனர். குறிப்பாக ப.சிதம்பரமும் இடம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் ஒரு வேடிக்கையான நிகழ்வும் உள்ளது. அன்றைய நிதியமைச்சராக இருந்த பொருளாதார நிபுணர் என்று போற்றப்பட்ட மன்மோகன் சிங்கை ஹர்ஷத் மேத்தா சந்தித்தார். அப்போது மன்மோகன் சிங் பங்குச் சந்தையின் பங்குகளின் மதிப்பை உயர்த்தியதைப் போல இந்தியாவின் பொருளாதாரத்தின் வளர்ச்சியை எவ்வாறு உயர்த்தலாம் என்று ஆலோசனை கேட்டார் என்பதை அன்றையச் செய்தி ஊடகங்கள் வெளியிட்டன. பங்கு சந்தை சரிவும் ஹர்ஷத் மேத்தா மோசடி வெளிவரும் காலத்தில் பிரதமர் நரசிம்மராவ் அலுவலகத்திற்கே நேரடியாகச் சென்று ஒரு கோடி ரூபாயை காங்கிரசு கட்சிக்கு நிதியாக அளித்தேன் என்னை ஒன்றிய அரசு பாதுகாக்கும் என்று நம்புகிறேன் என்றும் மேத்தா குறிப்பிட்டார். இந்த வாக்குமூலத்தை வெளிப்படையாகவே 1993இல் ஹர்ஷத் மேத்தா வெளியிட்டார். இந்த மோசடி வழக்கில் தேசிய வங்கிகளின் பல உயர் அலுவலர்களும் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். இத்தகைய பெரும் பங்குச்சந்தை மோசடியை மேற்கொண்ட மேத்தாவிற்கு மும்பை நீதிமன்றம் ஐந்தாண்டு கடுங்காவல் சிறைத்தண்டனையும் 25000 தண்டத்தையும் 1999இல் அளித்தது. 2001இல் சிறையிலேயே இறந்துவிட்டார்.

ஒன்றிய அரசின் முன்னாள் தொலைத்தொடர்பு அமைச்சர் சுக்ராம் ஐதராபாத் நிறுவனத்திற்கு 30 கோடி மதிப்பிலான தொலைத் தொடர்பு சாதனங்களை அளிப்பதில் சலுகை அளித்து மூன்று இலட்சம் ரூபாய் லஞ்சம் 1996இல் பெற்றார் என்ற குற்றசாட்டின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, 2011இல் ஐந்து ஆண்டுகாலம் சிறைத்தண்டனை பெற்றார். இதனை உச்ச நீதிமன்றமும் உறுதி செய்ததால் இவர் சிறையிலடைக்கப்பட்டார். விசாரணை நீதிபதி பாண்டே பொது வாழ்வில் ஈடுபடும் அரசியல்வாதிகள் நேர்மைக்கு மாறாகச் செயல்படக் கூடாது அப்படிச் செயல்பட்டால் அவர்கள் தண்டனைக்கு உள்ளாவார்கள் என்பதை இந்த நீதிமன்றம் உறுதிபடுத்துகிறது என்று தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். இவரும் நீதிபதி மைக்கேல் டி.குன்காவிற்கு முன்னோடியாகவே மிக உயர்ந்த பதவியில் இருந்த ஒன்றிய அரசின் அமைச்சரை வயது 86 கடந்தவர் என்பதையும் பாராமல் தண்டனை அளித்தது குறிப்பிடத்தக்கது. வயது, உடல் நிலை பாதிப்புகளைக் காரணம் காட்டியும் இவரைச் சிறையில் இருந்து விடுதலை செய்யவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

**- தொடரும்**

# என் முன்னுள்ள பணிகளும், நானும்

என் முன்னுள்ள பணிகள் மூன்று ஆகும்.

என் உடல்நிலையில் எனக்கு 11.3.2017 சனி மாலையில் அய்யம் ஏற்பட்டது.

11 - அன்று, கிருட்டிணகிரியில் தோழர் குயில்தாசன் அவர்கள் விருப்பப்படி, பிற்பகலில் 3 மணிநேரம் ''வகுப்புவாரி விகிதாசார இடப்பங்கீடு'' பற்றி வகுப்பு நடத்தினேன். என்றுமே இல்லாத களைப்பை உணர்ந்தேன்.

நேரே அவருடைய மள் வீட்டுக்குச் சென்று, குயில்தாசன் அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு, இரவு 7 மணிக்குப் புறப்பட்டு, வாணியம்பாடி, மா.பெ.பொ.க. செயலாளர் நா. மதனகவி இல்லம் அடைந்தேன். உணவுக்குப்பின், நானும் அவரும் ஒரு விடுதியில் உறங்கினோம்.

12.3.2017 பகலில் அம்பத்தூர் அறக்கட்டளையை அடைந்தேன்.

உடல் சோர்வை நன்கு உணர்ந்தேன்.

வழக்கம்போல், தோழர் அ. மதிவாணன் அவர்கட்கும் அவருடைய துணைவியார் ராணி அவர்கட்கும் தொலைப்பேசி செய்து அடுத்த நாள் 13.3.2017 திங்கட்கிழமை அரசு தலைமை மருத்துவமனையில் சேர்த்துவிடும்படி வேண்டினேன். அவர்கள் மருத்துவ மனையில் நேரில் பேசிவிட்டு, 14.3.2017 செவ்வாய் காலை 8 மணிக்குச் சேர்த்துவிட ஏற்பாடு செய்தனர்.

எப்போதும்பேல் வேண்டிய பொருள்களுடன் கலச. இராமலிங்கம் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். தோழர் அ. மதிவாணன் உள்ளக மருத்துவரிடம் (R.M.O.) முதியோர் நலப்பிரிவு தலைமை மருத்துவரிடமும் எங்களை அழைத்துச் சென்று, எல்லா விவரங்களையும் என்னிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு, 14.3.2017 செவ்வாய் 1.00 மணிக்கு, பணம் செலுத்தும் படுக்கை உள்ள 246 - பிரிவில் (Ward) அறை எண்.I-இல் சேர்த்தனர்.

21.3.2017 வரை எட்டு நாள்கள் அவ்வறையில் தங்கிக்கொண்டு, எல்லா நோய்களுக்குமான ஆய்வுகளைச் செய்துகொள்ள அ. மதிவாணன், ராணி மதிவாணன், கலச. இராமலிங்கம், த. புகழேந்தி, முதுகலை மாணவர் அ. அழகன் ஆகியோர் துணைநின்றனர்.

1. செப்பமான ஆய்வுகளை 5 நாள்கள் மேற்கொண்டனர். நீரிழிவு, மூத்திரக்கோளாறு தவிர எந்த நோயும் இல்லை என்று விவரமாகப் பதிவு செய்தனர்.

2. என் வாய்மொழியைக் கொண்டு 92 வயதுக்கு மீறி, நான் அலைவதும், படிப்பதும், எழுதுவதும் தவிர்க்கப்பட வேண்டும் என்று தலைமை மருத்துவர் அறிவுறுத்தினார். அது என்னால் தவிர்க்கப்பட வாய்ப்பு இல்லை என்று மருத்துவர்களிடமே தெரிவித்தேன். அதில் நான் உறுதியாக உள்ளேன். என் முன்னுள்ள பணிகள் அப்படிப்பட்டவை என நான் திடமாக நம்புகிறேன்.

3. மூக்குப்பொடி போடுவதைக் கைவிட, மருத்துவர்கள் அறிவுறுத்தினர். 64 ஆண்டுகளாகப் பயன்படுத்தி வந்த பொடியை, 17.3.2017 பிற்பகல் நிறுத்திவிட்டேன். அதனால் என் உடலில் இன்றுவரை புற்றுநோய் அறிகுறி ஏதும் இல்லை என்பதையும் இப்போது உறுதிசெய்து கொண்டேன். இது, நான் பெற்ற பெரிய திருத்தம் ஆகும்.

என் முன்னுள்ள பணிகள் மூன்று ஆகும்.

1. முதலாவது, ''சிந்தனையாளன்'' இதழை நிலைப்படுத்திட எல்லாம் செய்தல்;

2. அறக்கட்டளை செப்பமாக நடத்தப்படவும், தத்துவப் பயிற்சி வகுப்பு தொடர்ந்து நடத்தப்படவும் எல்லாம் செய்தல்;

3. பெரியார் வரலாறு எழுதி முடிக்கப்பட எல்லாம் செய்தல்.

இவற்றுக்கே இன்னும் மூன்று ஆண்டுகள் நான் நலமாக இருக்க வேண்டும்; இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும். இதற்கு இயக்கத்தார் ஆவன செய்யுங்கள். என் குடும்பத்தினர் என்றும்போல் துணைபுரிவர்.

அன்பன்,

23.3.2017 வே. ஆனைமுத்து

# உள்நாட்டு — அயல்நாட்டுப் பயன்பாட்டுக்கான பளிங்குக் கல் பகற்கொள்ளை உ. சகாயம் ஆணையம் கண்ட உண்மையின் பேரில், நடவடிக்கை எங்கே?

சென்னை உயர்நீதிமன்ற ஆணையின்படி, தமிழ்நாட்டில் நீண்டகாலமாக - உரிமம் பெற்றதற்கு மாறாக அரசுப் புறம்போக்கிலும் ஓடைப்புறம் போக்கிலும், தனியார் நிலத்திலும் பளிங்குக் கற்களைத் தோண்டியெடுத்துத் தனியார் கொள்ளையடித்ததனால் ஏற்பட்ட இழப்பைக் கண்டுபிடிக்க திரு. உ. சகாயம் ஒரு நபர் ஆணையராக அமர்த்தப்பட்டார்.

தமிழ்நாட்டு அரசுக்கு வரவேண்டிய 1.10 இலக்கம் கோடி ரூபா வருமானம் இல்லாமல் போய்விட்டதாக, ஒரு நபர் ஆணையராக அமர்த்தப்பட்ட திரு. உ. சகாயம் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தம் ஆய்வு அறிக்கையை, 2015ஆம் ஆண்டு நவம்பரில், சென்னை உயர்நீதிமன்றத்தாரிடம் ஒப்படை செய்தார்.

**அந்த அறிக்கையிலுள்ள விவரங்கள் எல்லோரையும் திடுக்கிட வைப்பவை.**

பளிங்குக் கல் வெட்டியெடுக்கும் நிலத்துக்கு உரிமம் கேட்டு விண்ணப்பிக்கும் போதே கையூட்டு தரப்படுகிறது; அரசு அதிகாரிகள், நிலங்களின் பயன்பாட்டு வகை விவரங்களை (land use) வேண்டுமென்றே மறைத்துவிட்டனர். அதனால் கல்வெட்டியெடுப்பதை எல்லா வகை நிலங்களிலும் குத்தகைக்காரர்கள் மேற்கொண்டனர்.

தாம் ஆய்வு செய்த 175 திட்டங்களிலும் - அரசு அதிகாரிகளால், உண்மையை மறைத்துவிட்டே திட்டம் தயார் செய்யப்பட்டதைக் காணமுடிந்தது.

அதாவது, கல்வெட்டியெடுக்க ஏலம் தரப்படும் பகுதிகளிலுள்ள சில சிற்றூர்களையே (hamlets) திட்டத்தில் காட்டவில்லை; நீர்ப்பிடிப்புப் பகுதிகள் (Water bodies) இருப்பதைக் காட்டவில்லை; தொல்லியல் துறைப் பாதுகாப்பிலுள்ள இடங்களை அடையாளம் காட்டவில்லை. இவற்றைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமலேயே உரிமங்கள் (Licences) குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளனன. அதனால் குத்தகைக்கு உரிமம் பெற்றவர்கள், தாங்கள் வெட்டக்கூடாத இடங்களில் எல்லாம் கற்களை வெட்டி எடுத்துள்ளனர். இந்த ஆக்கிரமிப்புகளைப் பொதுப் பணித்துறை அதிகாரிகளோ, ஊர்ப்புற வளர்ச்சித் துறை அதிகாரிகளோ ஏரெடுத்தும் பார்க்கவில்லை.

"தமிழ்நாடு கனிம வளர்ச்சித் துறை" (TAMIN) அய்யத்துக்கு இடமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது; சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகளை அது அனுமதித்துள்ளது.

மேலும் PRP என்னும் குழுமம் மதுரை, தேனி மாவட்டங்களில் - 1961ஆம் ஆண்டைய நில உச்சவரம்புச் சட்டத்தை மீறி, 20,000 ஏக்கர் நிலங்களைச் சொந்தமாகக் கிரயத்துக்கு வாங்கியுள்ளனர்.

இவ்வளவும் - தி.மு.க. - அ.இ.அ.தி.மு.க. என்கிற இரண்டு திராவிடக் கட்சிகளின் ஆட்சிக் காலத்தில்தான் நடந்தன.

தமிழ்நாட்டின் கனிமவளம் பகற்கொள்ளை போகிறது.

- வழிப்போக்கன்

---

## உலகத்தில் 2017இல் மிக மகிழ்ச்சியான நாடாக ஒளிருவது நார்வே!

குளிர்மிகுந்த நாடான நார்வே - 2017ஆம் ஆண்டில் உலகின் மிக மகிழ்ச்சியான நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அய்.நா.வின் மதிப்பீட்டின்படி, 2016-இல் நான்காவது இடத்திலிருந்த நார்வே, 2017இல் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது.

நார்வேயை அடுத்து மகிழ்ச்சியில் திளைக்கும் நாடுகள், அதனை அடுத்து உள்ள டென்மார்க், அய்ஸ்லாந்து, ஸ்விட்சர்லாந்து முதலானவையாகும்.

உலகில், மேலே கண்ட நான்கு நாடுகளும் மகிழ்ச்சி தரும் கூறுகளான மக்களின் நலனில் அக்கறை (Caring), கருத்துச் சுதந்தரம் (Freedom), ஒருவர்பால் ஒருவர் அன்பு செலுத்துதல் (Generocity), நாணயம் (Honesty), உடல்நலம் பேணல் (Health), போதிய வருமானம் பெறல் (Income), நல்லாட்சி (Good Governance) இவற்றைப் பெற்று, மிக மகிழ்ச்சியான நாடுகளாக ஒளிருகின்றன.

- அய்.நா. செய்தி

# மத்திய பல்கலைக்கழகங்கள் தலித் மாணவர்களின் பலிபீடங்களா?

- க. முகிலன்

தில்லியில் உள்ள புகழ்பெற்ற சவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் ஆய்வு மாணவராக இருந்த, சேலம் அரசிப்பாளையத்தைச் சேர்ந்த, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 27 அகவையினரான முத்துக்கிருட்டிணன் 13.3.2017 அன்று தற்கொலை செய்துகொண்டார். பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருந்த அவர், பல்கலைக்கழகத்துக்கு அருகில் உள்ள முனிர்கா பகுதியில் உள்ள தனது நண்பரின் வீட்டில் மர்மமான முறையில் தூக்கில் தொங்கிய நிலையில் அவர் உடல் மீட்கப்பட்டது.

2016 அக்டோபர் மாதம் தான் பெருங்கனவுகளோடு சவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் (ஜே.என்.யு.) ஆய்வு மாணவராகச் சேர்ந்தார். முதுகலைப் படிப்பை அய்தராபாத் பல்கலைக்கழகத்தில் முடித்தவர். ஜே.என்.யு.வில் நேர்காணலில் முத்துக்கிருட்டிணன் பேசிய ஆங்கிலம் தரமற்றதாக இருக்கிறது என்ற காரணத்தால் வாய்ப்பு மறுக்கப்பட்டது. அதன்பின் ஓராண்டு கடுமையாக முயன்று தன்னுடைய ஆங்கில மொழித்திறனை வளர்த்துக் கொண்டு ஜே.என்.யு.வில் இடம்பிடித்தார். தன்னுடைய ஆர்வம், முயற்சி, எதிர்காலக் கனவு பற்றி தன் முகநூலில் பதிவு செய்துள்ளார். அய்தராபாத் பல்கலைக்கழகத்தில் படித்த போது ரோகித் வெமுலாவின் தற்கொலை தொடர்பான போராட்டங்களில் முன்னணியில் நின்றார்.

தற்கொலை செய்துகொண்டதற்கு முதல் நாள் 12.3.2017 ஞாயிறு மாலை சேலத்தில் உள்ள தன் குடும்பத்தினருடன் முத்துக்கிருட்டிணன் தொலைப்பேசியில் மகிழ்ச்சியுடன் பேசியிருக்கிறார். அடுத்த கிழமை சேலத்துக்கு வரப்போவதாகவும் கூறியிருக்கிறார். முத்துக்கிருட்டிணனின் தந்தை ஜீவானந்தம் தனியார் நிறுவனத்தில் காவலர் வேலை செய்கிறார். தாய் அலமேலு கூலி வேலை செய்பவர். கலைவாணி, ஜெயந்தி, சுபா என்கிற மூன்று தங்கைகள். முத்துக்கிருட்டிணன் தற்கொலை செய்து கொண்ட செய்தி இந்த ஏழைத் தலித் குடும்பத்தின்மீது பேரிடியாய் விழுந்தது.

ஜே.என்.யு.வின் அம்பேத்கர் - புலே மாணவர் சங்கத்தின் பொறுப்பாளர்களில் ஒருவரான பாலகங்காதர், “தற்கொலை செய்துகொண்ட அறையில் நான் பார்த்த போது, முத்துக்கிருட்டிணனின் கால்கள் தரையில் ஊன்றியபடி இருந்தன. எனவே, இந்த மரணத்தில் மர்மம் உள்ளது. இதை மத்தியப் புலனாய்வுத் துறை விசாரிக்க வேண்டும். முத்துக்கிருட்டிணன் தன்னுடைய அறையில் தற்கொலை செய்து கொள்ளாமல், நண்பரின் அறையில் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறுவதை என்னால் நம்ப முடியவில்லை” என்றுகூறி இருக்கிறார். முத்துக்கிருட்டிணனின் தந்தையும் தன் மகன் தற்கொலை செய்துகொள்ள வாய்ப்பே இல்லை; அதனால் புலனாய்வுத் துறை விசாரணை செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

தில்லியிலிருந்து முத்துக்கிருட்டிணன் உடல் 15.3.2017 அன்று இரவு சேலம் அரிசிப்பாளையத்துக்குக் கொண்டுவரப்பட்டது. 16.3.2017 அன்று ஜெய்பீம் முழக்கத்துடன் அவர் உடல் அடக்கம் செய்யப்பட்டது. இறுதி நிகழ்ச்சியில் பேசிய பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள், முத்துக்கிருட்டிணனின் இறப்பு குறித்து மத்தியப் புலனாய்வுத் துறையின் விசாரணை நடத்தப்பட வேண்டும்; அவரின் குடும்பத்துக்கு ஒரு கோடி உருபா நிதி வழங்க வேண்டும். முத்துக்கிருட்டிணனின் தங்கையர் மூவருக்கும் அரசுப் பணி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த நடுவண் அமைச்சர் நிர்மலா சீதாராமன் முயற்சியால், முத்துக்கிருட்டிணனைத் தற்கொலைக்குத் தூண்டியதாக இந்திய தண்டனைச் சட்டம் 306ஆவது பிரிவு மற்றும் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தில்லி காவல் துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. இது வெறும் வழக்காகவே நின்றுவிடுமோ? குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்களா?

திருப்பூரைச் சேர்ந்த சரவணன் என்கிற தலித் மாணவர் தில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் (எய்ம்ஸ்) மருத்துவத்தில் முதுகலை முதலாமாண்டு படித்துக் கொண்டிருந்தார். சரவணன் 2016 சூலை மாதம் அவருடைய அறையில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். இது தற்கொலை என்று கூறப்பட்டது. ஆனால் அவரது உடற்கூறு ஆய்வில் அது கொலை என்று கூறப்பட்டது. கொலை வழக்காகக் காவல் துறையால் பதிவு செய்யப்பட்டது.

சேலத்தைச் சேர்ந்த செந்தில்குமார் என்பவர் தலித் மாணவர். அவருடைய பெற்றோர் பன்றி வளர்க்கும் தொழில் செய்யும் பன்னியாண்டி பிரிவைச் சேர்ந்தவர்கள். அப்துல்கலாம் போல் அறிவியல் அறிஞராக வேண்டும் என்று செந்தில்குமார் சொல்லிக் கொண்டிருந்தார். இயற்பியல் எம்.எஸ்.சி. படிப்பை மதுரை அமெரிக்கன் கல்லூரியில் முடித்தார். எம்.ஃபில். படிப்பை புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் படித்தார். முனைவர் பட்டப் படிப்பிற்காக அய்தராபாத் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அங்கு இயற்பியல் துறையில் அவர் தலித் என்பதால் புறக்கணிக்கப்பட்டார். முனைவர் பட்ட ஆய்வுக்கான தலைப்பை முடிவு செய்தல், நெறியாளரை (guide) முடிவு செய்தல் போன்றவற்றில் காலம் தாழ்த்திக் கொண்டே இருந்தனர். இந்நிலையில் 2008 பிப்பிரவரி 24 அன்று அவருடைய அறையில் மூக்கில் குருதி வழிந்த நிலையில் பிணமாகக் கிடந்தார். உடற்கூறு ஆய்வில் அவருடைய உடலில் நஞ்சு கலந்ததிருப்பதாகக் கண்டறியப்பட்டது. தமிழகத்தில் சிலர் மேற்கொண்ட முயற்சியால் அய்தராபாத் பல்கலைக்கழகம் செந்தில்குமார் குடும்பத்துக்கு அய்ந்து இலட்சம் உருபா வழங்கியது.

2016 சனவரி 17 அன்று முனைவர்பட்ட ஆய்வு மாணவர் ரோகித் வெமுலா தற்கொலை செய்துகொண்டபோது பல்கலைக்கழகத்திலும் இந்தியாவின் பல்வேறு இடங்களிலும் எதிர்ப்புப் போராட்டங்கள் நடந்ததுபோல், செந்தில்குமார் தற்கொலை செய்துகொண்டபோது நடக்கவில்லை.

நடுவண் அரசின்கீழ் இயங்கும் ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம். போன்ற நிறுவனங்களிலும் மத்தியப் பல்கலைக்கழகங்களிலும் உயர் கல்வியில் சேரும் தலித் மாணவர்கள், உடன்பயிலும் மேல்சாதி மாணவர்களாலும், நிருவாகத்தாலும், பேராசிரியர்களாலும் தீண்டப்படாதவர்கள் என்கிற அடிப்படையில் பலவகையான அவமானங்களுக்கும் புறக்கணிப்புகளுக்கும், துன்பங்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

தலித் மாணவர்கள் தாம் பிறந்து வளர்ந்த ஊர்-சேரி என்கிற சாதிய ஆதிக்க ஒடுக்குமுறையின் கொடுமைகளிலிருந்து விடுபட்டு, சுதந்தரமான, சமத்துவமான சூழல் பல்கலைக்கழகங்களில் நிலவும் என்கிற எதிர்பார்ப்புடன் உயர்கல்வியில் சேருகின்றனர். ஆனால் உயர்கல்வி நிறுவனங்களிலும் தீண்டப்படாதவர் என்ற காரணத்தால் பல நிலைகளிலும் தாங்கள் பாகுபாடாக நடத்தப்படுவதையும், புறக்கணிக்கப்படுவதையும், அவமானப்படுத்தப்படுவதையும், மிரட்டப்படுவதையும் கண்டு பேரதிர்ச்சிக்குள்ளாகின்றனர். மண்டையைக் குடையும் மனஉளைச்சலுக்கு ஆளாகின்றனர். அந்நிலையில் தலித் மாணவர்கள் தங்கள் துயரத்தைத் தங்கள் குடும்பத்தினருடனும் பகிர்ந்து கொள்ள முடியாமல் தவிக்கின்றனர். இந்த சமூகத்தின் மீதும் அரசமைப்பு மீதும் நம்பிக்கை இழக்கின்றனர். இத்துன்பங்களைத் தாங்கும் உள்ள உரன் கொண்ட தலித் மாணவர்கள் தங்கள் படிப்பைத் தொடர்கின்றனர். முடியாதவர்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர். இந்தியா சுதந்தரம் பெற்று எழுபது ஆண்டுகளாகும் நிலையிலும் மத்தியப் பல்கலைக்கழகங்களில் தீண்டாமையின் கொடுமையால் தலித் மாணவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுவது மாபெரும் வெட்கக் கேடாகும்.

மேதை அம்வேத்கர் 1930, 1951 ஆகிய ஆண்டுகளில் இலண்டனில் நடைபெற்ற முதலாவது, இரண்டாவது வட்டமேசை நாடுகளில் தன் ஒப்பரிய அறிவாற்றலால் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு அரசியலில் தனி வாக்காளர் தொகுதி உரிமையைப் பெற்றுத் தந்தார். “இது இந்துக்களைப் பிளவுபடுத்துவதாகும். எனவே பிரித்தானிய அரசு இந்த ஆணையைத் திரும்பப் பெற வேண்டும்” என்ற கோரிக்கையை முன்வைத்து காந்தியார் 1932 செப்டம்பரில் சாகும்வரை உண்ணாநோன்பு போராட்டத்தை மேற்கொண்டார். அதனால் கடுமையான நெருக்கடியான சூழலில் அம்பேத்கர் தனி ஒதுக்கீட்டுடன் கூடிய பொது வாக்காளர் தொகுதி முறையை ஏற்க நேரிட்டது.

தீண்டப்படாத வகுப்பு மக்கள் அம்பேத்கரின் பின்னால் அணிதிரண்டு இருக்கும் நிலையை உடைக்கும் நோக்குடன் தீண்டப்படாதவர்கள் “கடவுளின் பிள்ளைகள்” என்ற பொருள்படும் ‘அரிஜன்’ என்ற பெயரில் அழைக்கப்பட வேண்டும் என்றார், காந்தியார். ‘அரிஜன்’ என்ற பெயரில் ஒரு ஏட்டைத் தொடங்கினார். சாதி இந்துக்கள் தீண்டாமையைக் கடைப்பிடிக்கக் கூடாது என்று கூறி ஓராண்டு காலம் இந்தியா முழுவதும் பரப்புரை செய்தார்.

இந்தப் பின்னணியில், பத்து ஆண்டுகள் கழித்துக் காங்கிரசுக்காரர்கள் காந்தியாரின் முயற்சியால் தீண்டாமை மறைந்து வருகிறது; இனியும் தீண்டப்படாதவர்களை ஒரு தனி பிரிவினராகக் கருத வேண்டுமா? என்ற வினாவை எழுப்பினர். இந்த வினாவுக்குள் ஒளிந்துகொண்டிருக்கும் மேல்சாதி ஆதிக்கத்தை உணர்ந்த மேதை அம்பேத்கர் அவர்களுக்குப் பின்வருமாறு பதிலடி கொடுத்தார் :

“இந்த வாதத்தை எழுப்புகிறவர்கள் “என்னைத் தொடாதே” என்ற முறையிலான தீண்டாமைக்கும் சமூகப் பாகுபாட்டில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் மனப்போக்கு என்ற முறையிலான தீண்டாமைக்கும் இடையில் வேறுபடுத்தி பார்ப்பதாகத் தெரியவில்லை. இரண்டும் அறவே வெவ்வேறானவை. “என்னைத் தொடாதே” என்ற முறையிலான தீண்டாமை நகரங்களில் பையப்பைய மறைந்து கொண்டிருக்கலாம்; என்றாலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா என்பது எனக்கு அய்யமே! ஆனால் தீண்டப்படாத மக்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்ட வேண்டும் என்ற அளவில் இந்துக்களிடம் ஒரு மனப்போக்காக இருக்கின்ற தீண்டாமையானது கற்பனைக் கெட்டக்கூடிய காலத்திற்குள் நகரங்களிலோ கிராமங்களிலோ மறைந்து போகாது என்று நான் உறுதியாகக் கருதுகிறேன்.” (காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாத மக்களுக்குச் செய்தது என்ன? - நூல் 1945).

“தீண்டாமையைக் கடைப்பிடிப்பது பாவம்” என்கிற காந்தியாரின் கூற்று பள்ளிப்பாட நூல்களில் தனியாக அச்சிடப்படுகிறது. “தீண்டாமையைக் கடைப்பிடிப்பது தண்டனைக்குரிய குற்றம்” என்று இந்திய அரசமைப்புச் சட்டத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் அம்பேத்கர் 1945இல் கூறிய, தீண்டப்படாதவர்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டும் சாதி இந்துக்களின் மனப்போக்கு 2017ஆம் ஆண்டிலும் நீடிக்கிறதே! தீண்டாமையின் வடிவங்களில் வெளிப்பாடுகளில் மட்டும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

மனுஸ்மிருதி உள்ளிட்ட இந்துமத சாத்திரங்களில் பார்ப்பனர்களுக்கு மட்டுமே கல்வி கற்கும் உரிமையும், கற்பிக்கும் உரிமையும் உண்டு; சத்ரியர், வைசியருக்கு கற்கும் உரிமை மட்டும் உண்டு; சூத்திரர்களுக்கும் பஞ்சமர்களுக்கும் கல்வி உரிமை இல்லை என்று விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்த விதியை மீறி, சூத்திரன் வேதம் ஓதினால் அவன் நாக்கை அறுக்க வேண்டும்; வேதம் ஓதுவதைக் காதால் கேட்டால், காதில் காய்ச்சிய ஈயத்தை ஊற்ற வேண்டும். இந்தியத் துணைக்கண்டத்தில் 1500 ஆண்டுகளுக்கு மேலாக இதுவே சமூக வழக்கமாக - ஆட்சியின் சட்டமாக இருந்தது.

பிரித்தானிய ஆட்சியில் 1835இல் மெக்காலே, கல்வித் திட்டத்தின்படி பொதுப் பள்ளிகளும், கல்லூரிகளும் தொடங்கப்பட்டன. கல்வியைப் பார்ப்பனர்களே பெரிதும் கைப்பற்றிக் கொண்டனர். பிறகு பிற மேல் சாதியினரும் உயர்கல்வியில் நுழைந்தனர். சுதந்தர இந்தியாவில் தொடங்கப்பட்ட மத்தியப் பல்கலைக்கழகங்கள், பிற உயர் கல்வி நிறுவனங்கள் பார்ப்பனர் - பிற மேல்சாதியினரின் கோட்டையாகவே இருந்தன. நடுவண் அரசு வேலைகளில் பிற்படுத்தப்பட்டோருக்கான 27 விழுக்காடு ஒதுக்கீடு 1990இல்தான் அளிக்கப்பட்டது. இது 1994இல் தான் நடைமுறைக்கு வந்தது. மத்திய உயர்கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு 2007ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. 2008இல் நடப்புக்கு வந்தது. அதுவும் ஆண்டிற்கு 9 விழுக்காடு மேனியில் மூன்று ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இது முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே மேல்சாதியினரின் முற்றுரிமையாக இருந்த உயர்கல்வியில் பிற்படுத்தப்பட்டவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் இடம்பெறுவதை இந்நிறுவனங்களின் பேராசிரியர்களும் மேல்சாதி மாணவர்களும் நிருவாகமும் பலவகையிலும் தடுக்க முயல்கின்றனர்.

மத்தியக் கல்வி நிறுவனங்களில் 1999-2004 காலத்தில் வாஜ்பாய் தலைமை அமைச்சராக இருந்தபோது இந்துத்துவ சக்திகளின் ஆதிக்கம் வளர்ந்தது. குறிப்பாக, அகிலபாரத வித்தியார்த்தி பரிசத் (ABVP - ஏபிவிபி) எனும் ஆர்.எஸ்.எஸ்.இன் மாணவர் அமைப்பின் அடாவடித்தனம் பெருகியது. ஏபிவிபி, 1951இல் ஜனசங்கம் கட்சியை ஆர்.எஸ்.எஸ். தொடங்குவதற்கு முன்பே உருவாக்கிய மாணவர் அமைப்பாகும். 2014இல் மோடி தலைமை அமைச்சராக வந்த பிறகு மத்தியப் பல்கலைக்கழகங்களில் இந்துத்துவத்துக்கு எதிராகச் செயல்படுவோரை ஆட்சி அதிகாரத்தின் துணையுடன் ஒடுக்குகின்றனர்.

சென்னை ஐ.ஐ.டி.யில் அம்பேத்கர் - பெரியார் படிப்பு வட்டம் செயல்பட்டு வந்தது. இது இந்துத்துவத்துக்கும் மோடியின் ஆட்சிக்கும் எதிரான கருத்துகளைக் கூறுகிறது என்ற காரணத்தால் அப்போது மனிதவள மேம்பாட்டு அமைச்சராக இருந்த ஸ்மிருதி இரானி 2015 ஏப்பிரல் 14 அன்று அம்பேத்கர்-பெரியார் வாசகர் வட்டத்தைத் தடைசெய்தார். இதில் வேடிக்கை என்னவெனில், சென்னை ஐ.ஐ.டி.யில் வியாசர், வசிஷ்டர், தூர்வாசர் ஆகிய புராண காலத்துப் பெயர்களில் படிப்பு வட்டங்கள் இயங்கி வருகின்றன. அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டம் தடைசெய்யப்பட்டதற்கு இந்திய அளவில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டதால் அதன் மீதான தடைவிலக்கிக் கொள்ளப்பட்டது.

அடுத்து, மத்தியப் பல்கலைக்கழகமான அய்தராபாத் பல்கலைக்கழகத்தில் இந்துத்துவத்துக்கு எதிராகச் செயல்பட்ட அம்பேத்கர் மாணவர் அமைப்பின் முன்னணிச் செயல்வீரராக விளங்கிய ரோகித் வெமுலா, மோடியின் அமைச்சர்களும் துணைவேந்தரும் ஏபிவிபி மாணவர் தலைவர் சுசில்குமாரும் கூட்டாகச் சேர்ந்து தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளினர்.

2015 ஆகத்து மாதம் அம்பேத்கர் மாணவர் சங்கத்தினர் யாகுப் மேனன் தூக்கிலிடப்பட்ட நினைவுநாளை மரணதண்டனைக்கு எதிரான நாளாகக் கடைப்பிடித்தனர். மரண தண்டனைக்கு எதிராக உரையாற்றினர். "இன்றும் எத்தனை யாகுப் மேனன்களைத் தூக்கிலிட வேண்டும்?" என்ற பதாகையை ஒரு மாணவர் கையில் ஏந்தியிருந்தார். அய்தராபாத் பல்கலைக்கழகத்தின் ஏபிவிபி மாணவர் சங்கத்தின் தலைவர் சுசில்குமார், அம்பேத்கர் மாணவர் அமைப்பினர் மரணதண்டனைக்கு எதிராக நடத்திய நிகழ்ச்சியின் புகைப்படத்தை முகநூலில் வெளியிட்டு, "குண்டர்கள் ரவுடித்தனத்தைப் பற்றிப் பேசலாமா?" என்று பதிவு செய்தார்.

இப்பதிவைப் பார்த்த அம்பேத்கர் மாணவர் சங்கத்தினர் சுசில்குமாரிடம் மன்னிப்பு கேட்குமாறு வலியுறுத்தினர். அப்போது அவர்களுக்கிடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. தன்னை அம்பேத்கர் சங்க மாணவர்கள் தாக்கியதாக மருத்துவமனையில் சேர்ந்தார். அதற்கு முன்பே அவருக்கு இருந்த குடல்வால் சிக்கலுக்காக அறுவை செய்து கொண்டார். தலித் மாணவர்கள் தாக்கியதாகக் கூறப்படுவதற்கும் குடல்வால் சிக்கல் இருப்பதற்கும் தொடர்பு இல்லை என்று மருத்துவர்கள் அறிக்கை அளித்தனர்.

ஆயினும் சுசில்குமார் நடுவண் அரசின் தொழிலாளர் நல துணை அமைச்சர் பண்டாரு தத்தாத்ரேயாவுக்கு, அய்தராபாத் பல்கலைக்கழகம் தேச விரோத சக்திகளின் - சாதி வெறியர்களின் கூடாரமாகிவிட்டதாக மடல் எழுதினார். ஏபிவிபி மாணவர் தலைவரிடமிருந்து அம்மல் வந்ததால், அம்மடலை மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானிக்கு அனுப்பினார். சுமிருதி இரானி இதன்மீது நடவடிக்கை எடுக்குமாறு துணைவேந்தருக்கு அம்மடலை அனுப்பினார்.

சாதிவெறி பிடித்த பார்ப்பனரான துணைவேந்தர் அப்பாராவ் 2015 திசம்பர் 16 அன்று ரோகித் வெமுலா உள்ளிட்ட அய்ந்து தலித் மாணவர்களை விடுதியிலிருந்து வெளியேற்றினார். வகுப்பறை தவிர பல்கலைக்கழகத்தின் எந்தவொரு இடத்திலும் புழங்குவதற்குத் தடைவிதித்தார். 2015 சூலை முதல் கல்வி உதவித் தொகை நிறுத்தப்பட்டது. ரோகித் வெமுலாவும் அவரின் நண்பர்களும் 15 நாள்கள் பல்கலைக்கழகத்தின் திறந்தவெளியில் தங்கினர். போராட்டம் நடத்தினர். மனஉளைச்சலுக்குள்ளாகிய ரோகித் 17.1.2016 அன்று விடுதியில் நண்பரின் அறையில் தற்கொலை செய்து கொண்டார். நெஞ்சை உருக்கும் ஒரு மடலை எழுதியிருந்தார்.

ரோகித் வெமுலாவின் தற்கொலை இந்திய அளவில் பெரும் எதிர்ப்பு அலைகளை எழுப்பியது. அதன் விளைவாக நடுவண் அமைச்சர் பண்டாரு தத்தாத்ரேயா, துணைவேந்தர் அப்பாராவ், ஏபிவிபி மாணவர் தலைவர் சுசில்குமார் ஆகியோர்மீது ரோகித் வெமுலாவைத் தற்கொலைக்குத் தூண்டியதாகவும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழும் காவல்துறை வழக்குப் பதிவு செய்தது. தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் அமைத்த ஆய்வுக்குழுவும் ரோகித் வெமுலாவின் தற்கொலைக்கு அய்தராபாத் பல்கலைக்கழக நிர்வாகமே காரணம் என்று கூறியது. ஆனால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஏன் கைது செய்யப்படவில்லை?

இந்துத்துவ பா.ச.க. தனக்கே உரிய சூழ்ச்சியுடன் ரோகித் வெமுலா தலித் அல்ல என்ற பிரச்சனையை எழுப்பியது. ரோகித் வெமுலாவின் கல்விச் சான்றுகளில் அவர் தலித் என்றுதான் இருக்கிறது. அவர் இறந்த பிறகு குண்டூர் மாவட்ட ஆட்சியர் ரோகித் தலித் தான் என்று தேசிய தாழ்த்தப்பட்டோர் நல ஆணையத்துக்கு அறிக்கை அனுப்பினார். எனவே பா.ச.க. ரோகித்தின் தம்பி இராசா வெமுலாவின் தலித் சான்று போலியானது என்று மெய்ப்பிக்க நடவடிக்கை எடுத்தது.

"இந்து தர்ம இரட்சக் சங்" என்கிற அமைப்பைச் சேர்ந்த தர்சனப்பு சீனிவாசு எனும் தலித் மூலம், ரோகித்தின் தம்பி இராசா தலித் என்று போலியான சான்று வாங்கியிருப்பதை இரத்து செய்ய வேண்டுமென்று குண்டூர் மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பம் அனுப்பினார்.

ரோகித்தின் தாய் இராதிகா தாழ்த்தப்பட்ட வகுப்பினர். இராதிகாவின் கணவர் கல்லுடைக்கும் தொழில் செய்யும் மிகப்பிற்படுத்தப்பட்ட சாதியினர். இராதிகாவின் மூன்று குழந்தைகளும் பிறந்த பின் குடிகாரரான கணவர் வீட்டைவிட்டு ஓடிவிட்டார். மூன்று குழந்தைகளையும் இராதிகா அரும்பாடுபட்டு வளர்த்தார்.

இந்தப் பின்னணியில் ரோகித்தும், இராசாவும் தலித் அல்லர் என்ற வாதத்தை பா.ச.க. முன்வைக்கிறது.

சீனிவாசு அனுப்பிய விண்ணப்பத்தை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட 15 பேர் கொண்ட குழு, ‘‘குழந்தைகளாக இருக்கும் போதே உன் கணவர் பிரிந்து சென்றுவிட்டபின் யாருடைய உதவியைக் கொண்டு உன் குழந்தைகளை வளர்த்தாய்?’’ என்று இராதிகாவின் கற்பை இழிவுபடுத்தும் வகையில் கேள்வி கேட்டு அவமானப்படுத்தியது. இக்குழு இராசா வெமுலா தலித் அல்ல என்று முடிவு செய்தது.

இந்த மூடர்களின் முடிவு நீதிமன்றத்தில் நிற்காது. ஏனெனில் 2012இல் உச்சநீதிமன்ற நீதிபதிகள் அஃப்தப் ஆலம், ஆர்.பி. தேசாய் ஆகியோர் இதுகுறித்துத் தெளிவான தீர்ப்பை வழங்கியுள்ளனர். ஒரு பழங்குடி இனப்பெண் சத்திரிய வகுப்பு ஆணைத் திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்குக் குழந்தை பிறந்த பின் கணவன் பிரிந்து சென்றுவிட்டார். அவர்களின் குழந்தை எந்தச் சாதி என்பதே வழக்காகும். உச்சநீதிமன்ற நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில், ‘‘ஒரு தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடி இனப்பெண் வேறு சாதி ஆணைத் திருமணம் செய்து கொண்டபின், கணவன் இறந்தாலோ அல்லது அவன் தன் மனைவியைக் கைவிட்டுப் பிரிந்து சென்றாலோ, அதன்பின் அப்பெண் தான் பிறந்த சாதியினர் வாழும் சூழலில், அக்குழந்தையை வளர்க்கும்போது, அக்குழந்தை, தாயின் சாதியைச் சார்ந்ததாகவே கருதப்பட வேண்டும்’’ என்று கூறியுள்ளனர். இராதிகாவின் மகன்களான ரோகித்தும், இராசாவும் தலித் சூழலில் தலித்தாகவே வளர்ந்தார்கள் என்பதால், பா.ச.க.வின் தீயநோக்கம் நிறைவேறாது. ரோகித் வெமுலாவின் தற்கொலைக்குக் காரணமானவர்களைத் தண்டிப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய அரசு, குற்றவாளிகளைக் காப்பாற்ற ரோகித் வெமுலாவின் குடும்பத்தினரை இழிவுபடுத்த முனைவது கடைந்தெடுத்த கயமை ஆகும்.

ரோகித் வெமுலா தற்கொலை செய்துகொண்ட அடுத்த மாதம் சவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் (ஜே.என்.யு.) ஏபிவிபி தன் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றது. ஜே.என்.யு.வின் மாணவர் சங்கத் தலைவராக இருந்த கண்ணைய குமார் பீகார் மாநிலத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். அவருடைய தாய் அங்கன்வாடியில் வேலை செய்பவர். கண்ணைய குமார் 12.2.2016 அன்று கைது செய்யப்பட்டார். கருத்துரிமையை நசுக்கும் இக்கைதைக் கண்டித்து உலக அளவில் கண்டனக் குரல்கள் எழுந்தன. கண்ணைய குமார் விடுதலையான பிறகும் இந்தியாவின் பல பகுதிகளில் கல்வி நிறுவனங்களில் இந்துத்துவப் பாசிசத்துக்கு எதிராக முழக்கம் செய்தார்.

ஆயினும் மோடியின் இந்துத்துவ ஆட்சியில் ஏபிவிபியினரின் அட்டூழியங்கள் தொடர்கின்றன. தில்லியில் ராம்ஜாஸ் கல்லூரியில் கருத்துச் சுதந்தரம் பற்றிய கருத்தரங்கில் 22.2.2017 அன்று ஜே.என்.யு.வின் மாணவத் தலைவர்கள் ஷீலாரஹீத், உமர்காலித் ஆகியோர் பேசவிருந்த கூட்டத்தைக் காலித்தனம் செய்து நடத்தவிடாமல் செய்தனர்.

நாக்பூரில் ஒரு பல்கலைக்கழகத்தில் ‘‘சனநாயகமும் அதன் விழுமியங்களும்’’ என்ற தலைப்பில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரும் சிறந்த படிப்பாளியுமான சீதாராம்யெச்சூரி பேசுவதாக இருந்த நிகழ்ச்சியை ஏபிவிபி குண்டர்கள் துணைவேந்தரை மிரட்டி இரத்துச் செய்யுமாறு செய்தனர். இந்த நிகழ்ச்சியை அம்பேத்கர் சிந்தனைகள் துறை ஏற்பாடு செய்திருந்தது.

நரேந்திர மோடி ஆட்சியில் இந்துத்துவ சக்திகளின் பாசிசப் போக்கை எதிர்த்து தாழ்த்தப்பட்டவர்களும் ஒடுக்கப்பட்ட பிற வகுப்பினரும் ஒன்றுபட்டுப் போராடாவிடில் உயர்கல்வி நிறுவனங்களில் தலித் மாணவர்களின் தற்கொலைகளைத் தடுக்க முடியாது.

முத்துக்கிருட்டிணன் முகநூல் பதிவு

# முயற்சியை விட்டுக்கொடுக்க நான் ஒருபோதும் விரும்பவில்லை!

முதல் இரண்டு முறை நான்
முறையாகப் பயின்றிருக்கவில்லை
ஆங்கிலத்தை.

ஆனாலும் முயற்சி செய்தேன்.
முயற்சியைக் கைவிட
விருப்பமில்லை எனக்கு.

ஒவ்வொரு ஆண்டும் ஜே.என்.யூ.வுக்குச்
செல்வதற்காகப் பல உடல் உழைப்பு
வேலைகளைச் செய்தேன்.

எறும்பைப் போல் பணம் சேமித்தேன்.
பணம் கேட்டுப் பிறரிடம் கெஞ்சினேன்.

முதல் இரண்டு முறை
தமிழகத்திலிருந்து புறப்பட்டேன்.

அடுத்த இரண்டு முறை
ஹைதராபாத் மத்தியப் பல்கலைக்கழகத்திலிருந்து.
ரயில் பயணத்தில் ஒருபோதும்
நான் உணவருந்தவில்லை.

‘இந்த முறை உனக்குக் கிடைத்துவிடும்’ என்று
ஒவ்வொரு ஆண்டும் உற்சாகப்படுத்துவார்கள்.
நானும் முயற்சி செய்தேன்.

ஏனெனில், விட்டுக்கொடுக்க நான் விரும்பவில்லை.
எப்போதும் நினைத்துக் கொள்வேன்
‘கடும் உழைப்பு ஒருபோதும் தோற்பதில்லை’ என்று.

ஒவ்வொரு ஆண்டும்
நேரு சிலையின்கீழ் அமரும்போதெல்லாம்
அவரிடம் கேட்பேன் :

‘‘நேருஜி, காங்கிரசுக்கு வாக்களிக்கும்
குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள்.
எனக்குக் கல்வி தர ஏன் நீங்கள் விரும்பவில்லை?’’

கடைசி நேர்காணலில்
11 நிமிடங்கள் பேசிய பின்னர்
ஒரு பெண் சொன்னார் -
நான் எளிய ஆங்கிலத்தில் பேசுகிறேன் என்று.

இந்த ஆண்டு நேர்காணலில்
எட்டு நிமிடங்கள் பேசினேன்.
எல்லா கேள்விகளுக்கும் விடையளித்தேன்.
மூன்று பேராசிரியர்கள் சொன்னார்கள் :

‘‘நன்றாகப் பேசினாய்’’ என்று.
அரசு கலைக்கல்லூரியிலிருந்து
மத்தியப் பல்கலைக்கழகத்துக்குப்
படிக்க வந்தவன் நான் ஒருவன்தான் என்று
இப்போது உணர்ந்துகொண்டேன்.

சேலம் மாவட்டத்திலிருந்து
ஜே.என்.யூ.வுக்காகத் தேர்வு செய்யப்பட்டதும்
நான் ஒருவன்தான்.

நவீன இந்திய வரலாறு பிரிவில்
ஹைதராபாத் மத்தியப் பல்கலைக்கழகத்திலிருந்து
தேர்வு செய்யப்பட்டதும் நான் மட்டும்தான்.

எனது மேற்பார்வையாளர்
பி. ஈஸ்வர் பொனௌலாவுக்கு மிக்க நன்றி.
என்னுள் ஓர் ஆய்வு மாணவனைக்
கண்டுபிடித்தது அவர்தான்.

எனது ஆய்வு தொடர்பான முன்மொழிவை
எழுத என்னை அவர் ஊக்குவித்தார்.
அதை நான் 38 முறை எழுதினேன்.

இந்த வரலாற்றுத் தருணத்துக்காகப்
பலருக்கு நன்றி சொல்ல வேண்டியிருக்கிறது.

அதனால்தான் ‘எ ஜங்கெட் டு ஜேஎன்யூ’ எனும்
புத்தகத்தை நான் எழுதப்போகிறேன்.

மிக்க நன்றி பிரவீண் தோந்தி.
ஜேஎன்யூவில் என் முதல் படம் இதுதான்.
மகிழ்ச்சி!

முத்துக்கிருட்டிணன் (20 சூலை 2016இல் முகநூலில் ஆங்கிலத்தில் இட்ட பதிவு) தமிழில் : வெ. சந்திரமோகன்
நன்றி : ‘தி இந்து’, 16.3.2017

# உங்கள் தலையில் நீங்களே மண்ணைப் போட்டுக் கொள்ளாதீர்கள்!

இன்றைய நிலையில், 99 விழுக்காட்டு பேர் தேர்தலில் போட்டியிட விரும்புவது, நாம் கட்டும் வரிப்பணத்தைத் திட்டமிட்டுத் திருடவே!

இவர்கள், ஏன் தேர்தலுக்குக் கோடிக்கணக்கில் செலவு செய்து சட்டமன்ற - பாராளுமன்ற உறுப்பினராக ஆக வேண்டும்? மனதைத் தொட்டுச் சொல்லட்டும் - எனக்கு இவ்வளவு சொத்து, பணம், கடன் உள்ளது; என்மீது எந்தக் குற்றமும் இல்லை; எனக்கு அரசியல் சட்டம் தெரியும்; நான் மக்களுக்கு நலத் திட்டங்களைச் செய்வேன்; சட்டமன்றத்தில் உறுதிமொழி எடுத்ததைக் கடைப்பிடிப்பேன்; எனக்கு எந்தப் பாதுகாப்பும் வேண்டாம் என்று கூறுவார்களா?

பச்சைத் தமிழன் மாண்புமிகு காமராசர் அவர்கள் கட்டிய சாத்தனூர் அணைக்குப் பிறகு எரையூர் ஏரிக்குப் பிறகு, தமிழகத்தை ஆண்ட கட்சிக்காரர்கள் எவரும் அணைகட்டவில்லை. நீர் வழிகளில் சிறு, சிறு தடுப்புகளைக் கட்டி நீரைத் தேக்கியது தவிர, வேறு ஒன்றுமில்லை. காமராசர் காலத்தில் இருந்த ஏரிகள், குளங்கள், நீர்நிலைகள் பங்கு போடப்பட்டு, அவருக்குப் பின்னர் ஆண்டவர்கள் விற்றுக் கொள்ளையடித்துள்ளனர்.

நிலத்தடி நீரையும், விவசாயத்தையும் காப்பாற்றாத கட்சிகளுக்கு வாக்களிக்காதீர்கள்! ஆக்கிரமிப்புகளை அகற்றி மீண்டும் ஏரிகளைக் காப்பாற்றி மீட்டுத் தரும் கட்சிகளுக்கு வாக்களியுங்கள்!

என் சாதியை இழிவுபடுத்திவிட்டான்; என் சாதிக்காரனைக் கொன்றுவிட்டான் என்று கூறும் கட்சிகளையும் விரட்டுங்கள்! சாதிப் பாகுபாடு இன்றி, மக்கள் நலன் மட்டுமே செயல்படுத்துவேன் என்று கூறும் கட்சிகளை முன்னிலைப்படுத்துங்கள். சாராயம் கொடுத்து சிந்தனையைச் சிதைத்தவர்களையும், திரைப்படங்களில் நல்லவர்போல் நடித்த கூத்தாடிகளையும் தேர்வு செய்யாதீர்கள்!

இப்பொழுது உள்ள அரசியல் கட்சிகள் வேலை தரவும், இடமாற்றம் செய்துதரவும் கையூட்டு இல்லாமல் செய்தார்களா? வாக்காளர்களே கையூட்டு இல்லாத அரசை அமைக்க அரசியல் சார்பற்ற அமைப்புகள் கூறும் கருத்தினைக் கேளுங்கள்.

வாக்குப் போடப்போகும் நீங்கள், வாக்கை விற்காமல், மது அருந்தாமல், அற்பப் பரிசுகளை (மிக்சி, கிரைண்டர், தொலைக்காட்சிப் பெட்டி, மின்விசிறி, ஆடு, மாடு, பன்றி) இவற்றை வாங்காமல் சிந்தித்து வாக்களியுங்கள். சிந்திக்கவில்லையென்றால், உங்கள் தலையில் நீங்களே மண்ணைப் போட்டதற்கு ஒப்பாகும்.

- உழவர் மகன் ப.வ.

## அறிவியல் தமிழின் வளர்ச்சிக்காகத் தன் வாழ்நாள் முழுவதும் அயராது உழைத்து அரிய சாதனைகள் படைத்த மணவை முஸ்தபா மறைந்தார்

தமிழை அறிவியல் மொழியாக வளர்த்தெடுக்க வேண்டும் என்பதற்காகவே தன் வாழ்நாள் முழுவதும் உழைத்த மணவை முஸ்தபா அய்க்கிய நாடுகள் மன்றத்தின் யுனெஸ்கோ நடத்திய அறிவியல் ஏடான கூரியர் மாத இதழைத் தமிழில் தொடங்க மூலகாரணமாக இருந்ததுடன், அந்த இதழின் ஆசிரியராக 35 ஆண்டுகள் இருந்தார். கூரியர் இதழ் இந்தியாவில் தமிழ், இந்தி இரு மொழிகளில் மட்டுமே வெளிவந்தது.

''அறிவியல் தொழில்நுட்பக் கருத்துப் பரிமாற்றம்'' எனும் பெயரில் முதன்முதலாக அறிவியல் தமிழ்க் கருத்தரங்கை 15 நாள்கள் நடத்தினார். தமிழின் அறிவியலுக்கு அவர் தந்த ''மருத்துவக் கலைச் சொல் களஞ்சியம்'', ''அறிவியல் தொழில்நுட்பக் கலைச் சொல் களஞ்சிய அகராதி'' ஆகிய இரு மாபெரும் படைப்புகளின் துணைகொண்டே கடந்த 25 ஆண்டுகளாகப் பள்ளிக் கல்வித் துறையின் தமிழ்ப் பயிற்று மொழி சார்ந்த ஒன்றாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரையிலான நூல்களை ஆசிரியர்கள் உருவாக்கி வந்துள்ளனர். ''கணினி கலைச் சொல் களஞ்சிய அகராதியும்'' கணினித் துறையில் தமிழின் வளர்ச்சிக்கு உதவி வருகிறது.

''பிரித்தானிக்கா'' கலைக் களஞ்சியத்தைத் தமிழுக்குக் கொண்டுவரும் பணியும் அவரது தலைமையில்தான் நடந்தது. தமிழ்மொழியின் நிலை தாழ்ந்து வருவது குறித்து மேடைதோறும் உணர்ச்சி மேலிட தன் மனக்குமுறலை வெளிப்படுத்தினார். நரம்பு மண்டல பாதிப்பு காரணமாக ஏற்பட்ட தசைகளின் செயலிழக்க நோயால் இறுதியில் சில ஆண்டுகள் துன்புற்றார். அந்நிலைக்கு மணவை முஸ்தபா ஆளாகியிருந்த போது, தோழர்கள் வே. ஆனைமுத்து, கவிஞர் தமிழேந்தி, க. முகிலன் ஆகியோர் அவர் இல்லத்திற்குச் சென்று உசாவினர். மணவை முஸ்தபா ................ அன்று மறைந்தார். அறிவியல் தமிழுக்கு அவர் ஆற்றிய அரும்பணிகள் தமிழ்மொழி வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும்.

## போதையால் 2 தலைமுறை சீரழிந்துவிட்டது

# மது விற்பனையால் கிடைக்கும் வருமானத்தைவிட நம் சந்ததியினர் தான் முக்கியம்

## ஐகோர்ட்டு நீதிபதி என். கிருபாகரன் கருத்து

போதையால் 2 தலைமுறை சீரழிந்துவிட்டது. மது விற்பனையால் அரசுக்குக் கிடைக்கும் வருமானத்தைவிட நம் சந்ததியினரைக் காப்பதுதான் முக்கியமானது ஆகும் என்று, ஐகோர்ட்டு நீதிபதி என். கிருபாகரன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பொது இடங்களில் புகை பிடிப்பதைத் தடைசெய்ய வேண்டும் என்றும், சட்டவிரோதமாகப் புகையிலை பொருள்கள் விற்பனை செய்வதைத் தடுக்க வேண்டும் என்றும் சென்னை ஐகோர்ட்டில் கோடம்பாக்கத்தைச் சேர்ந்த ஸ்டுடியோ 11 என்ற நிறுவனம் வழக்குத் தொடர்ந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி என். கிருபாகரன், பொது இடங்களில் புகை பிடிப்பவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கத் தமிழக அரசுக்கு கடந்த ஆண்டு உத்தரவிட்டார்.

இந்த நிலையில், இந்த வழக்கு நீதிபதி என். கிருபாகரன் முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் வக்கீல், ‘தமிழகம் முழுவதும் சட்டவிரோதமாகப் புகையிலை பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இதுதொடர்பாக ஐகோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து, ஐகோர்ட்டு உத்தரவிட்டால் மட்டுமே, அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கின்றனர்’ என்று கூறினார்.

இதற்குப் பதிலளித்த நீதிபதி என். கிருபாகரன், ‘புகையிலை பொருள்களுக்கு எதிரான நடவடிக்கைகளை அதிகாரிகளே தன்னிச்சையாகத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். இதற்கெல்லாம் ஐகோர்ட்டில் உத்தரவுக்காகக் காத்திருக்கக் கூடாது. ஏன் என்றால், தற்போது பள்ளி, கல்லூரி அருகில் அனைத்துவிதமான போதைப் பொருள்களும் தடையின்றிக் கிடைக்கின்றன. பள்ளிச் சீருடையிலேயே மாணவர்கள் மது, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களை வாங்கிச் செல்வதையும் கண்கூடாகக் காணமுடிகிறது. போதையால் ஏற்கெனவே 2 தலைமுறைகள் சீரழிந்துவிட்டன. தற்போதைய இளைய தலைமுறையும் சீரழிந்துவிடும் என்று அச்சமும் நமக்கு ஏற்படுகின்றது. மது விற்பனையினால் அரசுக்குக் கிடைக்கும் வருமானத்தைவிட, நம் சந்ததியினரைக் காப்பது தான் மிகவும் முக்கியமானது ஆகும். மது விற்பனையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்ததுபோல, புகையிலை உள்ளிட்ட போதைப் பொருள்கள் விற்பனையைக் கட்டுப்படுத்த தமிழக அரசு ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது?’ என்று கேள்வி எழுப்பினார்.

பின்னர் கூடுதல் அட்வகேட் ஜெனரல் வெங்கட்ரமணியை பார்த்து, ‘இந்த விஷயத்தில் தமிழக அரசு மெத்தனமாகச் செயல்படக்கூடாது’ என்று நீதிபதி கண்டிப்புடன் கூறினார்.

அதைத் தொடர்ந்து நீதிபதி பிறப்பித்த உத்தரவில், ‘தமிழகத்தில் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருள்கள் சட்ட விரோதமாக விற்கப்படுவதைத் தடுக்க அதிகாரிகள் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டு. இந்த நடவடிக்கைகள் குறித்துப் புள்ளி விவர அறிக்கையை ஐகோர்ட்டில் மாதந்தோறும் தமிழக அரசு தாக்கல் செய்ய வேண்டும். நடப்பு வாரத்தில் சட்ட விரோதமானா புகையிலைப் பொருள்களை தடைசெய்ய எடுத்த நடவடிக்கை குறித்த விவரங்களை அறிக்கையாக வருகிற 21-ந் தேதிக்குள் தாக்கல் செய்ய வேண்டும்’ என்று கூறியுள்ளார்.

# பெரியாரியமும் இந்து மதமும்

- இராமியா

நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்ததில் இருந்து, ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களை மூளை வெளுப்பு செய்யும் பணியில் காவிக் கும்பலினர் சுறுசுறுப்பு அடைந்தனர். இப்பொழுது உத்தரப்பிரதேம், உத்தரகாண்ட், கோவா, மணிப்பூர் மாநிலங்களில் ஆட்சியைக் கைப்பற்றிய பின் அவர்கள் அப்பணியில் தலை கால் தெரியாத வேகத்துடன் செயல்படத் தெடங்கி இருக்கிறார்கள்.

அவர்கள் இப்பொழுது முக்கியமாக முன்வைக்கும் வாதம், பெரியாரியவாதிகள் இந்து மதத்தை மட்டுமே எதிர்க்கின்றனர்; பிற மதங்களை எதிர்க்க அஞ்சுகின்றனர் என்பதுதான். இதற்கு அவாளும், அவாளால் மூளை வெளுப்பு செய்யப்பட்ட மற்றவர்களும் கொடுக்கும் விளக்கம் இது தான்.

இந்துக்கள் சாதுவானவர்கள்; சகிப்புத் தன்மை உடையவர்கள்; இவர்களை விமர்சிப்பதால் எதிர்த் தாக்குதல் இராது; ஆகவே துணிவாக எதிர்க்கலாம். ஆனால் இஸ்லாமியர்களும், கிருத்துவர்களும் அப்படி அல்ல; அவர்கள் சிறிதும் சகிப்புத்தன்மை இல்லாதவர்கள்; தங்களை எதிர்ப்பவர்களை வன்முறையால் தாக்கி அழிவை ஏற்படுத்தி விடுவார்கள். ஆகவே அவர்கள் மீது தாக்குதலைத் தொடுக்க அஞ்சுகின்றனர்.

அவாளின் இந்த விளக்கம் கலப்படம் இல்லாத பட்டவர்த்தமான பொய்யே. பெரியார் மூட நம்பிக்கை களைக் கண்ட போது, இஸ்லாமிய, கிருத்துவ மதத்தி னரை மட்டும் அல்ல; நாத்திகத்தை அடிப்படையாகக் கொண்ட புத்த மதத்தினரையும் விமர்சிக்கத் தயங்க வில்லை,

மாரியம்மன் தீமிதி விழாவைப் பேல், இஸ்லாமியர் களிடையே சந்தனக் கூடு தீமிதி விழா நடைபெறுவதை விமர்சித்து இஸ்லாமியர்களிடையே பெரியார் பேசி இருக்கிறார். சகிப்புத்தன்மை இல்லாதவர்கள் என்று காவிக் கும்பலினால் சித்தரிக்கப்படும் இஸ்லாமியர்கள் இதைக் கேட்டு வெட்கப்பட்டார்களே ஒழிய வெகுண்டு எழவில்லை.

இந்நிகழ்வு குறித்து திருநெல்வேலி மாவட்டம், சாத்தான் குளத்தில் 28.7.1931 அன்று முகம்மது நபி பிறந்த நாள் விழாவில் பெரியார் பின் கண்டவாறு பேசினார்.

"சென்ற வருஷம் ஈரோடு அல்லாசாமிப் பண்டிகையைப் பற்றி ஈரோடு கூட்டத்தில் கண்டித்துப் பேசினேன். எனது ஈரோடு சகோதரர்கள் அதற்கு சிறிதும் கோபித்துக் கொள்ளாமல் வெட்கப்பட்டார்கள். அதன் பிறகு இந்த வருஷம் அந்தப் பண்டிகை நின்று விட்டது. எனக்கு மிக சந்தேஷம். கோபித்துக் கெண்டிருந்தால் இந்த வருடமும் நடத்தி இருப்பார்கள்"

இப்பேச்சு 2.8.1931 குடி அரசு இதழில் வெளி வந்து உள்ளது.

பெரியாரியவாதிகள் மூட நம்பிக்கைகளையும், மக்களின் சுதந்திரத் தன்மைக்கு விலங்கிடும் எந்தச் செயல்களையும் எதிர்க்கும் போது மதங்கள் அதற்குத் தடையாக எப்போதுமே இருந்தது இல்லை. மக்களுக்கு அவை யாரால், எவ்வளவு ஆழமாக, எவ்வளவு வலிமையாகப் பாதிக்கிறது என்பதைப் பொறுத்துத் தான் எதிர்ப்பின் தீவிரம் இருக்கிறது.

இது இந்தியாவில் மட்டும் அல்ல; உலகம் எங்கங்கும் நிகழும் நிகழ்வுதான். பிரிட்டன் தத்துவ ஞானி பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் "நான் ஏன் கிருத்துவன் அல்ல?" என்று, தான் பார்க்கும் சமுதாயத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் கிருத்துவ மதத்தைத் தான் விமர்சித்தாரே ஒழிய, இந்து மதத்தையோ, இஸ்லாமிய மதத்தையோ விமர்சிக்கவில்லை.

வங்க தேச வீராங்கனை தஸ்லிமா நஸ்ரீன் இஸ்லாமிய மதத்தைத் தான் விமர்சித்தாரே ஒழிய, இந்து மதத்தையோ, கிருத்துவ மதத்தையோ விமர்சிக்கவில்லை, அவாளுக்கு இவை எல்லாம் தெரியாதா? நன்றாகத் தெரியும். அது மட்டும் அல்ல. இஸ்லாமிய மக்களுடனும், கிருத்துவ மக்களுடனும் கலந்து பழகியது போல், இந்து மக்களுடனும் பெரியார் கலந்து பழகிய செய்திகளும் அவாளுக்கு நன்கு தெரியும்.

பழுத்த ஆத்திகரும், சைவ சமயத் தத்துவ ஞானியுமான மறைமலை அடிகள் பெரியாரின் கடவுள் மறுப்புக் கொள்கையை மறுத்தாலும், சமூக நலன்கள் என்று வந்த போது இருவரும் இணைந்து பணியாற்றி இருக்கின்றனர்.

அதே போல பழுத்த ஆத்திகரும், சைவ சமயத் தத்துவ ஞானியும், தேச பக்தருமான வ.உ.சி.யுடன் இணைந்து, பெரியார் சமூக நீதிக்காகப் பணி ஆற்றி இருக்கிறார். இதன் தொடர் நிகழ்வாக 5.11.1927 அன்று சேலம் நகரில், "எனது அரசியல் பெருஞ் சொல்" என்ற தலைப்பில் வ.உ.சி. உயர்நிலைகளில் பார்ப்பனர்கள் மட்டுமே இருப்பதைக் கண்டித்தும், விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கோரியும் பெரிய சொற்பொழிவையே ஆற்றி இருக்கிறார்.

இராமலிங்க சாமியின் பாடல் திரட்டு என்ற நூலைத் தனது குடி அரசு பத்திரிக்கையின் சார்பிலேயே வெளியிட்ட பெரியார், சமரச சன்மார்க்க சங்கத்தின் மீது விமர்சனம் செய்யவும் தயங்கவில்லை.

"சூத்திரன் என்றால் ஆத்திரம் கொண்டு அடி" என்ற சொற்றொடரை அவர் கைவல்யசாமியார் என்ற இந்து தத்துவ ஞானியிடம் இருந்துதான் பெற்றார்.

இவற்றை எல்லாம் கணக்கில் கொண்டு பார்த்தால், பெரியார், இஸ்லாமிய, கிருத்துவ நண்பர்களுடன் இணைந்து பணியாற்றியதை விட, இந்து மத நண்பர்களுடன் தான்அதிகமாக இணைந்து பணியாற்றி இருக்கிறார் என்று தெரியும்.

மக்கள் விடுதலைக்கு, நலன்களுக்கு எதிரானது எனும் போது, அவர் நாத்திக மதமான புத்த மதம் உட்பட அனைத்து மதத்தினரையும் சாடவே செய்தார். ஆகவே அவர் இந்து மதத்தை மட்டும் ஓர வஞ்சனையாக எதிர்த்தார் என்று கூறுவது கடைந்தெடுத்த அயேக்கியத்தனம்.

மத நம்பிக்கையாளர்களுடன் சேர்ந்து பணியாற்றுவதன் மூலம் மக்கள் விடுதலைக்கும், நலன்களுக்கும் பங்களிக்க முடியும் என்றால், அந்த வாய்ப்பை அவர் தவறவிட்டது இல்லை. இதில் இந்து மத நம்பிக்கையாளர்களுடன் சேர்ந்து பணியாற்றவில்லை என்று கூறுவது முழுக்க முழுக்கப் பெய்.

இன்று நம் நாட்டில் இந்து மதத்தால் நடக்கும் இழிவுகள் அனைத்துக்கும் அடிப்படை எது? அனைத்து வகுப்பு மக்களிலும் திறமைசாலிகளும், திறமைக் குறைவானவர்களும் இருக்கையில், பார்ப்பனர்கள் மட்டுமே உயர்நிலை வேலைகளுக்குத் தேர்ந்து எடுக்கப்படும் நிலை உள்ளது. இதனால் திறமைக் குறைவான பார்ப்பனர்களும் உயர்நிலைகளில் அமர்ந்து கொண்டு நிர்வாகத்தை நாசப்படுத்திக் கொண்டு இருக்கின்றனர். இதனால் நாட்டிற்கு அளவு கடந்த இழப்பு ஏற்படுகிறது.

பார்ப்பனர்களில் உள்ள திறமைக் குறைவானவர்கள் உயர்நிலை வேலைகளைப் பெற்று விடுவதால், அவர்கள் செய்ய வேண்டிய கீழ் நிலை வேலைகளை ஒடுக்கப்பட்ட வகுப்பில் உள்ள திறமைசாலிகள் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் மனித வளம் வீணாகிறது. இதுவும் நாட்டிற்குப் பெரும் இழப்பு ஆகும்.

இதைத் தவிர்த்து அனைத்து வகுப்புகளிலும் உள்ள திறமைசாலிகள் உயர்நிலை வேலைகளிலும், அனைத்து வகுப்புகளிலும் உள்ள திறமைக் குறைவானவர்கள் அடுத்த நிலை வேலைகளிலும் வேலை செய்யும் அமைப்பாக, பொதுப் போட்டி முறையை முற்றிலும் ஒழித்துவிட்டு, விகிதாச்சாரப் பங்கீட்டு முறையைச் செயல் படுத்துவதற்கு, இந்துச் சகோரதரர்கள் அனைவரும் முன்வரவேண்டும். அப்படி முன் வருபவர்களுடன் பெரியாரியவாதிகள் நிச்சயமாக இணைந்து பணி புரிவார்கள். அப்பொழுது அவர்கள் இந்து மதத்தை மட்டுமே எதிர்க்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு கலப்படம் அற்ற பொய் என்று தெளிவாக விளங்கும்.

## ஒரே மூச்சில் நூறு குறு நூல்கள் வெளியீடு தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் தலைசிறந்த பணி இளைஞர்களும் தமிழ்ப் பெருமக்களும் தலைக்கு நூறு வாங்குங்கள்!

திராவிடர் இயக்க நூற்றாண்டு கொள்கைப் பிரகடன வெளியீடாக - 2016இல் ஒரே மூச்சில் நூறு நூல்கள் வெளியிடப் போவதாக, தந்தை பெரியார் திராவிடர் கழகத்தால் அறிவித்தனர்.

உடனே, "பெரியார்-நாகம்மை அறக்கட்டளை"க்கு ஒரு அடுக்கு வேண்டும் என்று, பூவாளூர் தோழர் செகநாதனிடம் முன்பதிவு செய்தோம்.

சொன்னது சொன்னபடி - நூறு குறு, சிறு, பெரு நூல்களை 2016 திசம்பரில் வெளியிட்டுவிட்டனர். நமக்கும் 23.3.2017 அன்று அந்நூல்கள் அடங்கிய பெட்டி கிடைத்தது.

நானே 24.3.2017 பகல் 12 மணிக்கு அப்பெட்டியை உடைத்துப் பிரித்தேன். ஆகா! ஆகா! ஆகா!

1. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகள். 2. அய்ந்தாம் வகுப்புப் படித்தோரும் ஆசைப்பட்டுப் படிக்க ஏற்றது. 3. 10 உருவா முதல் 60 உருவா அடக்கவிலை குறிக்கப்பட்டவை. 4. போகும் இடமெல்லாம் எளிதில் 10 நூல்களைக் கையோடு எடுத்துப் போய்ப் படித்து முடிக்க ஏற்ற நூல்கள்!

எல்லாத் தமிழரும் வாங்குங்கள்! படியுங்கள்! மாந்துங்கள்!

100 நூல்களின் விலை ரூ.1500

நூல் கிடைக்குமிடங்கள் : பெரியார் பதிப்பகம்
அரசு விரைவுப் பேருந்து நிலையம் அருகில்,
காந்திபுரம், கோயமுத்தூர் - 641 044.

சுயமரியாதை பதிப்பகம் : அம்மன் காம்ப்ளக்ஸ் முதல் தளம், யாழ் தையலகம் எதிரில்,
வ.உ.சி. வீதி, உடுமலைப்பேட்டை - 642 126.
திருப்பூர் மாவட்டம். பேச : 97883 24474

25.3.2017 வே. ஆனைமுத்து

# எல்லா மதமும் மூர்க்கப் பிரச்சாரமே

- ஈ.வெ.ரா.

சங்கராச்சாரி மதம் பவுத்த மடங்களில் நெருப்பு வைத்ததும், சைவ மதம் சமணர்களைக் கழுவேற்றினதும், வைணவ மதம் புத்த விக்கிரகங்களை உடைத்து உருக்கினதுமான காரியங்கள் எல்லாம் நினைத்துப் பார்ப்போமானால், அந்தக் காலத்தில் மகமதியர்கள் செய்ததாகச் சொல்லப்படுபவைகள் எதற்கும் இக்காரியங்கள் இளைத்ததல்ல என்று தோன்றும். ஆனாலும், மகமதிய மதம் வாள்கொண்டு பிரச்சாரம் செய்யப்பட்டதா இல்லையா என்பதில் இன்னமும் தகராறு இருக்கின்றது. மகமதியர்கள் அதை ஒப்புக்கொள்வதில்லை. மற்றபடி அதைத் தங்கள் எதிரிகளால் தங்கள்மீது கற்பிக்கப்பட்ட ஓர் பழி என்று சொல்லுகின்றார்கள்.

**ஆனால் சமணர்களைச் சைவர்கள் கழுவேற்றியதை சைவர்களே ஒப்புக்கொண்டு தங்களாலேயே எழுதி வைத்து புண்ணிய சரித்திரமாக இன்றும் பிரச்சாரம் செய்வதுடன், அதன் பெருமையைக் காட்டிக்கொள்ள வருஷந்தோறும் பல ஆயிரம் ரூபாய்கள் செலவில் பல இடங்களில் உற்சவங்கள் நடத்திக் காட்டப்படுகின்றன. அக்கோயில்களில் இன்றும் கழுவேற்றிய காட்சிகள் சித்திர ரூபமாய் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன.**

அதுபோலவே வைணவர்களும் புத்த மத விக்கிரகத்தை அழித்ததற்கு ஆதாரமாய், ஸ்ரீரங்கம் கோயில் இருப்பதுடன், அவ்விக்கிரகத்தைத் திருடி உடைத்த திருமங்கையாழ்வாரின் சரித்திரத்தில் இதையொரு பெருமையாகவும் எழுதிப் புண்ணிய சரித்திரமாகப் பாவித்துத் தினமும் படிக்கப்பட்டும் வருகின்றன. இவைகள் ஒருபுறமிருக்க, இன்றைய தினமும் எனக்கு வரும் சில கடிதங்களையும், என்னைப் பற்றிப் பேசும் பல பேச்சுகளையும் பார்த்தாலும் எனது கொள்கைகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யும் சைவ வைணவர்களின் வார்த்தைகளைப் பார்த்தாலும் அவைகளும் மகமதியர் செய்ததாய்ச் சொல்லப்படும் வாள்பிரச்சாரத்திற்குச் சிறிதும் இளைத்ததல்லவென்றே தோன்றும்.

கிறிஸ்துநாதர் ஏன் சிலுவையில் அறையப்பட்டார்? சாக்ரடீஸ் ஏன் விஷமருந்தச் செய்யப்பட்டார்? மகமது நபி ஏன் மலைக் குகைக்குள் ஒளியப்பட்டார்? என்பவைகளை எல்லாம் கவனித்தால், ஆரம்பகாலம் தொட்டே உலகத்தில் சிறப்பாக நமது நாட்டில் மதப் பிரச்சாரங்களின் கதி இப்படித்தான் இருந்து வந்திருக்கின்றன என்பது விளங்கும். இவை தவிர இன்றைய தினமும் இந்து மத தர்மத்தில் இருக்கும் தர்மங்கள் - அதாவது நாஸ்திகர்களை நாக்கறுக்க வேண்டும். கண்ணைக் குத்த வேண்டும். சித்திரவதை செய்ய வேண்டும். நாட்டை விட்டுத் துரத்த வேண்டும் என்பனவெல்லாம் எந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது என்று கேட்கின்றேன்?

மற்றும் இந்து மத சாஸ்திரங்களைப் படித்தால் நாக்கறுக்க வேண்டும்; கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும்; பார்த்தால் கண்ணைக் குத்த வேண்டும்; மனதில் ஏறிவிட்டால், நெஞ்சைப் பிளக்க வேண்டும் என்பனவெல்லாம் எந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது? என்று கேட்கிறேன்.

மற்றும் பெரியோர் வாக்கைப் புராண இதிகாசங்களை எவன் தர்க்க புத்தியால் விவகாரம் பண்ணுகின்றானோ அவன் நாத்திகனாவான். அப்படிப்பட்டவனை அரசன் தண்டிக்க வேண்டும் என்பனவாகியவெல்லாம் எந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது?

மற்றும் நந்தன் நெருப்பில் பொசுக்கப்பட்டது போன்ற கதைகள் எந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது?

**ஆகவே, உலகில் மதப் பிரச்சாரம் என்பதே, மூர்க்கத்தனத்தையும் பலாத்காரத்தையும் கொண்டதேயொழிய, அனுபவத்தில் அன்புமயமான மதம் உலகில் ஒன்றுமே இல்லை என்றே சொல்லுவேன்.**

இந்து வேதத்தை எடுத்துக் கொண்டாலும் அந்தக் காலத்திய வேத மதக்காரர்களுக்கத் தங்கள் எதிர் மார்க்கக்காரர்களை அடிக்கவும், கொல்லவும் செய்வதும், அப்படிச் செய்யச் சக்தி இல்லாவிட்டால் அவர்களைக் கொல்ல வேண்டும்; அழிக்க வேண்டும் என்று தங்களது கடவுள்களைத் தோத்திரம் பண்ணுவதுமான காரியங்கள் நிறையப் பார்க்கலாம்.

**ஆகவே எப்பொழுது மத விஷயத்தில் கையிலானவர்கள் எல்லாம் பலாத்காரத்திலும், கையிலாகாதவர்கள் எல்லாம் கடவுளை வேண்டியும் சாபம் கொடுத்தும்தான் இருக்கிறார்கள். தவிர இந்து மதத்தில் உள்ள தீண்டாமையும், பெண் அடிமையும் சிறிதும் மனிதத்தன்மைக்கு ஏற்றதல்ல என்பதை உலகமே சொல்லுகின்றது.**

(“குடிஅரசு” 24.8.193[illegible])

# எல்லாருக்குமே அவமானம்

- ஈ.வெ.ரா.

மனிதனை மனிதன் தொடக்கூடாது; பார்க்கக் கூடாது; தெருவில் நடக்கக் கூடாது என்கின்ற கொள்கையோடு ஒரு மதத்தை இன்னமும் உலகத்தில் வைத்துக் கொண்டிருப்பதானது. அந்த மத மக்களுக்கு மாத்திரமல்லாமல் உலக மக்களுக்கே அவமான காரியம் என்று தான் சொல்லுவேன்.

அதோடு அந்த மதத்தை ஏற்படுத்தினதாகச் சொல்லப்படும் தெய்வத்திற்கும், தெய்வீகத் தன்மைக்கும் மிக மிக இழிவு என்றும் சொல்லுவேன். இந்து மதத்தில் லஒவ்வொருவனும் மற்றவனைக் கீழ்ச் சாதியான் என்று சொல்லிக் கொள்வதில் உள்ள ஆணவத்தை அனுபவிக்கின்றானேயல்லாமல், தான் மற்றொரு சாதிக்குக் கீழ்ச் சாதியாய் இருக்கின்றோமே என்கின்ற இழிவை உணரும் உணர்ச்சியே கிடையாது. பொதுவாக இந்துக்களுக்கே சுயமரியாதை கிடையாது என்று சொல்லுபவர்களுக்கு இந்த ஒரு காரியமே போதுமான ஆதாரமாகும்.

அன்றியும் இந்து என்ற ஒவ்வொரு மனிதனும் தன்னை மற்றவன் கீழ்ச் சாதியாக மதித்து இழிவுபடுத்துவதையும் மனித உரிமை தடுக்கப்பட்டிருப்பதையும், ஈனமான அர்த்தம் கொண்ட சூத்திரன் என்ற பேரால் குறிக்கப்பட்டிருப்பதையும் கண்டு சிறிதும் வெட்கப்படுவதில்லை.

யாராவது ஒருவர், இருவர் வெட்கப்படுவதாய்ப் பாசாங்கு செய்தாலும் காரியத்தில் உதைத்த காலுக்கு முத்தம் வைப்பதுபோல் அந்தப்படித் தன்னை இழிவுபடுத்துவதற்கு அஸ்திவாரமாகவும், ஆபதமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் மதத்தையும் கடவுளையும் போற்றுகின்றான்; காக்கப் பாடுபடுகிறான். இப்படிப்பட்டவர்களை எந்தக் கணக்கில் சேர்ப்பது என்பது நமக்கு விளங்கவில்லை. எவ்வளவோ அபிலாசைகளையும், பெருமைகளையும், கீர்த்திகளையும் ஆசைப்படுகின்ற மனிதன், தான் ஏன் கீழ்ச் சாதியாய் மதிக்கப்படுகிறான்; தன்னை ஏன் சமூக வாழ்வில் இழிவுப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதைப் பற்றிய கவலையே இல்லாமலிருக்கின்றான். தன்னுடைய சொந்த இழிவையும், கொடுமையையும் நீக்கிக் கொள்ளக் கவலையும் முயற்சியும் ஆற்றலும் இல்லாத மனிதன் மற்றவர்களுக்குச் சுதந்தரம் வாங்கித் தருகிறேன் என்றால், அதில் ஏதாவது நாணயமோ பொருளோ இருக்க முடியுமா? இஸ்லாமிய மதத்தைப் பற்றி மக்கள் அசூசைப்படலாம். பொறாமைப்படலாம். அவர்களைப் பற்றி இழிவாய் நாம் எழுதி வைத்துக் கொள்ளலாம். ஆனால் காரியத்தில் அவர்கள் எந்தவிதத்திலும் நம்மைவிட இளைத்தவர்கள் அல்லாமலும், அநேக விதத்தில் மேலானவர்களாகவும் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் அவர்கள் மதக் கொள்கையேயாபகும். அதாவது சமத்துவமும், சகோதரத்துவமும். அந்த இரண்டும் இந்துக்களிடம் சுத்த சுத்தமாய் கிடையாது. ஒரு மகமதியச் சிறுவனை ஒரு இந்து பெரியவன் அடித்தால், அந்த ஊர் மகமதியர் எல்லோரும் ஒன்றுசேர்ந்து எதிர்ப்பார்கள். ஆனால் ஒரு இந்து பெரியவனை ஒரு மகமதிய சிறுவன் அடித்தால் ஒரு இந்துவும் திரும்பிப் பாரான். முதலில் அடிபடுகிறவன் என்ன சாதி, என்ன வகுப்பு என்று தன் பக்கத்தில் இருக்கும் இந்து கவனிப்பான். பிறகு நமக்கு என்ன, அவன் எப்படியோ போகட்டும் என்பான். மற்றும் தனது சினேகிதர்களையும், இதரர்களையும், குழந்தைகளையும் ஊர் வம்புக்கு ஏன் போகிறீர்கள் என்று சொல்லி வீட்டிற்குள் இழுத்துப் போட்டு கதவைச் சாத்துவான். இந்தக் குணம் தான் இந்துவுக்கு இந்து மதம் கற்பிக்கிறது. ஆகவே மதக் கொள்கைகளின் உயர்வு, தாழ்வுகளை பலனில் இருந்து பார்த்தறிகின்றதா? அல்லது நாமே எழுதி வைத்துக் கொண்டதிலிருந்து அறிகின்றதா?

இஸ்லாமிய மதம் மதிக்கப்படுவதுபோல், இந்து மதம் உலக மக்களால் மதிக்கப்படுகின்றதா? ஏன் நமது யோக்கியதை அப்படி இருக்கின்றது? இந்துக்களின் 100க்கு 90 பேர் வேதத்தில் சூத்திரர், சாஸ்திரத்தில் சூத்திரர், புராணத்தில் சூத்திரர், சட்டத்தில் சூத்திரர், தர்மத்தில் சூத்திரர், பழக்கத்தில் சூத்திரர், வழக்கத்தில் சூத்திரர் என்று சொல்லப்படுபவர்களாய் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் இனி எதில் சூத்திரராக இருக்க வேண்டியது பாக்கி இருக்கின்றது என்பது நமக்குப் புரியவில்லை. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதுபோல், இந்த யோக்கியதை உள்ள மக்கள் பெரிய விஷயங்களில் ஆசைப்படுவதில் என்ன பிரயோஜனம்? அதுபோலவே இந்து மதத்தில் இந்துப் பெண்களின் நிலை என்ன என்று பாருங்கள். ஒரு வேசிக்கு இருக்கும் சுதந்தரமும் சுயமரியாதையும், சுகமும்கூட நமது பெண் தெய்வங்களுக்கு இல்லை. சொத்தில்லை; படிப்பு இல்லை; விவாக சுதந்தரமில்லை; விதவை ஆகிவிட்டால் மறுமணமில்லை. இதற்கு என்ன பெயர் சொல்லுவதென்று எனக்குத் தெரியவில்லை.

உயிருடன் கட்டையில் வைத்து எரிப்பதை நிறுத்தியதே அவர்களுக்குப் பெரிய உபகாரம்

செய்ததாய்க் கருதப்படுகின்றது. ஆனால் அதுவும் இப்போது அவர்களுக்குப் பெரிய அபகாரமாய் முடிந்திருக்கிறது. இம்மாதிரி கொள்கைகளுடன் உலக மக்கள் முன்னால் நாமும் நம்மை எப்படி மனிதர்கள் என்று சொல்லிக் கொள்ள முடியும்? உயர்ந்த மதம் என்றால் - மேலான சமூகமென்றால் - உயர்ந்த கொள்கைகளும் மேன்மையான தன்மைகளும் இருக்க வேண்டும். அதில்லாமல் காட்டுமிராண்டி நிலையில் இருந்துகொண்டு அதைத் தெய்வீகத் தன்மை பொருந்திய சடங்கு என்று சொல்லிக் கொள்வதால் உலகத்தை ஏமாற்றிவிட முடியுமா?

தவிர, இந்த சமயத்தில் இஸ்லாமானவர்களுக்கும் சிறிது சொல்லவேண்டி இருக்கிறது. அவர்களது பழக்கவழக்கங்களிலும் இந்துக்களில் இருப்பது போலவே பல கெடுதல்கள் இருக்கின்றன. இந்துக் கோயில்களில் தப்புக் கொட்டுவது போலவும் இந்து சாமிகள் உற்சவம் செய்வது போலவும் வேஷம் முதலிய ஆபாசங்கள் இருக்கின்றன. சில இடங்களில் புரோகிதர்கள் ஆதிக்கமும் இருக்கின்றது. இதற்கு என்ன சமாதானம் சொல்ல முடியும்? வேண்டுமானால் அவைகள் எங்கள் மார்க்சுக் கொள்கைகள் அல்ல என்றும், சகவாச தோஷத்தினால் மத்தியில் வந்து புகுந்த தவறுதல்கள் என்றும் சொல்லலாம். அது போதிய சமாதானமாகுமா? எப்படியாவது அவைகளை எல்லாம் ஒழித்தாக வேண்டும். முஸ்லீம் பணக்காரர்களும் இந்தப் பணமெல்லாம் ஆண்டவன் நமக்குக் கொடுத்தான். ஆதலால் நமக்கு மோட்சம் தேடிக் கொள்ள நாம் யாத்திரைக்கும் நேர்ச்சைக்கும் செலவு செய்தால் போதும் என்று இந்துக்களைப் போலவே சுயநலக்காரர்களாய் இருக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஒரு முஸ்லீம் பணக்காரன் ஒரு முஸ்லீமாவது பட்டினியாகவும் தொழில் இல்லாமலும் படிப்பு இல்லாமலும் இருக்கும்படிப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது என்றே சொல்லுவேன். அது தான் யோக்கியமான பணக்காரனின் இலட்சியமாகும். இந்த குணங்கள் இல்லாத பணக்காரன் கொள்ளைக்காரனுக்குச் சமானமானவனேயாவான்.

தவிரவும் பணக்கார முஸ்லீம்களும் பொது ஜன சேவைக்காரர்களும் தங்கள் மதம் உயர்ந்த மதம் என்று சொல்லிக் கொண்டிருப்பதால் மாத்திரம் போதாது. கஷ்டப்படுகின்ற இழிவுபடுத்தப்பட்ட மக்களைத் தங்கள் மார்க்கத்தில் சேர்த்து அவர்களை மேன்மைப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். தாங்கள் அனுபவிக்கும் சமத்துவ இன்பத்தையும், சகோதர இன்பத்தையும் மற்றவையில்லாத - கஷ்டப்படுகின்ற மக்கள் யாவரும் அனுபவிக்கும்படிப் பார்த்து வேண்டும். "யான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறவேண்டும்" என்கின்ற கொள்கை ஒவ்வொரு யோக்கியமான மனிதனுக்கும் தலையாயதாகும். அதை விட்டவர்கள் சுயநலக்காரர்களேயாவார்கள்.

ஆகவே சகோதரர்களே! இந்த சமயத்தில் எனக்கு அளித்த சந்தர்ப்பத்தில் என் அபிப்பிராயம் என்கின்ற முறையில் ஏதோ எனக்குப் பட்டதைச் சொன்னேன். நீங்கள் தயவு செய்து அவற்றை நன்றாய் யோசித்துத் தங்களுக்குச் சரி என்று பட்டதை எடுத்துக்கொண்டு மற்றதைத் தயவுசெய்து தள்ளிவிடுங்கள் என்று கேட்டுக் கொள்வதோடு - உங்களிடம் விடைபெற்றுக் கொள்கிறேன்.

("குடிஅரசு", 24.8.1930)

## உடல் உறுப்பு தானம்

பெரியார் ஈ.வெ. இராமசாமி - நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளையின் புரவலரும், மா.பெ.பொ.க.யின் ஆதாரவாளருமான மேற்கு தாம்பரம் ஆர். ரவி (ONGC) அவர்களின் அத்தையும், வில்லிவாக்கம் திரு. ஸ்ரீராமுலுவின் மனைவியுமான திருமதி. எஸ். சாவித்திரியம்மாள் (65) 27.2.2017இல் விபத்தில் சிக்கி நினைவு இழந்தார். மருத்துவர்களின் ஆலோசனையின் பெயரில் உடனடியாக அவருடைய கண்கள், இதயம், கல்லீரல் உட்பட உறுப்புகள் தானமாக வழங்கப்பட்டது.

28.2.2017 செவ்வாய்க்கிழமை அன்று, மறைந்த எஸ். சாவித்திரியம்மாள் அவர்களுக்கு எஸ். பிரபு, எஸ். விஷ்ணு என்ற இரண்டு மகன்கள் உள்ளனர்.

1.3.2017 அன்று நடந்த இறுதி நிகழ்வில் தாம்பரம் மா.பெ.பொ.க. புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றத் தோழர்கள் ஆர். ரவி-காஞ்சனா; கே. பாலாஜி-ராஜலட்சுமி; தே. கோகுலன்-சுமதி ஆகியோர் நேரில் அஞ்சலி செலுத்தினார்கள்.

- ஆசிரியர் குழு

# விண்வெளி ஆய்வுகளுக்கு நவீனக் கருவிகளை உருவாக்கியவர்!

கடந்த 2017, பிப்பிரவரி 15ஆம் தேதி, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) வரலாற்றில் ஒரு பொன்னாள். இதுவரை பல அரிய சாதனைகளை இஸ்ரோ நிகழ்த்தியிருந்தாலும், பிப்பிரவரி 15-இல் 104 செயற்கைக்கோள்களுடன் விண்ணைச் சாடிய பிஎஸ்எல்வி-சி37 இராக்கெட், உலக அளவில் இந்தியாவின் மதிப்பை சிகரத்துக்கு உயர்த்தியது.

அந்தச் சாதனையின் பின்புலத்தில் இருந்து இஸ்ரோ நிறுவனத்தை வழிநடத்தியவர் அதன் தற்போதைய தலைவர் ஏ.எஸ். கிரண்குமார். செயற்கைக் கோள்களில் பொருத்தப்படும் கருவிகள் குறித்த நிபுணத்துவத்திலும், அவற்றை இயக்கும் திறனிலும் ஆழ்ந்த அனுபவம் கொண்ட அவர், இந்திய விண்வெளி ஆணையத்தின் தலைவராகவும், இந்திய அரசின் விண்வெளித் துறைச் செயலாளராகவும் 2015 முதல் உள்ளார்.

இஸ்ரோவின் துணை நிறுவனமான அகமதாபாத்திலுள்ள விண்வெளிப் பயன்பாட்டு மையத்தில் (Space Application Centre - SAC) 1975 முதல் 2015 வரை பல நிலைகளில் பணிபுரிந்த கிரண்குமார், இந்திய செயற்கைக்கோள்களில் பொருத்தப்படும் அதிநவீனக் கருவிகளை வடிவமைத்ததிலும், அவற்றை வளர்த்தெடுத்ததிலும் பிரதானப் பங்கு வகித்தவர். அவரது தலைமையிலானக் குழுவினர் 50க்கும் மேற்பட்ட செயற்கைக்கோள் கருவிகளை உருவாக்கியுள்ளனர்.

கர்நாடக மாநிலம், ஹாஸன் மாவட்டம், அலூரில், லிங்காயத்து குடும்பத்தில், 1952, அக்டோபர் 22இல் பிறந்தார், அலூரு சீலின் கிரண்குமார். சுருக்கமாக ஏ.எஸ். கிரண்குமார். பெங்களூரு பல்கலைக்கழகத்துக்கு உட்பட்ட தேசியக் கல்லூரியில் இயற்பியலில் பி.எஸ்சி. ஹானர்ஸ் பட்டமும் (1971), மின்னணுவியலில் எம்.எஸ்சி. பட்டமும் (1973) பெற்ற கிரண், பெங்களூரு ஐஐஎஸ்சி-யில் பயின்று, இயற்பொறியியலில் எம்.டெக். பட்டம் (1975) பெற்றார். படிப்பை முடித்தவுடன், இஸ்ரோவின் எஸ்ஏசி-யில் இணைந்தார். சுமார் 40 ஆண்டுகாலம் அங்கு பணிபுரிந்த அவர், அதன் இயக்குநராக உயர்ந்தார். 2012இல், அதன் மின் ஒயியியல் கருவிக் குழுமத்தின் இயக்குநரானார். 2015 முதல் தற்போது வரை இஸ்ரோவின் தலைவராகச் செயல்பட்டு வருகிறார்.

அறிவியல் பங்களிப்பு : விண்வெளிப் பயணம், செயற்கைக் கோள்கள் ஆகியவற்றுக்கான விண்வெளிப் பயன்பாட்டுக் கருவிகளை வடிவமைத்தல், மின் ஒளியியல் உருவ உணர் கருவிகளை (Electro-Optical Image Sensors) உருவாக்குதல் ஆகியவற்றில் கிரண்குமார் நிபுணர்.

பாஸ்கரா செயற்கைக்கோள்களில் (1979, 1981) பொருத்தப்பட்டிருந்த டி.வி., கேமரா முதல், சந்திரயான் (2008), மங்கள்யான் (2013) விண்கலன்களில் பொருத்தப்பட்ட நவீனக் கருவிகள் வரை, விண்ணிலிருந்து புவியைக் கண்காணித்துத் தகவல்களை அளிக்கும பல கருவிகளை அவரது தலைமையிலான குழுவினர் உருவாக்கியுள்ளனர்.

சந்திரயான் விண்கலத்தில் பொருத்தப்பட்டுள்ள புவிப்பரப்பு வரைபடக் கேமரா, ஹைப்பர் ஸ்பெக்ட்ரல் இமேஜிங் உள்ளிட்ட 5 நவீனக் கருவிகளை கிரண்குமார் வடிவமைத்தார்.

புவியின் தாழ்வட்டப் பாதை (LEO), புவிநிலைச் சுற்றுப்பாதை (GEO) ஆகியவற்றில் நிலைநிறுத்தப்படும் செயற்கைக்கோள்களில் பொருத்தப்படும் இக்கருவிகள், பல்லாயிரம் கி.மீ. தொலைவிலிருந்து புவியின் மேல்பரப்பு, சமுத்திரம், வளிமண்டலம் ஆகியவற்றைப் படம்பிடித்து, வானிலை அறிவிப்பு, மீன்வளம், கடல் நீரோட்டம், இயற்கைச் சீற்ற எச்சரிக்கை, கனிம வளம் அறிதல், தொலைத்தொடர்பு, வானொலி, புவிப்பரப்பு வரைபடம், தேசப் பாதுகாப்பு உள்ளிட்ட பல அம்சங்களில் உதவுகின்றன.

மூன்றடுக்கு இமேஜிங் கருவிகளை நிர்மாணித்ததிலும், மூன்றாம் தலைமுறை இமேஜிங் கருவிகளை உருவாக்கியதிலும், கிரண்குழுவினரின் பங்களிப்பு முக்கியமானது. இன்சாட்-3டி, ரிசோர்ஸ்சாட், மைக்ரோசாட், கார்டோசாட், சந்திரயான், மங்கள்யான் உள்ளிட்டவற்றில் அவை இயங்குகின்றன.

இந்திய தொலையுணர்வு சங்கத்தின் சாதனையாளர் விருது (1994) மற்றும் பாஸ்கரா விருது (2007), வாஸ்விக் விருது (1998), விண்வெளிப் பயணவியல் சங்கத்தின் விருது (2001), இஸ்ரோவின் சாதனையாளர் விருது (2006), சர்வதேச விண்வெளிப் பயணவியல் அகாதெமியின் குழு சாதனை விருதுகள் (2008, 2013), இந்திய

அரசின் பத்மஸ்ரீ (2014) உள்ளிட்ட பல்வேறு விருதுகளையும் கௌரவங்களையும் கிரண்குமார் பெற்றுள்ளார்.

76 ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ள கிரண்குமார், பல கல்வி நிறுவனங்களின் கௌரவ முனைவர் பட்டங்களையும் பெற்றுள்ளார். தேசிய பொறியாளர் அகாதெமி, சர்வதேச விண்வெளியியல் அகாதெமி ஆகியவற்றில் உறுப்பினராக உள்ள கிரண்குமார், உலக வானிலையியல் சங்கம், புவிக் கூர்நோக்கு செயற்கைக்கோள் குழு, இந்தோ-யு.எஸ். விண்வெளிக் கூட்டுப்பணிக்குழு ஆகியவற்றில் இந்தியப் பிரதிநிதியாக இடம்பெற்றுள்ளார்.

**விண்ணிலேயே நிரந்தரமாகச் செயல்படும் விண்வெளி ஆய்வு நிலையத்தை அமைக்கும் திறன் இந்தியாவுக்கு உள்ளது என்று கூறும் கிரண்குமார், அதற்கான திசையில் இஸ்ரோ நிறுவனத்தை வழிநடத்தி வருகிறார்.**

**- வ.மு. முரளி**
**“தினமணி”, 28.2.2017**

## தாம்பரம் ஜெ. தேவராசுலு மறைந்தார்

பெரியார் ஈ.வெ. இராமசாமி-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளையின் புரவலரும், தாம்பரம் சூரியன் ப்ரோமோட்டர்ஸ் இயக்குனரில் ஒருவருமான தாம்பரம் அகரம்தென் பதுவஞ்சேரி தே. கோகுலன் அவர்களின் தந்தை ஜெ. தேவராஜீலு (87) அவர்கள் வயது மூப்பின் காரணமாக 11.3.2017 சனிக்கிழமை மறைந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்றே அடக்கம் செய்யப்பட்டபொழுது, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், R.M.K. பொறியியல் கல்லூரியின் சேர்மன் முனிரத்தினம், கல்லூரி இயக்குனர் ஜோதி நாயுடு, காஞ்சி மாவட்ட முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் துரைசாமி, ஆர். ரவி (ONGC), ஆல்மைட்டி குழுமம் என். நவுலின், ஆர். ராஜகோபால், சூரியன் ப்ரோமோட்டர்ஸ் குழுமம் இயக்குனர்கள் காஞ்சனா ரவி, கே. பாலாஜி-ராஜலட்சுமி, மதுசூதனன், சூடாமணி கோவிந்தராஜ் உட்பட ஏராளமானோர் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

மறைந்த ஜெ. தேவராசுலு அவர்களுக்கு தே. பாபு, தே. கோகுலன் என்ற இரண்டு மகன்களும், தே. பகவதி ரமேஷ் என்ற ஒரு மகளும் உள்ளனர்.

- ஆசிரியர் குழு

## இரா. இராதாகிருட்டிணன் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல்

காஞ்சிபுரம் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் செயல்வீரர் இரா. நாராயணமூர்த்தியின் தந்தை இரா. இராதாகிருட்டிணன், 27.2.2017 திங்கள்கிழமை மறைவுற்றார். அடுத்த நாள் இறுதி நிகழ்வு நடைபெற்றது. அன்னாரின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்வு 12.3.2017 ஞாயிறு காலை 10 மணிக்கு காஞ்சிபுரம், பாண்டவ பெருமாள் கோயில் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர் சி. நடராசன் தலைமை தாங்கினார். நாராயணமூர்த்தி வரவேற்புரையாற்றினார்.

வாலாசா வல்லவன் அன்னாரின் படத்தினைத் திறந்து வைத்து நிறைவுரையாற்றினார். முற்போக்கு சமூக நீதிப் பேரவை தலைவர் க. கோதண்டன், பாலாறு பாதுகாப்பு கூட்டியக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் காஞ்சி அமுதன், மா.பெ.பொ.க. கிருட்டிணன், கிரில் உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சு. ஏகாம்பரம், இரா.நி.தே. பவணந்தி, செல்வி. சு. அனுசுயா ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர். முன்னதாக இராதாகிருட்டிணன் அவர்களின் பெயர்த்திகள் நால்வர் திருக்குறள் ஒப்புவித்தனர். இறுதியில் அவருடைய பெயரன் சி.அ. கோகுலகிருட்டிணன் நன்றியுரையாற்றினார்.

## அதியன் இல்லத் திறப்பு விழா

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் துக்காப்பேட்டை அழகாபுரி நகரில் செங்கம் - பெங்களூரு சாலையில் 5.3.2017 ஞாயிறு காலை 7 மணிக்கு ஆசிரியர் இராமசாமியின் அதியன் இல்லம் திறப்பு விழா நடைபெற்றது.

வேலூர் உதவும் உங்கள் அமைப்பின் செயல்வீரர் இரா. சந்திரசேகரன் இல்லத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். கே. இராமசாமி வரவேற்புரையாற்றினார். மா. முருகேசன் தலைமை தாங்கினார். கோ. குணசீல பூபதி, து. தட்சிணாமூர்த்தி, து. ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சி. இராதாகிருட்டிணன், மக்கள் மையம் செங்கம் க.ச. கோபால், கோ. ஏழுமலை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இரா. அறிவரசன் நன்றியுரையாற்றினார்.

# வெள்ளுடை வேந்தர் சர்.பிட்டி. தியாகராயர்

- மரு.க. சோமாஸ் கந்தன், எம்.டி.,

"பிறப்பினால் உயர்வு, தாழ்வு கற்பிப்பது திராவிட மரபன்று; திருவள்ளுவர் முதலிய திராவிடத் தலைவர்கள் பிரம்மனின் முகத்துதித்தோம் யாம் என்று பெருமை பேசினாரில்லை. பிறப்பினால் ஏற்றத்தாழ்வு கற்பித்தோரும், நால்வகைச் சாதி இந்நாட்டில் நாட்டினோரும் ஆரியரே. அவ்வருணாச்சிரமக் கோட்டையை இடித்தெறிய 2500 ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றிய புத்தர் முயன்றார்; முடியவில்லை. பின்னர் வந்த பற்பல சீர்திருத்தவாதிகள் முயன்றனர்; தோற்றனர். இராமானுஜர் புரோகிதக் கொடுமைகளைக் களைந்தெறிய ஒல்லும் வழியில் முயன்றார்; தோல்வியே கண்டார். பார்ப்பனர் பிடி மேன்மேலும் அழுத்தமுற்றே வந்தது. தீண்டாமை, அண்டாமை, பாராமை முதலிய சமுதாயச் சீர்கேடுகளும் படிப்படியே பரவிப் பெருகலாயின. அத்தகைய பலம் பொருந்திய சாதிக்கோட்டையைத் தகர்த்தெறிய இதுவே தக்க காலம். இதுவே தக்க வாய்ப்பு."

இவ்வண்ணம் பிராமண ஆதிக்க எதிர்ப்பினை மக்களிடையே தெளிவுபெறும் விதத்தில் எடுத்து இயம்பிய சான்றோர் யார்?

தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் (ஜஸ்டிஸ் கட்சி) சென்னை மாகாண முதல் மாநாடு 1917ஆம் ஆண்டு நடைபெற்றது. அவ்வியக்கத்தின் தலைவர் சர்.பிட்டி. தியாகராயர் ஆற்றிய உரையின் ஒரு பகுதியாகும், மேலே கண்டது.

திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவராகப் போற்றப்படும் சர். பிட்டி. தியாகராயர், சென்னை கொருக்குப்பேட்டையில் வாழ்ந்த அய்யப்பச் செட்டியார்-வள்ளியம்மாள் இணையருக்கு மூன்றாவது மகனாக 1852ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27ஆம் நாள் பிறந்தார்.

1876ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்று இளங்கலைப் (B.A.) பட்டம் பெற்றார். அவர் பன்மொழி வித்தகர். தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், இலத்தீன், பிரெஞ்சு, உருது ஆகிய மொழிகள் கற்றுத் தேர்ந்திருந்தார்.

வணிகத் தொழிலில் செல்வாக்கு மிக்க செல்வந்தர் குடும்பத்தில் பிறந்த தியாகராயர், வணிகம் மூலம் ஈட்டிய பொருளைத் தேவைப்படும் ஏழை எளியோர்க்கு, ஊருணி போலவும், பழுமரம் போலவும் வாரி வழங்கி வந்தார்கள்.

1866ஆம் ஆண்டு கொடிய பஞ்சம் ஏற்பட்டது. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன். பசியால் இளைத்தே வீடுதோறும் இரந்தும் பசியறாது அயர்ந்தவெற்றரைக் கண்டு உளம் நைந்தேன் என்று வள்ளலார் மனம் உருகி நின்றார். தர்ம சாலையை அமைத்தார். சாதி சமய வேறுபாடின்றி அனைவருக்கும் உணவு வழங்கிப் பசித் துன்பம் நீக்கினார், வள்ளலார்.

அதேபோன்று பிட்டி தியாகராயர் அனைவர்க்கும் உணவு வழங்கினார், 1876ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் பஞ்சத்தின்போது.

வர்த்தகத்திலும், சிறுதொழில் வளர்ச்சியிலும் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அவர் தன் முன்னோரின் பரம்பரைத் தொழிலான கைத்தறி நெசவில் முழுக்கவனம் செலுத்தி, பெரிய நெசவாலையைத் தொடங்கிப் பலருக்கும் வேலை வாய்ப்பினை உருவாக்கினார். கைத்தறியில் பல புதுமைகளைப் புகுத்தினார்.

உத்தமம் காந்தியார் சென்னை வந்துற்றபோது, இவரது நெசவாலையைக் கண்ணுற்றார். **ஆங்கே நெசவாலையில் தியாகராயர் நிகழ்த்தியுள்ள புதுமைகளைக் கண்டு வியந்து மகிழ்ந்து நின்றார். அதனால் தான் மகாத்மா காந்தி தனது ஆசிரமத்தில் உள்ளவர்களுக்கு நெசவுப் பயிற்சி அளிக்க விரும்பி மதன்லாலையும், மணிலாலையும் சென்னைக்கு அனுப்பி தியாகராயரிடம் பயிற்சி பெறவைத்தார். மகாத்மா காந்தியார், தியாகராயரைத் தனது இயக்கத்திற்கு ஆதரவு தருமாறும் வேண்டினார்.**

தேசிய நிதி-தொழில் சங்கத்தின் சார்பில் 1908இல் சென்னையில் நடந்த அனைத்திந்திய நெசவுப் போட்டியில், அவரது நெசவுத் தொழிற்சாலை நற்சான்றிதழ்களையும், பதக்கங்களையும் பெற்றது.

தென்னிந்திய வர்த்தக் கழகம் தோற்றம் பெறவும், நிலைபெற்று இயங்கிடவும் தியாகராயர் பெருமுயற்சி மேற்கொண்டார். இக்கழகத்தின் முதல் கூட்டம் 9.10.1909 அன்று தியாகராயர் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. 1909ஆம் ஆண்டிலிருந்து 1921ஆம் ஆண்டுவரை இக்கழகத்தின் தலைவராக இருந்து தென்னிந்தியாவின் வர்த்தக வளர்ச்சிக்கும், தொழில்கள் பெருக்கத்துக்கும் அளப்பரிய பணிகள் புரிந்துள்ளார்.

கல்வித் தொண்டு

"அன்ன சத்தரம் ஆயிரம் வைத்தல்; ஆலயம்பதி னாயிரம் நாட்டல்; அன்ன யாவினும் புண்ணியம் கோடி; ஆங்கோர் ஏழைக்கெழுத்தறி வித்தல்" என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க, ஏழை, எளிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக தன் சொந்த நிதியில் கல்விச் சாலைகளை நிறுவிக் கல்விப் பணி புரிந்துவந்தார்.

தியாகராயர் காலத்தில் வண்ணாரப்பேட்டையில் தொடக்கப் பள்ளி வசதிகூட அரிதாகக் காணப்பட்டது. தியாகராயர் தமது சொந்த வருமானத்தில், வண்ணாரப்பேட்டைவாழ் சிறுவர்கள் பயின்றிட "வடசென்னை செகண்டரிப் பள்ளி"யினை 3.12.1897இல் தொடங்கினார். அனைத்து மாணவர்களும் இப்பள்ளியில் கட்டணமின்றிக் கல்வி கற்றனர். இந்தப் பள்ளி 1904இல் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. தியாகராயர் காலத்திற்குப் பின்னர் இப்பள்ளியின் அறக்கட்டளைத் தலைவராகப் பிட்டி செங்கல்வராய செட்டியார் பொறுப்பேற்றார். தியாகராயர் நினைவைப் போற்றும் வகையில் இப்பள்ளியைக் கல்லூரியாக உயர்த்த முயற்சி மேற்கொண்டார். இவருடன் சி. பார்த்தசாரதி நாயக்கர், பி.சி. முனிசாமி செட்டி, டாக்டர். தருமாம்பாள் முதலியோர் துணைநின்று ஒத்துழைப்பு நல்கினார்கள். இவர்களது இடைவிடாம முயற்சியால் ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜ பாகவதர், இசையரசு, எம்.எம். தண்டபாணி தேசிகர் போன்றவர்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்தி நிதி திரட்டினார்கள். சில செல்வந்தரும் நிதி நல்கினார்கள். 1956 முதல் இப்பள்ளி வளர்ந்து தியாகராயர் கல்லூரியாக வளர்ச்சி பெற்றுப் புகழ்பெற்றது.

சென்னையில் பச்சையப்பன் அறக்கட்டளையின் உறுப்பினராகவும் தலைவராகவும் 1887 முதல் 1924 வரை தியாகராயர் தொண்டாற்றி வந்தார்.

இவரது இடைவிடாத முயற்சியால்தான் அரசு விக்டோரியா தொழிற் பயிற்சிக் கூடம் 26.3.1889இல் நிறுவப்பட்டது.

இவரது முயற்சியால் 1905இல் ஏற்படுத்தப்பட்டதே செங்கல்வராய நாயக்கர் தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளி ஆகும்.

கல்விக்கு முன்னுரிமை தந்து பள்ளிகள், கல்லூரிகள் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டு உழைத்தவர், தியாகராயர்.

மாநிலக் கல்லூரியில் தமிழாசிரியர் பணி இடம் காலியாக இருந்தது. திரு.வி.க.வை அந்தத் தமிழாசிரியர் பணியில் அமர்த்த எண்ணினார். சக்கரவர்த்தி நயினார், டாக்டர் ாசி. நடேசனார் ஆகியோரை அனுப்பி திரு.வி.க.வின் கருத்தை அறிய முயற்சித்தார். திரு.வி.க. அப்பணியை ஏற்க விரும்பவில்லை என்பதை அறிந்து பெரிதும் வருந்தினார்.

கா. சுப்பிரமணியப் பிள்ளை விரிவுரையாளராக சென்னை சட்டக்கல்லூரியில் பணியாற்றி வந்தார். பேராசிரியராகப் பதவி உயர்வு தந்து அவரைப் பெருமைப்படுத்தினார்.

'அக்காலத்தில் மருத்துவக் கல்லூரியில் படிக்கவரும் மாணவர்கள் சமஸ்கிருதம் படித்திருக்க வேண்டும்' என்ற விதி இருந்தது. அதனால் தமிழ் மாணவர்கள் மிகவும் இடர்ப்பட்டனர். நீதிக்கட்சி ஆட்சியில் சர். பிட்டி. தியாகராயர் முனைந்து அவ்விதியை இரத்து செய்ய வைத்தார். இதனால் பிராமணரல்லாத மாணவர்கள் மருத்துவம் பயில வாய்ப்பினைப் பெற்றனர். இந்த வரலாற்று உண்மையை உணராமலேயே, சிலர், "திராவிடத்தால் வீழ்ந்தோம்" என்று மேடை ஏறி முழங்குகின்றனர் இன்று. அவர்கள் செய்ந்நன்றி கொன்றவர் ஆவர்.

பிராமண ஆதிக்கத்தை எதிர்ப்பது என்பது தியாகராயரது அரசியல் நெறி என்ற போதிலும், தனிப்பட்ட எந்த ஒரு பிராமணர் மீதும் வெறுப்பினைக் காட்டியவரல்லர்; அவர்களிடத்தில் மனிதாபிமானத்தோடு நடந்துகொண்டவர் சர். பிட்டி. தியாகராயர்.

அவரது இல்லத்தில் ஏழை பிராமணச் சிறுவர்கள் சமஸ்கிருதமும் வேதங்களும் பயில அனைத்து உதவிகளையும் செய்து வந்துள்ளார்.

**யஞ்யராமன் என்ற பிராமண இளைஞர், தாழ்த்தப்பட்டவர்களுக்காகத் தொண்டு செய்ய சேரிப் பகுதியில் போய்த் தங்கினார் என்பதற்காக அவரை சாதியிலிருந்து விலக்கி வைத்தனர், பிராமண சாதி வெறியர். அம்மட்டோ! அவர் பார்த்து வந்த வேலையிலிருந்தும் அவரை நீக்கிவிட்டார்கள். அப்போது தியாகராயர் தலையிட்டு அவரைப் பச்சையப்பன் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணி நியமனம் செய்வித்தார். இது அவரின் மனிதாபிமானச் செயலுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.**

**வெள்ளுடை வேந்தர்**

தியாகராயர் எப்பொழுதும் நெற்றியில்

திருநீறோடும், மலர்ந்த முகத்தோடும் காட்சி தருபவர். அரிமா நோக்கும், பீடு நடையும், அஞ்சாநெஞ்சும் கொண்டு திகழ்ந்தார்.

அறிவும் உணர்வும் பெற்ற நாள்முதல் முடிவினை முத்தமிடும் நாள் வரை என்றும் எப்பொழுதும் தூய வெண்ணிற ஆடையே அணிந்து உள்ளத் தூய்மையை வெளிப்படுத்திய ஏந்தல், அவர். எக்காரணம் கொண்டும், எவர் வற்புறுத்தலுக்கும் செவி சாய்த்துத் தான் அணியும் வழக்கமான வெள்ளுடையை மாற்றிக்கொண்டதில்லை.

ஒரு சமயம் சென்னை ஆளுநர் நடத்திய அரசு விருந்துக்குத் தியாகராயர், தாம் இயல்பாக அணியும் வெள்ளுடையிலேயே சென்றார்.

விருந்து மாளிகை முன் காவலில் இருந்த இராணுவப் பாதுகாவலர், விருந்துக்கு வருவோர் விருந்துக்கெனக் குறிப்பிட்ட மேனாட்டு உடை அணிந்து வரவேண்டும் என்பது நியதி என்று தியாகராயரிடம் வணக்கத்துடன் தெரிவித்துக் கொண்டார். அந்நியதியைக் கடைபிடித்தே விருந்துக்கு வருதல் வேண்டும் என்பது ஆளுநரின் ஆணை என்றும் கூறினார். தனக்கு இந்நிலை ஏற்பட்டுவிட்டதை எண்ணி வருந்துவதாகவும், மன்னிக்குமாறும் வேண்டினார்.

இதைக்கேட்ட தியாகராயர், காவலரிடம், ‘வருந்தற்க, நியதியையும், ஆளுநரின் ஆணையையும் மதிக்கிறேன்’ என்று கூறிவிட்டு திரும்பிச் சென்றுவிட்டார்.

தியாகராயர், திரும்பி வருவதன் காரணத்தை அறிந்த ஐரோப்பியப் பிரமுகர்கள், ‘அவசியமில்லை; எங்களுடன் வாருங்கள்; யாரும் ஏதும் கூறமாட்டார்கள்’ என்று கூறி அழைத்தார்கள்.

தியாகராயர், சிரித்து, ‘வர இயலாது; நியதி, சட்டம், கட்டளை என்பனவற்றை மதித்து நடப்பதே மனிதனுக்கு அழகு’ என அவர் சுட்டிக் காட்டினார்.

தியாகராயரது வெள்ளுடை ஆர்வத்தையும், நாட்டுப் பற்றையும், அவரது தன்மான உணர்வையும் கண்ட ஐரோப்பியர்கள் வியந்து போற்றினார்கள்.

நடந்த நிகழ்வுகளை விருந்தினர் ஆளுநரிடம் தெரிவித்தனர். அதனைக்கேட்ட ஆளுநர் மிகவும் வருந்தினார். இந்தியப் பிரமுகர்கள், அவர்கள் விரும்பும் இந்திய உடை அணிந்தே அரசு விழாக்களில் கலந்துகொள்ளலாம் என்று புதிதாக ஆணை பிறப்பித்தார். இப்புதிய ஆணையைத் தியாகராயருக்குத் தெரியப்படுத்தி விருந்தில் கலந்து கொள்ளும்படிக் கேட்டுக்கொண்டார். தியாகராயரும் ஆளுநரைப் பாராட்டி விருந்தில் கலந்துகொண்டு சிறப்புச் செய்தார்.

அரசியல் ஈடுபாடு

கல்வி வளர்ச்சியிலும், தொழில் வளர்ச்சியிலும், அறச்செயல் புரிதலிலும் முழு ஈடுபாடு கொண்டு புகழுடன் விளங்கினார். பின்னர் அரசியலில் தொண்டாற்றவும் முனைந்தார். அரசியல், மூலதனம் இல்லாமலே நடத்தப்பெறும் வணிகமாக இன்று மாறிவிட்டது; பலர் அரசியல் செய்து பெரும் செல்வந்தர்களாக மாறியுள்ளனர்.

ஆனால் அந்நாளில் தியாகராயர் போன்றோர் அரசியலால் தங்கள் செல்வத்தை இழந்தவர் ஆவர்; சொத்து சேர்க்கவில்லை. அறவுணர்வோடு தொண்டாற்றுவதையே உயிர்க் கொள்கையாகக் கொண்டு செயல்பட்டார்.

இவரது அரசியல் தொண்டு 1882-லிருந்து விளங்கத் தொடங்கியது. 1884ஆம் ஆண்டின் இறுதியில் இந்தியத் தேசியக் காங்கிரசு தோற்றுவிக்கப்பட்டது. 1916ஆம் ஆண்டு வரை அவர் தீவிர காங்கிரஸ்காரராகவே செயல்பட்டார். 1914இல், இந்தியத் தேசியக் காங்கிரசின் இரண்டாவது மாநாடு சென்னையில் நடைபெற்றது. தியாகராயர் அம்மாநாட்டை முன்னின்று சிறப்பாக நடத்தினார். சென்னை வந்திருந்த மகாத்மா காந்திஜிக்கு சிறப்பான வரவேற்பை அளித்தார்.

நகர அவையில் அவர் ஆற்றிய தொண்டு

இளங்கலைப் பட்டம் பெற்ற 1876ஆம் ஆண்டிலிருந்து ஓரிரு ஆண்டுகளிலேயே தியாகராயர் பொதுத் தொண்டில் நாட்டங்கொண்டு பொது வாழ்வில் கால்பதித்தார்.

1882ஆம் ஆண்டு மே திங்கள் 6ஆம் நாளன்று நடைபெற்ற நகர அவைத் தேர்தலில், தண்டையார் பேட்டைவாழ் மக்களின் விருப்பிற் கிணங்கிப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இத்தேர்தலில் வெற்றி பெற்றதைப் போன்று 1925 வரை நடைபெற்ற நகரவைத் தேர்தல் அனைத்திலும் தண்டையார்பேட்டை வேட்பாளராக நின்று வாகை சூடினார்.

சுமார் நாற்பத்திரண்டாண்டுக் காலம் தொடர்ந்து நகரவை உறுப்பினராக இருந்துவரும் பெருஞ் சிறப்பைத் தியாகராயர் பெற்றிருந்தார். நாற்பத்திரண்டாண்டுகளுக்கு மேல் சென்னை நகர மக்களுக்கு அரிய தொண்டாற்றி அவர்களுடைய பாராட்டையும் நன்மதிப்பையும் பெற்ற ஒப்பற்ற நகரத் தந்தை ஆவார். இவர் காலத்தில் சென்னை நகரம்

சிறப்பான வளர்ச்சியைப் பெற்றிருந்தது.

1910-1912ஆம் ஆண்டுகளில் மாநகராட்சிப் பிரதிநிதி என்ற முறையில் சென்னை மாகாணச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுத் தொண்டாற்றினார்.

முதலில் தென்சென்னைக்கு மட்டுமே டிராம் வண்டிப் போக்குவரத்து வசதி இருந்தது. தியாகராயர், டிராம் வண்டிப் போக்குவரத்து வசதியை சென்னையின் பல்வேறு பகுதிகளுக்கும் விரிவுபடுத்தினார்.

சென்னை நகரின் சில தெருக்களில் மட்டுமே அந்நாளில் மண்ணெண்ணெய் விளக்குகள் சுடர்விட்டு எரிந்தன. 1912ஆம் ஆண்டில் தியாகராயர் சென்னை நகருக்கு பதின்மூன்று இலட்சம் ரூபாய் செலவில் மின்விளக்குகள் அமைக்கத் திட்டத்தைத் தீட்டிச் செயல்படுத்தினார்.

தியாகராயர் தன் பதவிக் காலத்தில் சென்னை நகரச் சிறார்கள் கல்வி வசதி பெறத் தொடக்கப் பள்ளிகள் எல்லாப் பகுதிகளிலும் தோற்றுவித்தார். ஏழைச் சிறார்கள் தொடர்ந்து கல்வியினைப் பெற நகராட்சிப் பள்ளிகளில் மதிய உணவு தருவதற்கும் ஏற்பாடு செய்தார். இதனால் பாதியில் பள்ளியைவிட்டு நிற்கும் மாணவர் எண்ணிக்கை குறைந்தது. மாணவரிடையே கல்வி பயிலும் ஆர்வம் தூண்டப்பட்டது.

நகரவை மருத்துவத் துறையில் மகப்பேறு இல்லங்கள் அமைத்து நடத்திவர வழிவகுத்தார். ஆங்கே பணிபுரியும் பெண் பேறுகால உதவுநர்களுக்குச் (Mid-wife) சிறப்புப் பயிற்சி அளிக்கச் செய்தார். ஆங்கில முறைப்படி பயிற்சி பெற்ற செவிலியர்களையும் மருத்துவர்களையும் நியமித்தார். இதன்மூலம் மக்கள் நலத்தில் அவர் கொண்டிருந்த அக்கறை வெளிப்பட்டது.

அவர் நகரவைத் தலைவராக இருந்த போது எல்லாப் பகுதிகளுக்கும் குடிநீர்க் குழாய் இணைப்புகள் தரப்பட்டன.

அக்காலத்தில் (1913) அறப்பணியாகக் கோவில் குளங்களுக்கு வரியில்லாமல் தண்ணீர் விட வேண்டும் என்ற நியதியை நகரவை மேற்கொண்டிருந்தது.

**சென்னை மாநகராட்சியின் உறுப்பினராய் இருந்த டாக்டர் டி.எம். நாயர், "கோவில்களுக்கு நிறைய வருமானம் கிடைப்பதால் அவை தண்ணீர் வரி கட்டுவதில் சிரமம் ஏதும் இருக்காது" என்று பேசினார். தியாகராயர் கோவில்களுக்குத் தண்ணீர் வரி வசூலிக்கக் கூடாது என்றார். இதனால் தியாகராயருக்கும் நாயக்கருக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.**

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் தெப்பக்குளம் பாசிப்படர்ந்து பாழடைந்து கிடந்தது கொசுப் பெருக்கத்தால் நோய் பரவ வாய்ப்பாய் அமைந்திருந்தது.

சென்னை மாநகராட்சியின் உறுப்பினராய் இருந்த டாக்டர் டி.எம். நாயர், "நகர மக்களின் சுகாதாரத்தை மனதில் கொண்டு பார்த்தசாரதி கோயில் குளத்தை மண்கொட்டி மூடி அங்கே பூங்கா நிறுவிட வேண்டும்" என்று தீர்மானம் கொண்டு வந்தார்.

"தெப்பக்குளத்தை சுத்தம் செய்து செப்பனிடுவதை விட்டுவிட்டு மூடுவதா" என்று சர். பிட்டி. தியாகராயர் வெகுண்டெழுந்து நாயரின் தீர்மானத்தைத் தோற்கடித்தார். இதனால் இருவரிடையே கருத்து மோதல் ஏற்பட்டு, நட்பில் தொய்வு ஏற்பட்டது. சிறிது காலம் பேசிக் கொள்ளாமலிருந்தனர்.

அவர் காலத்தில், கூவம் நதியைச் சீர்செய்ய வேண்டும் என்று முயற்சித்தார். அரசு இதில் மிகுந்த அக்கறைக் கொண்டு திட்டம் தீட்டிச் செயற்படுத்த வேண்டும் என்று ஆளுநர் வில்லிங்டன் பிரபுவிடம் தன் இறுதி நாள் வரை வற்புறுத்தி வந்தார். ஆனால் அவரது ஆசை நிறைவேறாமலேயே போய்விட்டது.

அரசியல் ஈடுபாடும் தொண்டும்

இந்தியத் தேசியக் காங்கிரசில் தியாகராயர், தன் நண்பர் டாக்டர் டி.எம். நாயருடன் இணைந்து 1916ஆம் ஆண்டு வரை தீவிரமாகச் செயலாற்றி வந்தார். அப்போது இருவருமே காங்கிரசு இயக்கத்தில் வடவர் ஆதிக்கமும் பிராமணர் ஆதிக்கமும் மிகுந்திருந்ததை உணரத் தலைப்பட்டனர்.

அரசுப் பணிகளிலும், காங்கிரசு செயற்குழுவிலும், பிராமணரல்லாதாருக்கும் உரிய பங்கு தந்து பயனடையச் செய்வது காங்கிரசின் நேர்மையான கடமையாகும் என்று தியாகராயர் வற்புறுத்தி வந்தார்.

இந்தியாவை ஆட்சி புரிந்தவர்கள் ஆங்கிலேயர் என்ற போதிலும் நடைமுறையில் பிராமணர்களே ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளனர் என்பதைக் காலப்போக்கில் உணரத் தொடங்கினார். தேசியக் காங்கிரசு கட்சி பிராமணர்களின் நலனுக்காகவே இயங்கி வந்தது என்பதையும் உணர்ந்தார். அரசுப் பணிகளிலும் கல்வி வாய்ப்பிலும் பெரும் பங்கு பிராமணர்க்கே உரியதாக இருந்து வந்துள்ளதை அறிந்து, உளம் கொதித்தெழுந்தார்.

தியாகராயர் அரசியல் உலகை பிராமணர் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கும் வழிவகைகளைச் சந்தித்திருந்தார். அதற்குரிய காலத்தையும்

எதிர்பார்த்திருந்தார்.

நகரவை நிகழ்வுகளால் கருத்து வேறுபாடு கொண்டு சிறிதுகாலம் நாயரும், தியாகராயரும் பேசிக் கொள்ளாதிருந்தனர். இவர்கள் மீண்டும் இணைவதற்கு ஏற்ப இருவர் வாழ்விலும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவை :

தியாகராயர், பெரும் செல்வந்தர், சிறந்த வணிகர், பொதுமக்களால் போற்றப்பட்ட சென்னை நகரவை உறுப்பினர் என்ற பெருமைகள் பெற்றிருந்தவர் என்ற போதிலும், சென்னை மயிலாப்பூர் கோவில் விழாவில் உரிய மதிப்பினை பிராமண விழாக் குழுவினர், தியாகராயருக்கு, சூத்திரர் என்பதால் தராது அவமதித்துவிட்டனர்.

அதனால் வெகுண்டு வெளியேறிய தியாகராயர், நேராக டாக்டர் டி.எம். நாயர் இல்லம் ஏகி நட்பினைப் புதுப்பித்துக் கொண்டார்.

டாக்டர் டி.எம். நாயரும், பிராமணர் சூதினை, வஞ்சகத்தை, துரோகத்தை சில மாதங்களுக்கு முன் நடைபெற்ற ஒரு நிகழ்வின் மூலம் உணர்ந்து சீற்றம் கொண்டிருந்தார்.

1916ஆம் ஆண்டு டெல்லி சட்டமன்றத்திற்கு (இம்பீரியல் சட்டமன்றம்) சென்னை மாகாணச் சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து ஒரு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். டாக்டர் நாயர் இப்பொறுப்பிற்குப் போட்டியிட விரும்பி அனைத்து நண்பர்களின் ஆதரவையும் வேண்டி நின்றார். ஆதரவு தருவதாக உறுதி அளித்த பிராமண நண்பர்கள் இறுதியில் திட்டமிட்டு நாயருக்குத் தோல்வியையே பரிசாகத் தந்தனர்.

மேலும் - 1916ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணச் சட்டமன்றத் தேர்தலில் காங்கிரசு கட்சியின் சார்பில் போட்டியிட்ட திராவிடத் தலைவர்கள் டாக்டர் டி.எம். நாயர், பனகல் அரசர் ராமராய நியங்கார், கே.வி. ரெட்டி நாயுடு, சர்.பி. தியாகராயர் ஆகியோர் காங்கிரசு கட்சியினரால் வஞ்சிக்கப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டனர்.

சர். பிட்டி. தியாகராயரும், டாக்டர் நாயரும், ‘இனி காங்கிரசு கட்சியால் பிராமணரல்லாத மக்கள் எந்தப் பயனும் அடையமுடியாது’ என்பதை நன்கு உணர்ந்தனர். காங்கிரசு கட்சி பார்ப்பனர் பிடியில் வசமாய்ச் சிக்கி உள்ளது எனக் கண்டு, உளம் நொந்து வெறுப்புற்று அக்கட்சியிலிருந்து வெளியேறினார்கள். **அப்போது அவர்களைக் கடுமையாக விமர்சித்து அறிக்கை வெளியிட்ட பெரியார் பின் நாளில் அதே காரணத்திற்காக காங்கிரசைவிட்டு வெளியேறித் தீவிரமாகக் காங்கிரசை எதிர்த்திட்டார்.**

காங்கிரசைவிட்டு விலகிய பின்னர், பார்ப்பனரல்லாதார் நலன்களைக் காப்பதற்கு வழிகாண வேண்டும் என்ற நல்ல நோக்கோடு, 1916 நவம்பர் 20ஆம் நாளன்று சென்னை விக்டோரியா பொது அரங்கில், சர். பிட்டி. தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர், டாக்டர் சி. நடேசனார், மேலும் ஏறத்தாழ 30 பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் கூடி, ‘‘தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம்’’ (நீதிக்கட்சி) (S.I.L.F.) என்ற அரசியல் அமைப்பினைத் தொடங்கினர். இவ்வியக்கத்தின் தலைவராகத் தியாகராயரையே தேர்வு செய்தனர்.

தியாகராயர் இயக்கத்தின் சார்பாக வெளியிட்ட ‘பிராமணரல்லாதார் கொள்கை விளக்க அறிக்கை’, பிராமணரல்லாத மக்களிடைய பெருமளவிற்கு விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்தது. அவர்கள் இயக்கத்தின் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் பேராதரவு தந்தனர். நீதிக்கட்சி இந்தியாவிற்கு விடுதலை வேண்டும் என்று வலியுறுத்தியது. அதேநேரத்தில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஆகியோருக்கு முழு உரிமையும், பாதுகாப்பும் வேண்டும் என்றும், அரசுப் பணிகளிலும், கல்விச் சாலைகளிலும் இடஒதுக்கீடும் வழங்கப்பட வேண்டும் என்று கோரியது.

சர். பிட்டி. தியாகராயரின் தன்னலமற்ற சேவையின் பயனால், நீதிக்கட்சி மக்களின் பேராதரவையும் நம்பிக்கையும் பெற்று 1920 நவம்பர் 20இல் நடைபெற்ற சென்னை மாகாணத் தேர்தலில் சிறப்பான வெற்றியைப் பெற்றது.

அன்றைய ஆளுநர் வெல்லிங்டன் பிரபு, நீதிக்கட்சியின் தலைவர் சர். பிட்டி. தியாகராயரை ஆட்சி அமைக்குமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் தியாகராயர் முதல்வர் பதவியை ஏற்காமல், கடலூர் வழக்கறிஞர் சுப்பராயலு ரெட்டியாரை முதலமைச்சராகப் பொறுப்பேற்கச் செய்தார். கொள்கை உறுதி கொண்ட உள்ளம் படைத்தவர் நெஞ்சில், பதவி ஆசை கோலோச்சுவதில்லை அன்றோ!

அவர் முதலமைச்சர் பதவியை நாடவில்லை. என்பதை விளக்கி ஆளுநருக்குக் கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டது : ‘‘இந்திய வரலாற்றிலேயே முன் எப்போதும் இல்லை எனும்படி, அரசியல் ஞானமற்ற பாமர மக்களைத் தட்டி எழுப்பிய பாவத்திற்காக என்னையும் அகால மரணமடைந்த என் அருமை சக தலைவர் டாக்டர் டி.எம். நாயரையும், ‘‘வெள்ளையன் வால் பிடிப்பவர்கள்’’ என்று காங்கிரசு பத்திரிகைகளும் தலைவர்களும் தூற்றுகின்றனர். நான் இப்பதவியை ஏற்பின் எனது புனிதமான கட்சிக்குக் களங்கம் விளைவித்தவன்

ஆவேன். இதனால் பதவி ஏற்கமாட்டேன்'' என்று விளக்கியிருந்தார்.

வேல்ஸ் இளவரசர் (எட்டாம் எட்வர்ட்) 17.1.1922இல் சென்னைக்கு வருகை புரிந்தார். அப்போது சென்னை துறைமுகத்தில் நகர மக்கள் சார்பில் இளவரசரை வரவேற்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆளுநர் வெலிங்டன் பிரபு, சென்னை மாநகராட்சித் தலைவர் தியாகராயரை மேனாட்டு உடையணிந்து இளவரசரை வரவேற்கும்படி கேட்டுக்கொண்டார். தியாகராயர் அதற்கு உடன்படாமல், மாநகராட்சித் துணைத் தலைவரைக் கொண்டு வரவேற்புரையை வாசிக்க ஏற்பாடு செய்யுமாறு ஆலோசனை வழங்கினார். ஆளுநர் அதற்கு உடன்படவில்லை. வெள்ளுடை அணிந்தே தியாகராயர் வரவேற்புரையை வாசித்தளிக்க ஆளுநர் இசைந்தார்.

காங்கிரசு கட்சியினர், இளவரசருக்கு வரவேற்பளிப்பதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர். தியாகராயருக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டனர். தியாகராயர் இல்லத்திலும் கல்லெறிந்து கலகம் விளைவித்தனர்.

சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான தென்னை மரங்களிலிருந்து கள் இறக்குவதைத் தடுத்துத் தீர்மானம், தியாகராயர் தலைமையில் 9.5.1922இல் நிறைவேற்றப்பட்டது.

மாநகராட்சி மன்ற தலைமைப் பதவியிலிருந்து 23.10.1923 அன்று விலகினார்.

''போக போக்கியத்தை விட்டுத் தாமாகவே கள்ளும் முள்ளும் காட்டாறும் கருங்குழியும் நிரம்பிய பாதை வழியே செல்லத் தொடங்கினார். அவர் களத்தில் தூவிய விதை நன்றாக வளர்ந்திருக்கிறது. அவர் அன்று பறக்கவிட்ட சமுதாயப் புரட்சிக் கொடியின்கீழ் நின்று தான் நாம் இன்று பணியாற்றி வருகிறோம்'' என்றார், அறிஞர் அண்ணா.

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்'' என்பதற்கிணங்க, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த மாமனிதர்; எதற்கும் எவர்க்கும் அஞ்சாது மனச்சன்றுக்குத் தோன்றுவதை மறைக்காது உள்ளது உள்ளபடியே பேசிடும் உத்தமர். அரசியல் தலைவர்களில் இப்படி ஓர் ஒப்பற்ற தலைவரைக் காண்பது அருமையிலும் அருமையாகும்.

தியாக வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்த தியாகச் செம்மல், திராவிட மக்களின் பெருந்தலைவர் 28.4.1925 அன்று மக்களைத் துன்பக் கடலில் ஆழ்த்திவிட்டு இப்பூவுலகை விட்டு மறைந்தார்.

தியாகராயர் கட்டிக்காத்த கடமையையும், அவர் கொண்டிருந்தஅரசியல் பண்பையும் நாகரிகத்தையும் போற்றி அவர் வழிநடக்க உறுதி கொள்வோம். வாழ்க, அவர் புகழ்!

28.4.2017 அன்று தியாகராயர் நினைவு போற்றும் நாள்

## வாழ்க்கை ஒப்பந்த விழா
## கோ.ர. திலீபன் - சி. தமிழ்ச்செல்வி

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வட்டம், கோவில் புரையூர், இரவி - பரமேஸ்வரி இணையரின் மகன் கோ.ர. திலீபனுக்கும்; மேல்மலையனூர் வட்டம், மேல் அருங்குணம் சின்னத்தம்பி - கமலா இணையரின் மகள் சி. தமிழ்ச்செல்விக்கும் வாழ்க்கை ஒப்பந்த விழா 9.3.2017 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அவலூர்பேட்டை ஆர்.ஏ.பி. திருமணக் கூடத்தில் செஞ்சி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ். மஸ்தான் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நீல. நிலவு அரசு வரவேற்புரையாற்றினார். மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் வே. ஆனைமுத்து அவர்கள் வாழ்க்கை ஒப்பந்த விழாவை நடத்தி வைத்தார்.

பகுத்தறிவுப் பாடகர் நா. காத்தவராயன் - செக்கடிக்குப்பம், சித்த மருத்துவர் மா. அர்ச்சுனன் - செக்கடிக்குப்பம், கோ. கோதண்டராமன், மா.பெ.பொ.க. வேளாண் அணி து. செயலர், திருவண்ணாமலை மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளர் பொன். சுப்பிரமணியன், செஞ்சி அ.கு. மணி, ம.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கோ. சாக்ரடீஸ், திராவிட விடுதலைக் கழகம் வி.மு. வேலு - பெங்களூர், இளங்கோ - பெங்களூர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அ. பெரியார், தொகுப்புரை வழங்கினார். விழா நிகழ்வு இனதே 9.30 மணிக்கு நிறைவடைந்தது.

## காஞ்சியில் நெடுவாசலுக்கு போராட்டத்திற்கு ஆதரவாகப் பொதுக்கூட்டம்

காஞ்சிபுரம் காந்தி சாலை பெரியார் நினைவுச்சுடர் அருகில் நெடுவாசல் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாகப் பொதுக்கூட்டம் பாலாற்றுப் பாதுகாப்புக் கூட்டியக்கத்தின் சார்பில் நடைபெற்றது. மா.பெ.பொ.க. காஞ்சி மாவட்டச் செயலாளர் சி. நடராசன் தலைமை தாங்கினார். ஆவணப் பட இயக்குநர் ஆர்.ஆர். சீனிவாசன், காஞ்சி அமுதன், பாலாற்றுப் பாதுகாப்பு இயக்கம் பா.ச. மாசிலாமணி, சி. தேவராசன், பா. பேரின்பன், சு. ஏகாம்பரம், ஜெ. சிவக்குமார் ஆகியோர் உரையாற்றினர். உலக ஒளி, க. சம்பத்குமார், இரா. நாராயண[illegible]வி எழுச்சிப் பாடல்களைப் பாடினர்.

# இடஒதுக்கீடு... இதயத் துடிப்பு!

பண்ருட்டியில் தேசியத் தலைவர் பண்ருட்டி பி.எஸ். ரங்கநாதன் தலைமையில், விஸ்வகர்ம சமூகத்திற்கு இடஒதுக்கீடு குறித்த விழிப்புணர்வு கல்விப் பயிலரங்கம், 19.2.2017 அன்று, பிற்படுத்தப்பட்டோர், பேரவைப் பொதுச் செயலாளர் கலச. ராமலிங்கம் அவர்களால் இடஒதுக்கீடு குறித்த வரலாற்று நிகழ்வுகளைப் பயிற்றுவிக்கப்பட்டது.

2016 நவம்பர் 16இல் சென்னையில் நடைபெற்ற இடஒதுக்கீடு பயிலரங்கத்தில் 20 இளைஞர்கள் பங்கேற்ற நிலையில், பண்ருட்டியில், 2017 பிப்ரவரி 19இல் 40 இளைஞர்கள் பங்கேற்றது, இடஒதுக்கீடு குறித்த விழிப்புணர்வு விசுவகர்ம சமூக இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ளது என்பதற்கான அத்தாட்சியாக விளங்கியது.

பொதுச் செயலாளர் ஈ. மாணிக்கவேலு தனது துவக்க உரையில், 1992 மண்டல் கமிஷன் தீர்ப்புப்படி ஒவ்வொரு மாநிலமும் தத்தம் மக்களின் நன்மைக்காகா பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைத்துக் கொள்ள அனுமதித்தது.

அதன்படி 1993இல் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் சென்னையில் துவங்கப்பட்டு, கல்வி, வேலைவாய்ப்பு, சமூக அந்தஸ்து, பொருளாதார நிலையில் பின்தங்கி உள்ள சமூகம் தங்களின் முன்னேற்றத்திற்காக MBC சேர்க்க விரும்பினால் அதற்காக விண்ணப்பிக்கலாம் என்கின்ற அறிவிப்பின்படி, 26.4.1995 அன்று விஸ்வகர்ம சமகத்தை MBC-யில் சேர்க்கக் கோரி, அகில இந்திய விசுவகர்மப் பேரவை, தமிழ்நாடு நகைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், தி.நகர் பொன், வெள்ளி நகை தொழிலாளர் நல சங்கம் இணைந்து சமுதாயக் கூட்டமைப்பாக நேர்முக சாட்சியமும் கோரிக்கை மனுவும் சமர்ப்பித்தோம்.

22 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆக்கப்பூர்வமான முயற்சிகள் மேற்கொண்டுவரும் சூழ்நிலையில், இளைய தலைமுறையினர் மனதில் இடஒதுக்கீடு குறித்த விழிப்புணர்வை விதைத்திடத்தான் இத்தகைய வகுப்புவாரி இடஒதுக்கீடு பயிலரங்கம் தமிழகம் எங்கும் பேரவை சார்பாக நடத்தி வருகின்றோம்.

பயிலரங்கத் தொடக்கத்தில் மாநிலத் தலைவர் செஞ்சி ஏ. குமார் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக விழுப்புரம் எம்.கே. தியாகராய பாகவதர் விசுவகர்ம நற்பணி மன்றத் தலைவர் ஏ. ஆதவன் முத்து, கடலூர் மாவட்ட பண்ருட்டி நகர ஆபரணத் தொழிலாளர் சங்கச் செயலாளர் பி. பாண்டியன், தமிழ்நாடு அனைத்து நகை வியாபாரிகள் சங்க பண்ருட்டி கிளைத் தலைவர் சக்திவேல் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

செய்தி : ஈ. மாணிக்கவேலு, அரக்கோணம்

## மருத்துவக் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கையில் அரசுப் பள்ளிகளின் அவல நிலை

தேசிய தகுதிகாண் நுழைவுத் தேர்வு (NEET) கிராமப்புற மாணவர்கள், அரசு மருத்துவக் கல்லூரிகளில் சேருவதற்கான வாய்ப்பைப் பெரிதும் பாதிக்கும் என்று எல்லோரும் சொல்கிறார்கள். பொது நுழைவுத் தேர்வு இல்லாதிருந்த போது அரசுப் பள்ளிகளில் படித்த கிராமப்புற மற்றும் நகர்ப்புற மாணவர்கள் எந்த அளவில் மருத்துவப் படிப்பில் சேர்ந்திருக்கிறார்கள் என்று பார்ப்போம்.

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி பெறப்பட்ட உண்மை நிலை அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது. 2009 முதல் 2016 வரையிலான எட்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இடங்கள், தனியார் மருத்துவக் கல்லூரிகள், அரசுக்கு ஒதுக்கீடு செய்யும் இடங்கள் ஆகியவற்றில் அரசு நடத்திய ஒற்றைச் சாளர முறையின்கீழ் அரசுப் பள்ளிகளில் 12ஆம் வகுப்புப் படித்த மாணவர்கள் 278 பேர் மட்டுமே சேர்ந்திருக்கிறார்கள். சராசரியில் ஆண்டிற்கு 32 மாணவர்கள் மட்டுமே சேருகிறார்கள். 2016ஆம் ஆண்டில் 48 மாணவர்கள் மருத்துவப் படிப்பில் சேர்ந்தனர்.

ஓராண்டில் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஒதுக்கும் இடங்கள் சேர்த்து 3650 இடங்கள் இருக்கின்றன. இதில் ஒரு விழுக்காடு அளவுக்கே அரசுப் பள்ளி மாணவர்கள் இடம்பெறுகின்றனர். 2009-2016 காலத்தில் அரசின் பொறுப்பில் நிரப்பப்பட்ட 29,225 இடங்களில் 278 பேர் மட்டுமே அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்கள். 12ஆம் வகுப்புப் படிக்கும் மாணவர்களில் 50 விழுக்காட்டினர் அரசுப் பள்ளிகளில்தான் படிக்கிறார்கள். அரசுப் பள்ளிகளின் தரமற்ற அவல நிலையைப் பற்றி தமிழ்நாட்டு அரசு கிஞ்சிற்றும் கவலைப்படவில்லை. ஏனெனில் இது ஏழை, எளிய மக்களுக்கு எதிரான அரசு; தனியார் மயமே தகுதியை வளர்க்கும் என்று கல்வியில் வணிகக் கொள்ளை ஊக்குவிக்கும் தரங்கெட்ட அரசு.

# மருத்துவ நுழைவுத் தேர்வு வந்துவிட்டது தமிழர்கள் என்ன செய்யப் போகிறோம்!

2017-18ஆம் கல்வி ஆண்டில் மருத்துவப் படிப்புக்கான மாணவர் சேர்க்கைக்குப் பொது நுழைவுத் தேர்வு இருக்குமா? என்கிற கேள்வி தமிழக மாணவர்களின் தலைமேல் கத்திபோல் தொங்கிக் கொண்டிருக்கிறது.

28.4.2016 அன்று உச்சநீதிமன்றம் இந்தியா முழுவதும் உள்ள மருத்துவக் கல்லூரிகளில், தேசிய தகுதிகாண் நுழைவுத் தேர்வு (National Eligibility-cum-Entrance Test - NEET) மூலமே மருத்துவப் படிப்புக்கான மாணவர் சேர்க்கை நடக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது. தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்கள், திடீரென அறிவிக்கப்பட்ட நுழைவுத் தேர்வை தங்கள் மாநில மாணவர்களால் எழுத இயலாது என்று கூறி எதிர்த்தன. அதனால் நடுவண் அரசு ஓர் அவசரச் சட்டம் மூலம் மாநில மருத்துவக் கல்லூரிகளுக்குப் பொது நுழைவுத் தேர்வு எழுதுவதிலிருந்து 2016-2017ஆம் கல்வி ஆண்டிற்கு மட்டும் விலக்கு வழங்கப்பட்டது.

எனவே, தமிழ்நாட்டில் 2007ஆம் ஆண்டு முதல், பனிரெண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் பெறும் மதிப்பெண் தரவரிசையின் அடிப்படையில் மருத்துவப் படிப்பில் மாணவர்களைச் சேர்க்கும் நடைமுறையின்படி, கடந்த ஆண்டு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நடத்தி முடிக்கப்பட்டது. ஆயினும் தமிழ்நாட்டு அரசு, தேசிய நுழைவுத் தேர்வு எழுதுவதிலிருந்து நிலையான விலக்கு பெறும் வகையில் சட்டம் இயற்ற வேண்டும் என்று பலதரப்பினரும் வலியுறுத்தினர். எல்லா எதிர்க்கட்சிகளும் இதையே கூறின.

முன்னாள் முதலமைச்சர் செயலலிதாவின் மறைவுக்குப் பின் ஆளும் அ.தி.மு.க.வில் ஏற்பட்ட குழப்பங்களுக்குப்பின் கூட்டப்பட்ட சட்டப்பேரவைக் கூட்டத்தில் 1.2.2017 அன்று இதற்கான சட்டம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அப்போது இரண்டு சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. முதலாவது சட்டம் தமிழ்நாட்டில் பொது மருத்துவம் (MBBS) மற்றும் பல் மருத்துவப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை பற்றியதாகும். இதன்படி, தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இடங்களுக்கும், தனியார் மருத்துவக் கல்லூரிகள் அரசுக்கு ஒப்படைக்கும் இடங்களுக்கும் பனிரெண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வின் மதிப்பெண் தரவரிசைப்படி மாணவர் சேர்க்கை நடைபெறும். சிறுபான்மை அல்லாத தனியார் மருத்துவக் கல்லூரிகள் 65 விழுக்காடு இடங்களையும், சிறுபான்மை மருத்துவக் கல்லூரிகள் 50 விழுக்காடு இடங்களையும் அரசுக்கு ஒப்படைக்க வேண்டும். மருத்துவப் படிப்புக்கான எல்லா இடங்களும் அரசால் ஒற்றைச் சாளர முறையில் பொதுக் கலந்தாய்வு மூலம் நிரப்பப்படும் என்று அச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரிகள்

| | | எண்ணிக்கை | அவற்றில் உள்ள இடங்கள் |
|---|---|---|---|
| 1. | அரசுக் கல்லூரிகள் | 21 | 2750 |
| 2. | தனியார் கல்லூரிகள் | 15 | 2100 |
| 3. | அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட நிர்கநிலைப் பல்கலைக்கழகங்கள் | 10<br>---- | 1650<br>------ |
| | மொத்தம் | 46<br>---- | 6500<br>------ |

நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் தமிழக அரசுக்கு இடங்களை அளிப்பதில்லை. ஏனெனில் அவற்றுக்கான விதிகள் அத்தன்மையில் இருக்கின்றன.

இரண்டாவது சட்டம் முதுநிலை மருத்துவப் படிப்புகளில் மாணவர் சேர்க்கை பற்றியதாகும். முதுநிலைப் படிப்புகளில் அரசுக் கல்லூரிகளில் 1331 இடங்களும் தனியார் கல்லூரிகளில் 973 இடங்களும் உள்ளன. மொத்தம் உள்ள 2304 இடங்களுக்கும் 2015 வரை தமிழ்நாடு அரசு நடத்தும் நுழைவுத் தேர்வில் பெறப்படும் மதிப்பெண் அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்பட்டனார். இதில் 50 விழுக்காடு இடங்கள் அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. இந்நிலையில் 2016ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் பிற மாநிலத்தவரும் பொதுத் தேர்வு மூலம் முதுநிலைப் படிப்பில் அனுமதிக்கப்பட வேண்டும் என்று கூறியது. எனவே இப்போது இயற்றப்பட்டுள்ள சட்டத்தில் முதுநிலை மருத்துவப் படிப்பில் சேர்க்கை முறை 2015இல் இருந்தது போன்றே நீடிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

மருத்துவப் படிப்பில் சேர்க்கை குறித்த இவ்விரு சட்டங்களும் தமிழக ஆளுநரின் ஒப்புதல் பெறப்பட்டு நடுவண் அரசுக்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளன. நடுவண் அரசின் மக்கள் நல்வாழ்வு அமைச்சகம், மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், சட்ட அமைச்சகம் ஆகியவை ஒப்புதல் அளித்தபின் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட வேண்டும்.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் பழனிச்சாமி தில்லியில் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியைச் சந்தித்த போது, தமிழ்நாட்டு அரசு இயற்றிய சட்டங்களுக்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு வேண்டுகோள் விடுத்தார். 8.2.2017 அன்று தமிழ்நாட்டு அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் விசயபாஸ்கர் தில்லியில் நடுவண் அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஜே.பி. நட்டாவையும் அதிகாரிகளையும் சந்தித்து இதுகுறித்து வலியுறுத்தினார். 15.3.2017 அன்று தமிழ்நாட்டு அரசின் தலைமைச் செயலாளரும், மக்கள் நல்வாழ்வுத் துறையின் செயலாளரும் தில்லி சென்று உரிய உயர் அதிகாரிகளிடம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத்தர ஆவன செய்யுமாறு வேண்டினர். அப்போது குறைந்தது இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கேனும் தமிழ்நாட்டுக்குப் பொது நுழைவுத் தேர்விலிருந்து விலக்கு அளிக்குமாறும், அதற்குள் மாநிலப் பாடத் திட்டத்தை சி.பி.எஸ்.சி. பாடத் திட்டத்திற்கு இணையாகத் தரம் உயர்த்தி, பொது நுழைவுத் தேர்வுக்கு மாணவர்களை அணியப்படுத்திவிட முடியும் என்றும் கெஞ்சிக் கூத்தாடியதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. 24.3.2017 அன்று தமிழ்நாட்டின் மக்கள் நல்வாழ்வு அமைச்சரும், உயர்கல்வித் துறைக்கான அமைச்சரும், அதிகாரிகளும் தில்லி சென்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஜே.பி. நட்டாவைச் சந்தித்தனர். அவர் ஒப்புதல் தர மறுத்துவிட்டதாகச் செய்தி வெளிவந்துள்ளது.

ஏழரைக் கோடித் தமிழர்களின் பேராளராக உள்ள சட்டப்பேரவை ஒருமனதாக இயற்றிய பொது நுழைவுத் தேர்வுக்கு விலக்கு அளிக்கக் கோரும் சட்டத்துக்கு ஒப்புதல் அளிப்பது குறித்து நடுவண் அரசு ஆணவ மவுனம் சாதிப்பது தமிழ் இனத்தையே இழிவுபடுத்துவது ஆகும்.

7.5.2017 அன்று தேசிய தகுதிகாண் பொது நுழைவுத் தேர்வு நடைபெற உள்ளது. இதற்கு மாணவர்கள் விண்ணப்பிப்பதற்கான இறுதிநாள் 1.3.2017 அன்றுடன் முடிந்துவிட்டது. 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகள் 31.3.2017 அன்று வ[illegible] பொது நுழைவுத் தேர்வு உண்டா? இல்லையா? என்ற மனஉளைச்சலில் மாணவர்களும் பெற்றோரும் தவித்துக் கொண்டிருக்கின்றனர். நடுவண் அரசு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத்தராது என்றும், அப்படியே ஒருகால், பெற்றுத் தந்தாலும் உச்சநீதிமன்றம் அதில் தலையிட்டுத் தடுத்திட வாய்ப்புள்ளது என்றும் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

மாநிலப் பாடத் திட்டத்தின்கீழ் பொது நுழைவுத் தேர்வு எழுதுவதற்குரிய பாடப்பிரிவை படித்து இப்போது 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வு எழுதுபவர்கள் எண்ணிக்கை 3,90,000; சி.பி.எஸ்.சி.யில் இதே பிரிவில் தமிழ்நாட்டில் பொதுத் தேர்வு எழுதுவோர் 3,700 பேர் என்று 22.3.2017 அன்று சட்டமன்றத்தில் அமைச்சர் விசயபாஸ்கர் தெரிவித்திருக்கிறார். தமிழ்நாடு புதுச்சேரி உட்பட இவ்வாண்டு 8,98,763 பேர் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வை எழுதினர்.

மருத்துவப் படிப்பு, பெருங்கொள்ளை வணிகமாகிவிட்டதைத் தடுக்கவும், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் வெளிப்படைத் தன்மையற்ற - முறைகேடான மாணவர் சேர்க்கையை ஒழிக்கவும், தகுதி - திறமையை நிலைநாட்டவும், மாணவர்கள் பல நிறுவனங்களில் தேர்வு எழுதும் அவல நிலையைத் தவிர்க்கவும் தேசிய தகுதிகாண் நுழைவுத் தேர்வு முறை கொண்டு வரப்பட்டுள்ளதாக நடுவண் அரசு கூறுகிறது. ஆனால் நடுவண் அரசின்கீழ் உள்ள ஜிப்மர், எய்ம்ஸ் உள்ளிட்ட நான்கு மருத்துவக் கல்லூரிகளுக்குத் தேசிய பொது நுழைவுத் தேர்விலிருந்து விலக்கு அளித்தது எப்படி நியாயமாகும்?

இந்தியாவில் மொத்தம் 412 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. 190 அரசுக் கல்லூரிகளில் 25,880 இடங்கள்; 222 தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 26835 இடங்கள் என மொத்தம் 52715 இடங்கள் இருக்கின்றன.

2016ஆம் ஆண்டு இந்திய அளவில் 7,31,223 பேர் நுழைவுத் தேர்வு எழுதினர். அவர்களில் 4,09,477 பேர் தேர்ச்சி பெற்று, மருத்துவக் கல்லூரிகளில் சேருவதற்கான தகுதியைத் பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டது. நுழைவுத் தேர்வில் மொத்தம் 180 வினாக்களுக்கான மதிப்பெண் 720 ஆகும். தேர்ச்சி பெறுவதற்கான குறைந்தபட்ச மதிப்பெண் 150 ஆகும். அதனால்தான் நான்கு இலட்சத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் தேர்ச்சி பெறமுடிந்தது. ஆனால் மருத்துவப் படிப்பில் உள்ள மொத்த இடங்களோ 52,715 மட்டுமே! இந்த நிலை, தனியார் மருத்துவக் கல்வி நிறுவனங்களின்

கொள்கைக்கு வழிவகுத்தது. மேலும் 2016ஆம் ஆண்டு நடுவண் அரசு, தேசிய நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் சேருவதற்கான திட்டவட்டமான நெறிமுறைகளை அறிவிக்கவில்லை. அதனால் நுழைவுத் தேர்வின் தரவரிசையில் கீழ்நிலையில் இருந்த பணக்கார வீட்டு மாணவர்கள் தனியார் மருத்துவக் கல்லூரிகளிலும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களிலும் பெருந்தொகையைக் கொடுத்துச் சேர்த்துவிட்டனர். இதுகுறித்து நடுவண் அரசின் மீது கண்டனக் கணைகள் பாய்ந்தன.

எனவே 10.2.2017 அன்று நடுவண் அரசின் மக்கள் நல்வாழ்வு அமைச்சகம் மாநில அரசுகளுக்கு ஒரு சுற்றறிக்கையை அனுப்பியுள்ளது. அதில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் 2017-18ஆம் கல்வி ஆண்டில் மாணவர் சேர்க்கையை ஒற்றைச் சாளர முறையில் பொதுக் கலந்தாய்வின் மூலம் மாநில அரசுகளே நடத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இது வரவேற்கப்பட வேண்டியது மட்டுமல்லாமல் கட்டாயம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதுமாகும்.

ஆனால் நம்முன் உள்ள தலையாய சிக்கல், தமிழக அரசின் மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இடங்களுக்கான மாணவர் சேர்க்கை தேசிய தகுதிகாண் நுழைவுத் தேர்வு வாயிலாகா நிரப்பப்படக் கூடாது என்பதே ஆகும். 2007ஆம் ஆண்டுமுதல் நடப்பில் இருப்பதுபோல் பனிரெண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வின் மதிப்பெண் தரவரிசைப்படி தமிழக அரசால் ஒற்றைச் சாளர முறையில் மருத்துவப் படிப்புக்கு மாணவர் சேர்க்கை நடத்தப்படும் முறையே நீடிக்க வேண்டும். தனியார் மருத்துவக் கல்லூரிகளின் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களின் இடங்களுக்கும் மாணவர் சேர்க்கை தேசிய தகுதிகாண் நுழைவுத் தேர்வு மூலம் நடைபெறுவதில் நமக்குத் தடையில்லை. ஆனால் நடுவண் அரசின் சுற்றறிக்கையில் அறிவுறுத்தியுள்ளவாறு அந்த இடங்களுக்கான மாணவர் சேர்க்கை தமிழக அரசின் கட்டுப்பாட்டின்கீழ் நடக்க வேண்டும்.

இந்நிலையில் மாநில அரசுகளின் கல்வி உரிமையைப் பறிக்கும் வகையில் நடுவண் அரசு மற்றொரு அறிவிப்பைக் கடந்த பிப்பிரவரி மாதம் வெளியிட்டுள்ளது. 2018-19ஆம் கல்வி ஆண்டில் இந்தியா முழுவதும் உள்ள பொறியியல் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கைக்கும் தேசிய தகுதிகாண் நுழைவுத் தேர்வை நடத்த நடுவண் அரசு முடிவு செய்துள்ளது. இந்தியாவில் 3,288 பொறியியல் கல்லூரிகள் உள்ளன. தமிழ்நாட்டில் 550 பொறியியல் கல்லூரிகள் உள்ளன. இவற்றில் 520 தனியார் பொறியியல் கல்லூரிகளாகும். மொத்தம் இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட இடங்கள் இருக்கின்றன. 2016ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் இடங்களில் மாணவர்கள் சேராததால் காலியாக இருந்தன. நிலைமை இவ்வாறிருக்க நடுவண் அரசு பொறியியல் படிப்புக்கும் இந்திய அளவில் நுழைவுத் தேர்வு எழுத முடிவு செய்திருப்பதன் நோக்கம் மாநில அரசுகளின் கல்வி உரிமையைப் பறிப்பதே ஆகும். எல்லா அதிகாரங்களும் நடுவண் அரசிலேயே குவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்கிற ஏகாதிபத்திய எண்ணமே காரணமாகும். மாநில அரசுகளைக் கால்தூசாகக் கூட மதிக்காத ஆணவப்போக்கு மோடி ஆட்சியில் வேகமாக வளர்ந்து வருகிறது.

நுழைவுத் தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்குக் கிடைக்காவிட்டால், எண்ணிப் பார்க்கவே நெஞ்சம் வெடிக்கும்படியான கேடுகள் உண்டாகும்.

நுழைவுத் தேர்வில் மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் (CBSE) பாடத் திட்டத்திலிருந்து வினாக்கள் கேட்கப்படுகின்றன. மாநிலப் பாடத் திட்டத்தில் பயின்ற தமிழ்நாட்டு மாணவர்களுக்கு அவை கடினமாக இருக்கும். மேலும் கொள்குறி முறையில் (Objective Type) வினாக்கள் உள்ளன. மனப்பாட முறையில் வினாக்களுக்கு விடை எழுதிப் பழகிய மாநிலப் பாடத் திட்ட மாணவர்கள் உரிய நேரத்தில் விடையளிக்க முடியாமல் திணறுவார்கள். மேலும் தவறாக அளிக்கப்படும் விடைக்கு மதிப்பெண் கழிக்கப்படுகிறது. அதனால் மாநிலப் பாடத் திட்ட மாணவர்களால் நல்ல மதிப்பெண் பெறமுடியாது.

2016இல் நுழைவுத் தேர்வு இந்தி, ஆங்கிலம் இருமொழிகளில் மட்டுமே நடத்தப்பட்டது. பிறமொழி பேசும் மாநிலங்கள் இதை எதிர்த்ததால் இந்த ஆண்டு தமிழ் உள்ளிட்ட 9 மொழிகளில் நுழைவுத் தேர்வு நடைபெறவுள்ளது. தமிழில் வினாக்கள் இருப்பதால் தேர்ச்சி பெற வாய்ப்பிருந்தாலும் அரசு மருத்துவக் கல்லூரியில் இடம்பெறும் அளவுக்கு மதிப்பெண் பெறமுடியாது. ஆகவே சி.பி.எஸ்.சி. பாடத் திட்டத்தில் நகரங்களில் படித்த மேல்சாதி - மேல்தட்டு - பணக்கார மாணவர்களே நுழைவுத் தேர்வில் முன்னிலை பெறுவர்.

அதனால் பிற மாநில - பிறமொழி பேசும் மாணவர்களே நுழைவுத் தேர்வின் தரவரிசைப் பட்டியலில் முதலிடப் பகுதியில் பெருமளவில் இடம்பெற்றிருப்பார்கள். இவர்கள் தமிழ்நாட்டின் அரசு மருத்துவக் கல்லூரிகளில் பெரும்பாலான இடங்களைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இதைத் தமிழ்நாட்டு அரசால் தடுக்க

முடியாது.

அரசு மருத்துவக் கல்லூரியில் பயிலும் ஒரு மாணவனின் படிப்புக்காகத் தமிழ்நாட்டு மக்கள் வரிப் பணத்திலிருந்து 5 முதல் 7 இலட்சம் தொகையை அரசு செலவிடுகிறது. நம்முடைய வரிப் பணத்தில் படிக்க பிற மாநில மாணவர்களைத் தமிழ்நாட்டு அரசுக் கல்லூரியில் அனுமதிப்பதா? அந்த அளவுக்கு நமக்கு இந்தியத் தேசிய வெறி தலைக்கேறி விட்டிருக்கிறதா?

பிற மாநில - பிற மொழி பேசும் மாணவர்கள் தமிழ்நாட்டின் அரசுக் கல்லூரிகளில் படித்துவிட்டு அவர்களின் சொந்த மாநிலங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு மருத்துவம் செய்வார்கள். இந்தக் கொடுமையை நாம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பதா?

பிற மாநில மாணவர்கள் தமிழ்நாட்டில் அரசுக் கல்லூரிகளில் மருத்துவப் படிப்பில் சேரும் நிலையில் தமிழ்நாட்டு மாணவர்கள் தற்போது பெற்றுவரும் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டின் நிலை என்னவாகும்? 1920 முதல் தமிழ்நாட்டின் அரசியலும் ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றமும் இடஒதுக்கீட்டோடுப் பின்னிப்பிணைந்துள்ளது. தமிழகத்தின் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களின் மருத்துவப் படிப்பு உரிமை பறிக்கப்படுவதை அனுமதிக்கலாமா? நுழைவுத் தேர்வின் தரவரிசைப் பட்டியலில் முதலிடப் பகுதியில் இடம்பெற்றுள்ள பிற மாநில மாணவர்கள் பிற்படுத்தப்பட்ட பிரிவையோ, தாழ்த்தப்பட்ட பிரிவையோ சேர்ந்தவர்களாக இருப்பின், 69 விழுக்காட்டின்படி அவர்களுக்கு மருத்துவப் படிப்பில் இடம் தரவேண்டிய அவல நிலை ஏற்படுமா?

இந்தியா முழுமைக்கும் ஒரே பொது நுழைவுத் தேர்வு என்பதன் நோக்கம், கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாகக் கல்வியைத் தமது முற்றுரிமையாக்கிக் கொண்டிருந்த பார்ப்பன மேல்சாதி ஆதிக்க வர்க்கம், நடுவண் அரசின் உயர்கல்வி நிறுவனங்களைக் கைப்பற்றியிருப்பதுடன், மாநிலங்களில் உள்ள உயர்கல்வி வாய்ப்புகளையும் தமதாக்கிக் கொள்ள வேண்டும் என்கிற சூழ்ச்சியே ஆகும்.

தமிழ்நாட்டின் மருத்துவக் கல்லூரிகளில் தமிழக மாணவர்களைச் சேர்க்கும் உரிமை தமிழ்நாட்டு அரசுக்கு மறுக்கப்படுமானால், தமிழ்நாடு ஏன் இந்தியாவில் இருக்க வேண்டும்? இந்தியத் தேசியத்தின் பெயரால் தமிழர்களை வஞ்சிக்கும் தில்லி ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிந்து, மானமிழந்து வாழலாமா?

தமிழ்நாட்டில் அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை அதிகாரம் தமிழ்நாட்டு அரசுக்கே இருக்க வேண்டும் என்று 2017 சனவரியில் சல்லிக்கட்டு உரிமைக்காக மாணவர்கள், இளைஞர்கள், குழந்தைகளுடன் குடும்பங்குடும்பமாக ஒட்டுமொத்த தமிழர்களும் போராடியது போன்ற போராட்டத்தை நடத்த வேண்டும். அப்போதுதான் தமிழ்நாட்டின் உரிமையை வென்றெடுக்க முடியும்.

---

## நூல் மதிப்புரை

“மகளிர் குலச் சிகரங்கள்” என்ற பெயரில் கோ. பூங்கோதை அவர்கள் பெண்கள் உயர்வுக்காகப் பாடுபட்ட பல பெண்களைப் பற்றி ‘கண்ணியம்’ இதழில் தொடராக எழுதி வந்தார்கள். அவற்றுடன் மேலும் சில கட்டுரைகளை எழுதி சேர்த்து அருமையானதொரு தொகுப்பாக இந்நூலை வெளியிட்டுள்ளார்.

அன்னை சாரதா தேவி, சகோதரி நிவேதிதை, அன்னை தெரசா, அன்னை செசிரா, அன்னை இந்திரா ஆகியவற்றோடு சுயமரியாதை இயக்கப் பெண்களான நீலாம்பிகை அம்மையார், குஞ்சிதம் அம்மையார், சிவகாமி சிதம்பரனார், ஏ.பி.ஜெ. மனோரஞ்சிதம், அன்னை ஈ.வெ.ரா. நாகம்மையார், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, டாக்டர் எஸ். தருமாம்பாள், ஈ.வெ.ரா. மணியம்மையார், மூவலூர் இராமிர்தம் அம்மையார் இப்படி இன்னும் ஏராளமான பெண்களைப் பற்றி இந்நூலில் தொகுத்துக் கொடுத்துள்ளார். ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய மிகவும் அருமையான நூல்.

பக்கம் 162; விலை ரூ.150

கிடைக்குமிடங்கள் :

பூம்பொழி வெளியீடு
16, ஆறாவது குறுக்குத் தெரு, சாஸ்திரி நகர்,
அடையாறு, சென்னை - 600 020.
செல் : 98847 73781

ஐந்திணைப் பதிப்பகம்
ஏ.பி.1108, தென்றல் காலனி, 3ஆவது தெரு,
பாலமுருகன் கோயில் அருகில்,
அண்ணா நகர் மேற்கு, சென்னை - 600 040.
செல் : 99414 60109

தமிழ்க் குடிஅரசுப் பதிப்பகம்
2/12, சி.என்.கே. சந்து, சேப்பாக்கம்,
சென்னை - 600 005.
செல் : 72992 14554

# தமிழகத்தின் தாராளச் சூழலை நாம் இழந்திடலாகாது!

கோவையில் நடந்திருக்கும் இளைஞர் ஃபாருக் கொலை அதிர்ச்சியைத் தருகிறது. இந்தக் கொலை, தமிழகத்தில் உருவாகிவிரும் மோசமான சூழலின் வெளிப்பாடு என்பது அதிர்ச்சியைத் தாண்டி ஆழ்ந்த கவலையை உருவாக்குகிறது. திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைந்து செயலாற்றி வந்த ஃபாருக், சமூகத்தின் சாதி, மதப் பாகுபாடுகளையும் மூடநம்பிக்கைகளையும் சாடிவந்தவர். தொடர்ந்து இறைமறுப்புக் கொள்கைகளைப் பேசிவந்தவர். அவருடைய செயல்பாட்டின் காரணமாகவே நடந்ததாகச் சொல்லப்படும் இந்தக் கொலை, தமிழகத்தில் உருவாகிவரும் சகிப்பின்மையின் அப்பட்டமான வெளிப்பாடு.

தமிழகத்துக்கு நாத்திகப் பிரச்சாரம் புதிதல்ல. அதற்கென்று நீண்ட நெடிய மரபு இங்கு இருக்கிறது. குறிப்பாக, நவீன அரசியல் வரலாற்றில் சாதிக்கு எதிராக இங்கு பெரியார் தொடங்கிய கலகம் அதன் மையத்திலேயே கடவுளுக்கும் மதத்துக்கும் எதிரான குரலைத் தாங்கியது. ஆத்திகர்கள் இதற்குக் காலம் முழுவதும் கடுமையாக எதிர்வினையாற்றி வந்திருக்கிறார்கள். ஆனால், அது ஆகப் பெருமளவில் கருத்துத் தளத்திலேயே அமைந்து வந்திருக்கிறது. எல்லாவற்றையும் தாண்டி பொதுவெளியில், ஒரு கடைவீதியில் இன்னும் சொல்லப்போனால், கோயில்கள் அருகில் இருக்கும் இடங்களிலேயே மடை போட்டு கடவுள்களுக்கும் மதத்துக்கும் எதிராகப் பேசுவதும், கூட்டத்தில் பங்கேற்பவர்களைத் தாண்டி, ஏனையோர் அதை வேடிக்கை பார்த்தவாறே கடப்பதும் அநேகமாக தமிழ்நாட்டில்தான் இத்தனை சாதாரணமாக நடக்கும். இந்த ஜனநாயகமும் சகிப்புத் தன்மையும் ஒருவகையில் தமிழகத்தின் மிகப்பெரிய சொத்துகள். இந்து மதத்தைத் தாண்டியும் கிறிஸ்தவம், இஸ்லாம் என்று எல்லா மதத்தினரிடமுமே ஏனைய பிராந்தியங்களைக் காட்டிலும் வலுவான ஜனநாயகத் தன்மை உண்டு. ஆனால், இன்றைக்கு அந்தச் சூழல் மாறிக்கொண்டிருக்கிறது. இந்த முறை அதற்கான வெளிப்பாடு முஸ்லிம் சமூகத்திலிருந்து நிகழ்ந்திருக்கிறது.

தமிழகத்தில் இன்று செல்வாக்கு அடைந்திருக்கும் சில முஸ்லிம் அமைப்புகள் ஒற்றைக் கலாச்சாரத்தை முன்னிறுத்துகின்றன. அவை தமிழ் முஸ்லிம் சமூகத்துக்குள் ஒலிக்கும் ஜனநாயக, பன்மைத்துவமிக்க குரல்களை அச்சுறுத்துகின்றன என்பதை முஸ்லிம் அறிவுஜீவிகள் பலரும் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். இது தொடர்பில் அவர்கள் தொடர்ந்து பேசியும் எழுதியும் வந்திருக்கின்றனர். ஆனால், அவர்களின் குரலை அமுக்கத்தான் பெருமளவில் முயற்சிகள் நடக்கின்றனவே தவிர, அந்தக் குரல்களிலுள்ள நியாயத்தைப் பரிசீலிக்கவோ, இந்தப் புதிய போக்கின் பின்னுள்ள அபாயங்களைப் புரிந்துகொள்ளவோ அந்தப் போக்கிலுள்ள பலர் தயாராக இல்லை. மதவாதத்தை, மதவாதத்தைக் கொண்டு எதிர்க்க முடியாது. ஜனநாயக சக்திகள் இந்த உண்மைக்கு முகம்கொடுக்க வேண்டும். ஜனநாயகத்துக்கு மட்டும் அல்ல; சக உயிர் வாழ்வதற்கான சூழலையும்கூட கேள்விக்குள்ளாக்கிவிடக் கூடியது சகிப்பின்மை. தமிழ் முஸ்லிம் சமகமானது, இந்தியாவில் எந்த ஒரு மாநிலத்தில் உள்ள முஸ்லிம்களைக் காட்டிலும் பன்மைத்துவமும் சகிப்புத் தன்மையும் ொகண்ட முன்னுதாரணச் சமூகம். எல்லாக் கலாச்சாரங்களுக்கும் இடமளிக்கும் இந்த தாராளவாதப் போக்குதான் இன்னமும் தமிழகத்தை மதவாத சக்திகளிடமிருந்து விலக்கி வைத்திருக்கிறது. தூய்மைவாதிகள் - அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயினும் சரி - உண்மையில் அந்த மதச்சார்பின்மைக் கோட்டையைத்தான் இன்று தங்கள் சகிப்பின்மையால் உடைக்க உதவுகிறார்கள்!

("தி இந்து", 24.3.2017 தலையங்கம்)

---

## தமிழைக் காக்க தமிழ்ச்சான்றோர்கள், தமிழ் ஆர்வலர்கள் பங்கேற்கும் கலந்துரையாடல்

பேரன்புடையீர், வணக்கம்.

26.3.2017 தமிழைக் காக்க தமிழ்ச்சான்றோர்கள், தமிழ் ஆர்வலர்கள் பங்கேற்கும் கலந்துரையாடல் கூட்டத்தில் அவசியம் தாங்கள் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்களுடன் தொடர்புக்கு இங்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள எனது (ஜி.கே. மணி) முகவரிக்கு தங்களின் கைப்பேசி, தொலைப்பேசி எண்கள், மின்னஞ்சல் (E-mail ID), வாட்சுஅப் எண், கடிதம் மூலம் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஜி.கே. மணி
தலைவர், பொங்குதமிழ் வளர்ச்சி அறக்கட்டளை
ஏ-8, அலுவலர் குடியிருப்பு, அரசினர் தோட்டம்,
சென்னை - 600 002. கைப்பேசி : 9443041543

# தாமிரபரணி ஆற்றில் கோக்-பெப்சி பன்னாட்டு நிறுவனங்களின் தண்ணீர் கொள்ளைக்குத் துணைபோகும் தமிழக அரசும் நீதிமன்றமும்

தமிழ்நாட்டில் பொதிகை மலையில் தோன்றி 120 கி.மீ. பாய்ந்து திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய மாவட்ட மக்களின் தண்ணீர் தேவைக்குத் தாயாக விளங்கி வருகிறது, தாமிரபரணி ஆறு.

திருநெல்வேலியிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கங்கைகொண்டானில், தாமிரபரணி ஆற்றின் கரையில் தமிழ்நாடு அரசின் தொழில் வளர்ச்சி நிறுவனமான "சிப்காட்"டில் அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனமான கொகோ-கோலா, பெப்சி குளிர்பான ஆலைகள் உள்ளன. கோக் நிறுவனம் ஒரு நாளைக்கு 18 இலட்சம் லிட்டர் நீரை ஒரு லிட்டர் நீர் 3.75 காசு விலையிலும், பெப்சி நிறுவனம் 15 இலட்சம் லிட்டர் நீரை ஒரு லிட்டர் நீர் 5.62 காசு விலையிலும் தாமிரபரணி ஆற்றிலிருந்து உறிஞ்சி எடுத்துக் கொள்கின்றன. மக்களின் குடிநீர் தேவைக்கும், வேளாண்மைக்கும் கிடைக்க வேண்டிய நீரை கோக், பெப்சி நிறுவனங்களுக்கு அளிப்பதைத் தடைசெய்ய வேண்டும் என்று இரண்டு பொது நல வழக்குகள் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் தொடுக்கப்பட்டன. அதன்பேரில் 2016 நவம்பர் மாதம் கோக், பெப்சி நிறுவனங்கள் தாமிரபரணி ஆற்றிலிருந்து நீரைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டது.

தமிழ்நாடே கடும் வறட்சியின் பிடியில் இருக்கும் நிலையில் - வற்றாத ஆறாக விளங்கிய தாமிரபரணி ஆறு 2016இல் இரண்டு பருவ மழைகளும் பொய்த்ததால் வறண்டு கிடக்கும் நிலையில் 2.3.2017 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக்கிளை கடந்த நவம்பர் மாதம் கோக்-பெப்சிக்கு விதித்த தடையை நீக்கியது. இத்தடை நீக்கப்பட்டதற்கு மதுரை உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஏ. செல்வம், பி. கலையரசன் ஆகியோர் கூறியுள்ள காரணம் அதிர்ச்சி அளிப்பதாக இருக்கிறது.

சிப்காட்டில் உள்ள மற்ற தொழிற்சாலைகள் தாமிரபரணி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கும்போது எங்களுக்கு மட்டும் அந்த உரிமையை மறுக்கக் கூடாது என்று கோக்-பெப்சி நிறுவனங்கள் வாதிட்டன. சிப்காட்டில் உள்ள மற்ற தொழிற்சாலைகள் பொருள்களை உற்பத்தி செய்கின்றன. ஆனால் கோக்-பெப்சி நிறுவனங்கள், உடல்நலத்துக்கு ஊறுவிளைவிப்பவை என்று உறுதி செய்யப்பட்ட குளிர்பானங்களைத் தயாரித்துக் கொள்ளை இலாபம் ஈட்டுகின்றன. அதன் இரசாயனக் கழிவுகள் நிலத்தையும் நீரையும் நஞ்சாக்குகின்றன. இக்காரணத்தால் கேரளத்தில் பிளாச்சிமடா என்ற ஊரிலிருந்து கோக் நிறுவனம் விரட்டியடிக்கப்பட்டது.

இந்த வழக்கில் தமிழ்நாட்டு அரசின் சார்பில் மதுரை உயர்நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட அறிக்கையில், "தாமிரபரணி ஆற்றிலிருந்து 5,049 பில்லியன் கன அடி (ஒரு மில்லியன் என்பது 10 இலட்சம்) தண்ணீர் கடலில் போய் கலந்து கொண்டிருக்கிறது. கோக்-பெப்சி நிறுவனங்களுக்கு 43 மில்லியன் கன அடி தண்ணீர் மட்டுமே தரப்படுகிறது" என்று கூறியுள்ளது. தமிழ்நாட்டு அரசும் நீதித்துறையும் முதலாளிய நிறுவனங்களுக்குச் சார்பாகவே நடந்து கொள்கின்றன என்பதற்கு இதுபோன்ற பல நிகழ்வுகள் உள்ளன.

மேலும் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில், "தாமிரபரணி ஆற்றில் 8 அணைகள் கட்டப்பட்டு, 283 கிலோ மீட்டர் நீளத்துக்குக் கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் இவை மன்னராட்சிக் காரத்திலும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் ஏற்படுத்தப்பட்டவை. தாமிரபரணி ஆற்றிலிருந்து உபரி நீர் கடலில் கலப்பதைத் தடுத்து, உபரிநீர் முழுவதும் நீர்நிலைகளுக்கு நேரடியாகச் செல்வதற்குரிய நடவடிக்கை நாடு சுதந்தரம் பெற்று எழுபது ஆண்டுகளாகியும் எடுக்காமல் இருப்பது வருத்தம் அளிக்கிறது" என்று கூறியுள்ளனர்.

2009இல் தி.மு.க. ஆட்சியில் ரூ.369 கோடி செலவில் தாமிரபரணி-கருமேனியாறு-நம்பியாறு இணைப்புத் திட்டம் இதற்காகத் தொடங்கப்பட்டது. பாதி வேலை முடிந்த நிலையில் ஆட்சி மாற்றத்தால் கிடப்பில் போடப்பட்டது.

தாமிரபரணி ஆற்றின் உபரிநீரை, ஏரிகள், குளங்களில் தேக்கி வேளாண்மைக்கும் குடிநீருக்கும் பயன்படுத்திடவும், தாமிரபரணியில் கழிவுகள் கலந்து பாழாவதையும் ஆற்றில் மணல் கொள்ளையைத் தடுக்கவும் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்குமாறு தாமிரபரணி ஆற்றுப்படுகை மக்கள் தொடர்ந்து போராட வேண்டும்.

# மாரிசியசு நாணயத் தாள்களில் தமிழும், தமிழ் எண்களும்

**- தாம்பரம் மா. சுப்பிரமணி**

எரிமலை வெடிப்பில் இருந்து உருவான நாடு மாரிசியசு (Mauritius).

ஆப்பிரிக்கக் கண்டத்தின் தென்கிழக்கில் 2000 கி.மீ. தொலைவில் இந்துமாக் கடற்பகுதியில் இருக்கும் தீவுக் கூட்டங்களில் ஒன்று மாரிசியசு. இதன் மொத்த நிலப்பரப்பு 2040 சதுர கி.மீ. 787 (சதுர மைல்).

மாரிசியசு தீவு முதலில் போர்த்துக்கீசியர் அடுத்து, டச்சுக்காரார்கள், பின்னர் பிரெஞ்சுக்காரர்களும் ஆண்டு வந்தனர். 1767-1810 காலஅளவில் பிரான்சு நாட்டின் கட்டுப்பாட்டில் இருந்தபோது, காரைக்கால்-பாண்டிச்சேரியில் இருந்து தமிழர்கள் மாரிசியசுக்கு கூலித் தொழிலாளியாகக் கொண்டு செல்லப்பட்டனர்.

தமிழர்களோடு இந்தியாவின் பிற பகுதியிலிருந்து சுமார் 5 இலட்சம் கூலித்தொழிலாளர்கள் கொண்டு சென்றார்கள்.

மாரிசியசு - பிரிட்டனில் இருந்து 1968 சுதந்தரம் பெற்றது. 1992 குடியரசு ஆனது.

மாரிசியசு இன்றைய மக்கள் தொகை சுமார் 13 இலட்சம். இதில் சுமார் 3000 மக்கள் தமிழர்கள்.

தமிழர்கள் எண்ணிக்கையில் குறைந்து இருந்தாலும் தமிழுணர்வில் ஒப்பற்று விளங்குகிறார்கள். இதனால் மாரிசியசு மத்திய வங்கி வெளியிடும் நாணயத் தாள்களில் நாணய மதிப்பு தமிழிலும் - தமிழ் எண்களிலும் இடம்பெறுகிறது. 25, 50, 100, 200, 500, 1000 என நாணயத் தாள்களும் 20, 10, 5, 2, 1 மற்றும் சில்லறைகள் நாணயங்களாகவும் வெளியிடப்படுகிறது.

மாரிசியசு வெளியிடும் இந்த நாணயத் தாள்களில் தமிழ்மொழிக்கும் தமிழ் எண்களும் சிறப்பு சேர்க்கும் வகையில் இடம்பெற்று இருக்கிறது.

| | |
|---|---|
| 25 ரூபாய் நாணயத் தாளில் | உரு |
| 50 ரூபாய் நாணயத் தாளில் | ௫O |
| 100 ரூபாய் நாணயத் தாளில் | கOO |
| 1000 ரூபாய் நாணயத் தாளில் | கOOO |

என ரூபாய் மதிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் எண்களைத் தமிழகத்திலேயே பலரும் முறையாக அறிந்து கொள்ளாத நிலையில் மாரிசியசு நாணயத் தாள்களில் தமிழ்மொழியும், தமிழ் எண்களும் இடம்பெற்று இருப்பது மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

மாரிசியசில் ஏறத்தாழ 100 ஆரம்பப் பள்ளிகளில் தமிழ்மொழி கற்பிக்கப்படுகிறது. முருகன், விநாயகர், அம்மன் என 125 கோவில்கள் தமிழர் வழிப்பாட்டிற்காக உள்ளது.

மாரிசியசு மக்களின் மொழியாக ஆங்கிலம், பிரெஞ்சு, கிரியோல், இந்துஸ்தானி, தமிழ் உள்ளது.

ஆசியக் கண்டத்திற்கு வெளியே ஆப்பிரிக்கக் கண்டத்தில் 70 விழுக்காடு இந்திய வம்சாவளி கொண்ட நாடாகவே மாரிசியசு உள்ளது.

இயற்கை வளம் கொண்ட நாடு. ஆண்டுக்கு 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் சென்றுவரும் மாரிசியசு, சுயக் கட்டுப்பாடும், நேர்த்தியான கட்டமைப்பும், ஒழுக்கத்திற்கும், நாணயத்திற்கும் முன்னுரிமையும், போக்குவரத்துக்கான சாலைவிதிகளும், அன்பான மக்களும், அச்சமில்லா சுற்றுலாத் தளமாகவும் சிறந்து விளங்குகிறது.

கரும்பு விவசாயத்தால் ஆண்டுக்கு 625 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. தேயிலை, புகையிலை, உருளை பயிர்வளம் கொண்ட நாடு.

கம்பளப் பின்னலாடை, ரம் உற்பத்தி, தேயிலைத் தயாரிப்பு உள்ள மாரிசியசு பவளப் பாறைகள் அதிகம் கொண்ட கடலால் சூழப்பட்ட கடற்கரைகள் கொண்ட நாடு.

தமிழர்களின் உழைப்பிற்கும் - உயர்வுக்கும் மதிப்பும் - மகிழ்ச்சியும் அளிக்கும் நாடு, மாரிசியசு.

## வீரம் தந்தான்

வள்ளுவர்செய் திருக்குறளாம் வாழ்வியல்நூல்
சொத்தாகப் பெற்ற வர்நாம்
தெள்ளுதமிழ் அகம்புறம்நம் முன்னோர்தம்
செல்வங்கள்; அடுத்து வந்த
வள்ளலாரும் சித்தர்களும் வழிவழிநம்
சொந்தங்கள்; அவர்க்குப் பின்னே
துள்ளிவரும் பகைமுகத்துக் குத்தீட்டிப்
'பா'தந்தான் பாட்டு வேந்தன்.

செழித்திருந்த நாகரிகம் சிதைந்ததிங்கு
ஆரியத்தால்! பெரியார் வந்தார்
விழித்திட்டோம் நாமெல்லாம்; பாவேந்தன்
பாடல்களாய் வீரம் தந்தான்
கொழுத்தபெரும் தமிழ்நிலத்தின் கொள்கைப்போர்
முரசங்கள் அவனின் பாக்கள்
அழிக்கவந்த எதிரிகளை அவன்வேட்டுப்
பாடல்களால் ஓட்டி விட்டோம்

இருந்தாலும் இனப்பகைவர் இன்றுவரை
திருந்தவிலை; வடசொல் இந்தி
பெருந்தீங்கு செய்கிறது; பெரும்பொங்கல்
நமக்கெல்லாம் வேலை நாளாம்!
அருந்தமிழ் மாணவர்க்கே ஆகாத்
நீட்தேர்வாம்; அங்கே யுள்ள
குரங்குமனம் கொண்டோர்க்குக் காளைகளால்
கிழிபட்டும் புத்தி காணோம்

காவிநிறம் தானிஇனிமேல் வருங்காலம்
கணிக்கு மென்பார் கருத்துமூடர்
கூவுதமிழ்க் குயில்பாடல் ஒலித்திட்ட
நாட்டினிலே கோட்டான் பாட்டா?
ஆவிநிகர் தமிழ்ப்பாடல் ஆயிரமாய்த்
தந்திட்ட அவன்மேல் ஆணை!
பாவிகளை ஒழித்திடுவோம் பைந்தமிழால்
செழித்திடுவோம் பகையை வெல்வோம்!

- தமிழேந்தி

## பொன்மணி முதலாமாண்டு நினைவேந்தல்

"ஊடகச் செம்மல்" பவா சமத்துவனின் தங்கை பொன்மணியன் முதலாமாண்டு நினைவேந்தர் விழா கடந்த 18.3.2017 அன்று சென்னை சேப்பாக்கத்தில் உள்ள புதுயுகம் மகளிர் விடுதியில் நடைபெற்றது.

நிகழ்விற்கு தலைமை வகித்து பொன்மணியின் உருவப் படத்தை திறந்து வைத்தார். தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளரான பெரும்புலவர் கி.த. பச்சையப்பன்.

நினைவேந்தல் மலரை, சென்னைப் பல்கலைக்கழகத்தின் சைவ சித்தாந்தத் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் நல்லூர் சரவணன் அவர்கள் வெளியிட, மங்கை பதிப்பக உரிமையாளர் மா. அய்யாசாமி அவர்கள் பெற்றுக்கொண்டார்.

சமூகநீதிப் பேரவை நிறுவனர் மருத்துவர் விமுனா மூர்த்தி அவர்கள் "பொன்மணி விடுதி உணவுக்கூட" பெயர் பலகையைத் திறந்து வைத்தார்.

திரைப்பட பாடலாசிரியரும் நடிகருமான தமிழன் இளங்கோ, வளர்தொழில் ஆசிரியர் திரு. ஜெயகிருஷ்ணன், புழல் - நடுவண் சிறைப் பள்ளியின் ஆசிரியர் திரு. செந்துறை இராசேந்திரன் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பாவேந்தன் முதலியோரும் கலந்துகொண்ட இந்த நிகழ்ச்சி, மிகுந்த உணர்வலைகளை எழுப்பக் கூடியதாக இருந்தது.

தமிழர்தம் குடும்பங்களில், வாழ்க்கைத் துணையர்களை தேர்ந்தெடுப்பதில் மிகுந்த கவனமும் பொறுப்பும் காட்ட வேண்டியதன் முக்கியத்துவத்தையும், நமது குடும்பப் பெண்களின் உடல் - மன ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் பேச்சாளர்கள் எடுத்துக் கூறினர்.

விழாவில் பல்வேறு இயக்கத்தினர். இதழியலாளர்கள். புதுயுகம் மகளிர் விடுதியினர் எனப் பலரும் திரளாகக் கலந்துகொண்டனர்.

**ஒரே மூச்சில் நூறு குறு நூல்கள் வெளியீடு**
**தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் தலைசிறந்த பணி**
**இளைஞர்களும் தமிழ்ப் பெருமக்களும் தலைக்கு நூறு வாங்குங்கள்!**

திராவிடர் இயக்க நூற்றாண்டு கொள்கைப் பிரகடன வெளியீடாக - 2016இல் ஒரே மூச்சில் நூறு நூல்கள் வெளியிடப் போவதாக, தந்தை பெரியார் திராவிடர் கழகத்தால் அறிவித்தனர்.

உடனே, "பெரியார்-நாகம்மை அறக்கட்டளை"க்கு ஒரு அடுக்கு வேண்டும் என்று, பூவாளூர் தோழர் செகநாதனிடம் முன்பதிவு செய்தோம்.

சொன்னது சொன்னபடி - நூறு குறு, சிறு, பெரு நூல்களை 2016 திசம்பரில் வெளியிட்டுவிட்டனர். நமக்கும் 23.3.2017 அன்று அந்நூல்கள் அடங்கிய பெட்டி கிடைத்தது.

நானே 24.3.2017 பகல் 12 மணிக்கு அப்பெட்டியை உடைத்துப் பிரித்தேன். ஆகா! ஆகா! ஆகா!

1. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகள். 2. அய்ந்தாம் வகுப்புப் படித்தோரும் ஆசைப்பட்டுப் படிக்க ஏற்றது. 3. 10 உருவா முதல் 60 உருவா அடக்கவிலை குறிக்கப்பட்டவை. 4. போகும் இடமெல்லாம் எளிதில் 10 நூல்களைக் கையோடு எடுத்துப் போய்ப் படித்து முடிக்க ஏற்ற நூல்கள்!

எல்லாத் தமிழரும் வாங்குங்கள்! படியுங்கள்! மாந்துங்கள்!

100 நூல்களின் விலை ரூ.1500

நூல் கிடைக்குமிடங்கள் : பெரியார் பதிப்பகம்
அரசு விரைவுப் பேருந்து நிலையம் அருகில், காந்திபுரம், கோயமுத்தூர் - 641 044.

சுயமரியாதை பதிப்பகம் : அம்மன் காம்ப்ளக்ஸ் முதல் தளம், யாழ் தையலகம் எதிரில்,
வ.உ.சி. வீதி, உடுமலைப்பேட்டை - 642 126. திருப்பூர் மாவட்டம். பேச : 97883 24474

25.3.2017

வே. ஆனைமுத்து

## மாமேதை டாக்டர் அம்பேத்கர் - புரட்சிக் கவிஞர் பாவேந்தர்
## 127ஆம் பிறந்த நாள் விழாக் கூட்டங்கள்
## பயணத் திட்டம்

சென்னை - 18.4.2017, செவ்வாய் - மாலை பிறந்த நாள் பொதுக் கூட்டம்

காஞ்சிபுரம் - 19.4.2017, புதன் - முற்பகல் - கலந்துரையாடல் கூட்டம்.
மாலை - பிறந்த நாள் பொதுக் கூட்டம்

வேலூர் - 20.4.2017, வியாழன் முற்பகல் - கலந்துரையாடல் கூட்டம்

திருவண்ணாமலை - 21.4.2017, வெள்ளி - முற்பகல் - கலந்துரையாடல் கூட்டம்.
மாலை - பிறந்த நாள் பொதுக் கூட்டம்

பெங்களூர் - 22.4.2017, சனி - மாலை - பிறந்த நாள் பொதுக் கூட்டம்.
23.4.2017, ஞாயிறு
முற்பகல் - "இந்துச் சட்டம் - இந்திய அரசமைப்புச் சட்டம்" பற்றிச் சிறப்புச் சொற்பொழிவு
பிற்பகல் - பெரியார் - நாகம்மை அறக்கட்டளைக்கு நிதி திரட்டல்.
24.4.2017, திங்கள் - முற்பகல் - பெங்களூரில் அறக்கட்டளைக்கு நிதி திரட்டல்.

ஓசூர் - 24.4.2017, திங்கள் - மாலை - அம்பேத்கர்-பாவேந்தர் பிறந்த நாள் கூட்டம்

(25.4.2017 மாலை - திருச்சி அடைதல்)

திருச்சி - 26.4.2017, புதன் - முற்பகல் கலந்துரையாடல்; மாலை - பிறந்த நாள் பொதுக் கூட்டம்.
27.4.2017, வியாழன் - பெரியார்-நாகம்மை அறக்கட்டளை நிதி திரட்டல்.

பெரம்பலூர் - 28.4.2017, வெள்ளி. மாலை - பிறந்த நாள் பொதுக்கூட்டம்.

அரியலூர் - 29.4.2017, சனி. மாலை - பிறந்த நாள் பொதுக்கூட்டம்.

(30.4.2017 ஞாயிறு அரியலூரில் ஓய்வு)

கடலூர் - 1.5.2017, திங்கள். மாலை - பிறந்த நாள் பொதுக்கூட்டம்.

விழுப்புரம் - 2.5.2017, செவ்வாய். மாலை - பிறந்த நாள் பொதுக்கூட்டம்.

புதுச்சேரி - 3.5.2017, புதன். முற்பகல் - கலந்துரையாடல். மாலை - பிறந்த நாள் பொதுக்கூட்டம்.

(4.5.2017, 5.5.2017 புதுச்சேரியில் ஓய்வு)

குடந்தை - 6.5.2017, சனி. அம்பேத்கர்-பாவேந்தர் பிறந்த நாள் பொதுக் கூட்டம்.

சீர்காழி - 7.5.2017, ஞாயிறு. அம்பேத்கர்-பாவேந்தர் பிறந்த நாள் பொதுக் கூட்டம்.

வேண்டுகோள் :

1. தோழர்கள் கூட்டம் நடத்தும் நாளுக்கு - உந்துவாடகை, எண்ணெய்ச் செலவு, ஓட்டுநர் ஊதியம் மற்ற செலவுகளுக்காகக் குறைந்தது ரூபா.4,000 (நான்காயிரம்) தரவேண்டும்.
2. தங்கும் இடவசதி செய்யுங்கள்.

மிக நன்றி.

தோழமையுள்ள
வே. ஆனைமுத்து
(பொதுச் செயலாளர்)

# தமிழ் இனமும் ஐக்கிய நாடுகள் சபையும்

**- பாஸ்கரன் கிருஷ்ணமூர்த்தி**

ஐ.நா. சபையின் மனித உரிமை அமைப்பில் சில நாள்களுக்கு முன்பு ஒரு தீர்மானம் (எண்.34/1) நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. இதன்படி, இலங்கையில் நடைபெறும் புனரமைப்பு/மறுவாழ்வு நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய இரண்டு ஆண்டுகள் கால நீட்டிப்பு வழங்கப்பட்டு உள்ளது.

ஏற்கெனவே 2015 கேடோபர் 1-ஆம் தேதி ஐ.நா. சபை நிறைவேற்றிய தீர்மானம் (எண்.30/4), கூறியபடி செயல்படுத்துவதைத்தான் இப்போது நீட்டித்து இருக்கிறது. இது, அநீதி என்று (நியாயமாக) குரல்கள் எழுந்து உள்ளன.

கால நீட்டிப்பு இருக்கட்டும். அதைவிட அநியாயம், வேறு ஒன்று இருக்கிறதே!

2015இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண்.30/ 4, என்ன சொல்கிறது...? இதற்கும் முன்னதாக, எண்.19/2 - 22 மார்ச் 2012, எண்.22/1 - 21 மார்ச் 2013, எண்.25/1 - 27 மார்ச் 2014 என்று பல தீர்மானங்கள் நிறைவேறி உள்ளன.

இவற்றில் எல்லாம், தமிழர்களுக்கு நீதி வழங்கப்பட்டுள்ளதா...? மிக நிச்சயமாக இல்லை. ஐ.நா. சபை நிறைவேற்றி உள்ள அத்தனை தீர்மானங்களிலும், சமீபத்திய ஒன்றையும் சேர்த்து, ஒரு மிகப் பெரிய அநீதி, ஒளிந்து கிடக்கிறது; உண்மை; வெறும் புகார் அல்ல. இவற்றில் எந்தத் தீர்மானத்திலும் எங்கும், 'தமிழ்', 'தமிழர்கள்', 'தமிழ் இனம்' என்கிற சொல்லே இல்லை. ஒரே ஒருமுறை கூட, இச்சொல் வராத படிக்கு, பார்த்துப் பார்த்து மிகுந்த கவனத்துடன் இந்தத் தீர்மானங்கள் வரையப்பட்டு உள்ளன.

அடிக்கடி எல்லோராலும் குறிப்பிடப்படுவது - 2015 அக்டோபர் 1ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட தீர்மானம். (எண்.30/1), இலங்கை நாட்டு மக்கள் அனைவரையும் பொதுவாக வைத்து, மனித உரிமைகள் காக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறது - 20 அம்சங்கள், ஐந்து பக்கங்களுக்கு நீளும் இந்தத் தீர்மானம்.

தமிழ் இன மக்களின் இழப்பு, பாதிப்பு என்றெல்லாம் தப்பித் தவறிக்கூட சொல்லவில்லை. எல்லாமக்களின் உரிமைகள் என்றுதான் ஒவ்வோர் இடத்திலும் கூறப்படுகிறது.

தீர்மானம் (எண்.30/1), இலங்கையில் சமரசம், பொறுப்புணர்வு மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் (Promoting reconciliation, accountability and human rights in Sri Lanka) என்றுதான் தலைப்பிடுகிறது.

இலங்கையின் இறையாண்மை, சுதந்தரம், ஒற்றுமை, எல்லைகளின் ஒருமைப்பாட்டை மறுஉறுதி செய்வதாகத்தான் இத்தீர்மானம் தொடங்கவே செய்கிறது. மனித உரிமைகளை, அடிப்படை சுதந்தரத்தை, மொத்த மக்கள் தொகையும் முழுமையாக அனுபவிப்பதை உறுதி செய்தல், அந்த நாட்டு அரசின் முழுப் பொறுப்பு என்கிறது. இது ஒட்டுமொத்தமாக இலங்கை அரசின் கட்டுப்பாட்டுக்குள் வருகிற விவகாரம்; ஐ.நா.வுக்கோ 'மற்றவர்களுக்கோ' இதில் செய்வதற்கு ஒன்றும் இல்லை என்பதை உரக்கச் சொல்வது போலத்தான் தீர்மானம் தொனிக்கிறது.

அதாவது, 'உரிமைப் பந்து', இப்போதும், எப்போதும் இலங்கை அரசின் கோட்டுக்குள்தான் இருக்கும் என்று நிறுவுகிறது. இத்துடன் நின்றுவிடவில்லை. ஒரு நீண்ட பட்டியல் இட்டு இவற்றையெல்லாம் வரவேற்பதாகவும் சொல்கிறது.

அவை என்னென்ன...?

சனவரி, ஆகசுட்டு 2015இல் நடைபெற்ற 'வரலாற்று சிறப்பு மிக்க' சுதந்தரமான நேர்மையான தேர்தல்கள் மூலம் இலங்கையில் நடைபெற்ற சனநாயக முறையிலான அரசியல் மாற்றத்தை; முன்னர், மோதல் (conflict) காரணமாக பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதிகளில், சிவில் நிர்வாகத்தை வலுப்படுத்த எடுத்துவரும் முயற்சிகளை உட்கட்டமைப்பு வசதிகளை மறுநிர்மாணம் செய்வதில் இலங்கை அரசு கண்டுள்ள முன்னேற்றத்தை; உள்நாட்டில் இருப்பிடம் இழந்த (displaced) ஆட்கள், (கவனிக்கவும் - தமிழர்கள் அல்ல) மற்றும் உள்நாட்டில் இவ்வாறு உள்ள 'எல்லா' மக்களுக்கும் உதவ வேண்டி உலக நாடுகளுக்கு இலங்கை அரசு விடுத்த அழைப்பை...

மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் சரியானதாகத் தோன்றும் இந்த 'வரவேற்பு' மொழிகள், உண்மையில் இலங்கை அரசின் எல்லா நடவடிக்கைகளுக்கும் ஒட்டுமொத்த ஆதரவைத் தெரிவிப்பதாகத்தான் உள்ளதே தவிர, மிக மோசமாக பாதிக்கப்பட்ட ஓர் இன மக்களுக்கு ஆறுதல் தருவதாக இல்லை. இதிலே இன்னொரு வேடிக்கை. இலஞ்சம்,

ஊழல், மோசடி மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்யும் இலங்கை அரசின் நடவடிக்கைகளைப் பாராட்டுகிறது தீர்மானத்தின் ஓர் அம்சம்.

2015 பிப்பிரவரி 4ஆம் தேதி ஒரு பிரகடனத்தில், இனம், மத வன்முறையால் இறந்தோர், பாதிக்கப்பட்டோருக்கான அறிவிப்பை இலங்கை அரசு வெளியிட்டது. இதனையும் ஐ.நா. வரவேற்கிறது. சூட்சுமம் புரிகிறதா? இது முழுக்கவும் இன வன்முறை அல்ல; மத அடிப்படையிலும் வன்முறை என்று கூறுகிறது இலங்கை அரசு. இதனைத் தான் வரவேற்கிறது ஐ.நா. சபை.

இந்தத் தீர்மானம்தான் என்று இல்லை. 2014 ஏப்ரல் 9ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண்.25/1 இதையேதான் கூறுகிறது. இந்து, முசுலீம், கிறிஸ்தவ சமுதாய மக்களுக்கு எதிரான தாக்குதல்களில், ஐ.நா. சபை (alarmed) துணுக்குறுகிறதாம். கோயில், மசூதி, சர்ச் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைப் புலனாய்வு செய்ய வலியுறுத்துகிறது.

தீர்மானத்தின் நான்காவது அம்சம், 'இருதரப்பும்' செய்த மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றங்களைப் புலனாய்வு செய்யக் கேட்கிறது. அம்சம் 10 (b). நன்றாகத் திட்டமிட்டு தீர்மானத்தில் எங்கும் ஒருமுறையும் 'தமிழ்' என்கிற சொல் வராமல் மிகுந்த கவனத்துடன் இலங்கை அரசு சொற்படி, ஐ.நா. இதனை வரைந்தாற்போல் தெரிகிறது.

இல்லை, இல்லை. ஒரே ஒரு இடத்தில் 'தமிழ்' வருகிறது. தீர்மானத்தின் அம்சம் 5 பக்கம் 3-இல், ஒரு போராளி அமைப்பின் 'மீறல்கள்' காரணமாக எழுந்த இழப்புகளை ஈடுசெய்வது குறித்து சொல்லப்படுகிறது. அவ்வமைப்பின் பெயரிலேயே தமிழ் இருப்பதால் (The Liberation Tigers of Tamil Eelam) 'வேறு வழி இன்றி' தீர்மானத்திலும், 'தமிழ்' இடம்பெற்றுவிடுகிறது!

இனப் போர், இனப்படுகொலை என்கிற கோணம் வராதபடியேதான் ஐ.நா. சபையின் அணுகுமுறை ஆரம்பத்தில் முதலே இருந்து வந்துள்ளது. மத அடிப்படையிலும் மோதல்கள் நிகழ்ந்ததாகவும், இலங்கையின் எல்லா மக்களும் பாதிக்கப்பட்டதாகவும், ஒட்டுமொத்த நாடுமே மறு நிர்மாணம் செய்யப்பட வேண்டும் என்பதாகவும் இலங்கை அரசு, போலியான ஒரு காட்சியை உருவகப்படுத்துகிறது; இதற்கு, ஐ.நா. சபை முற்றிலுமாகத் துணை போய் இருக்கிறது என்கிற தோற்றம் ஏற்படுவதைத் தடுக்க முடியவில்லை.

அடித்தவரை சகட்டு மேனிக்குப் பாராட்டுகிறது; அடிபட்டவர்களின் அடையாளத்தைக்கூட அங்கீகரிக்க மறுக்கிறது; இன அழிவு குறித்து எல்லாம் கவலையே இல்லை என்று, அனைவருக்கும் பொதுவான, ஓர் உலக அமைப்பு செயல்பட முடியுமா...? இலங்கை அரசு உண்மையான அக்கறையுடன் செயல்படுவதாக வாழ்த்துப் பத்திரம் வாசிக்கும் ஐ.நா. சபை. 'இனம்', 'மொழி' ஆகிய மனித இனத்தின் ஆதி அடையாளங்களை, அகராதியில் இருந்தே அகற்றிவிட்டதோ...?

- 'தி இந்து', 27.3.2017



திருவல்லிக்கேணி பாரதியார் நினைவு இல்லத்தில், 25.03.17 சனிக்கிழமை மாலை , திருவண்ணாமலை அகம் வெளியீடு சார்பாக, சித்த மருத்துவர் தெ.வேலாயுதம் அவர்களின் 'வேலாயுதம் பேசுகிறேன்' (சித்த மருத்துவம் குறித்த உரையாடல்) நூல் வெளியீட்டு விழா முனைவர் பொற்கோ தலைமையில் நடைபெற்றது. நூலைப் பெற்றுக்கொண்டு முனைவர்கள் கி.தனவேல் ஐ.ஏ.எஸ், கு.அரசேந்திரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். கவிஞர்கள் ஆனைவாரி ஆனந்தன், ஜெயபாஸ்கரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர், மற்றும் அ.நாராயணன், அ. கிருபாகரன், செந்தில் கருணாகரன், கி.குணசேகரன், ஜெ.கெ.புதியவன், நா.கண்ணன் ஆகியோர் நிகழ்வில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.